பக்கங்கள்: 20
விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2048 | ஆனி 26, திங்கட்கிழமை 10.07.2017 | கதிர் 246

## அடுத்த ஜனாதிபதித் தேர்தல் 2020 இல் அல்ல; 2019 இல்!

அரசமைப்புத் திட்டத்தின்படி அடுத்த ஜனாதிபதித் தேர்தல் 2019ஆம் ஆண்டில் நடைபெற வேண்டும் என்பது நிச்சயமாகியுள்ளது என அரசமைப்பு நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

தற்போதைய அரசமைப்பின் 7ஆவது பிரிவின் 30 (1)ஆம்

பக்கம் 18

# மாகாண சபைத் தேர்தலில் களமிறங்க தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முடிவு

## கிழக்கில் ஒக்டோபரில் நடக்கும் தேர்தலில் போட்டியிடத் தீர்மானம்



யாழ்ப்பாணம், ஜூலை 10

இதுவரை காலமும் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடா மல் அதைத் தவிர்த்து வந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இப்போது அந்தத் தேர்தல்களில் களமிறங்கத் தீர்மானித்திருக்கின்றது.

தமிழ் மக்களின் உண்மையான அரசியல் அபிலாஷைகளை மாகாண சபைக்குள் முடக்கும் எத்தனத்திலிருந்து விடுவிப்பதற்காகவே இந்த முடிவு என்று அதன் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

பக்கம் 18

## சவால்களை எதிர்கொள்வதற்கு அச்சமில்லை என்கிறார் மைத்திரி



கொழும்பு, ஜூலை 10

சவால்கள் மற்றும் விமர்சனங்களை எதிர்கொள்வதற்குத் தான் அஞ்சவில்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருக்கின்றார்.

அப்படி எதிர்கொள்வதற்குப் பயமிருந்தால், 2014 நவம்பரில் முன்னைய அரசிலிருந்து துணிச்சலுடன்

பக்கம் 18

# பிரிவினைக்கே விக்கி தூபமிடுகின்றாராம்!

## யாழ்ப்பாணத்தில் திஸ்ஸ விதாரண சீற்றம்





"வடமாகாண முதலமைச்சர், மீள் நல்லிணக்கத்தை ஏற்படுத்தாது, தனிநாட்டு கோரிக்கைக்கே தூபம் இடுகின்றார். வடக்கு – தெற்கு மக்கள் இடையே பிரிவினையை இல்லாமல் செய்து, தேசிய ஐக்கியத்தைக் கட்டியெழுப்பவே நாம் முற்படுகின்றோம்"

–இவ்வாறு லங்கா சமசமாஜக் கட்சியின் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான திஸ்ஸ விதாரண யாழில் தெரிவித்தார்.

பக்கம் 18

## சர்வாதிகாரமாகச் செயற்படும் சம்பந்தன் தமிழர்களைத் தவறாக வழிநடத்துகிறார்

### சிவசக்தி ஆனந்தன் காட்டம்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் சர்வாதிகாரச் செயற்பாட்டால் தமிழ் மக்களுக்கு எந்தவித தீர்வும் கிட்டப்போவதில்லை என அவரது தலைமையின் கீழ்ச் செயற்படும் கூட்டமைப் பின்பங்காளிக்கட்சியான



பக்கம் 18

## வவுனியாவில் பல்கலை. மாணவர் பஸ் மீது தாக்குதல்

வவுனியா, ஜூலை 10

வவுனியாவில் இருந்து செட்டிகுளம் சென்ற தனியார் பேருந்து மீது

பக்கம் 18


## உள்ளூராட்சித் தேர்தல்களை வருட இறுதிக்குள் நடத்த முடிவு

இவ்வருடத்துக்குள் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை நடாத்தி, நாட்டிலுள்ள சகல உள்ளூராட்சி சபைகளையும் செயற்பாட்டுக்குக்கொண்டு வருவதற்கு அரசாங்கத் தரப்புக் கட்சிகள் உட்பட சகலகட்சிகளும் உடன்பாட்டுக்கு வந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் இடம்பெற்ற கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித்தலைவர் ஆர்.

பக்கம் 18

அளப்பு அருணாசலம்



உள்ளூராட்சித் தேர்தல் பிள்ளையார் கலியாணம் மாதிரித்தான் பாருங்கோ...!

* ஜனாதிபதி ஆட்சி முறையை நீக்குமாறு கோரக்கூடாது
* சர்வஜன வாக்கெடுப்பை வலியுறுத்தக் கூடாது

## மகாநாயக்கர்களின் எதிர்பார்ப்புகளுக்கு கூட்டமைப்பை இணங்கக் கோருகிறது சு.க.

கொழும்பு, ஜூலை 10

"மகாநாயக்கர்களின் முடிவுக்குஎதிராகத்தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏதேனும் செய்வதில் அர்த்தமில்லை. மாறாக சங்க பீடங்களின் கோரிக்கையை ஏற்றுக்கொள்வதாக கூட்டமைப்பு அறிவிக்கவேண்டும்."

– இவ்வாறு நல்லாட்சி அரசின் பங்காளிக் கட்சியானசிறிலங்காசுதந்திரக் கட்சிகோரியிருக்கின்றது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் –

சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி அரசமைப்பை மாற்ற வேண்டும் என்ற வேண்டுகோளையும் –

மகா சங்கத்தினரின் விருப்புக்கு அமைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைவிட வேண்டும்.

பக்கம் 18

## இ.போ.ச - தனியார் பேருந்துகளின் சாரதிகள் கைகலப்பு; ஒருவர் காயம்

வவுனியா, ஜூலை 10

முல்லைத்தீவிலிருந்து வவுனியாவுக்குப் பயணிகள் சேவையில் ஈடுபட்ட இலங்கைபோக்குவரத்துச் சபை சாரதி மீது அதே வழியில் சேவையில் ஈடுபட்ட தனியார் பேருந்துச் சாரதி தாக்குதல் நடத்தினார் எனவும் அதில் இ.போ.ச சாரதி படுகாயமடைந்தார்

பக்கம் 18

## 10 வருடங்கள் ஒரே பாடசாலையில் இருந்த அதிபர், ஆசிரியர்களுக்கு உடன் இடமாற்றம்

### மத்திய கல்வி அமைச்சர் அகிலவிராஜ் உறுதி

ஒரே அரச பாடசாலையில் 10 வருடங்கள் சேவைக் காலத்தை நிறைவு செய்துள்ள சகல ஆசிரியர்களும், அதிபர்களும் இன்னும் இரு மாதங்களுக்குள் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர் என மத்திய கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

தேசிய பாடசாலைக

பக்கம் 18

## வடமராட்சி கிழக்கில் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இளைஞன் பலி!



மருதங்கேணி, ஜூலை 10

வடமராட்சி கிழக்கு, மணற்காட்டுப் பகுதியில் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இளைஞர் ஒருவர் பலியானார். நேற்று பிற்பகல் 3 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் கரவெட்டி – துன்னாலையைச் சேர்ந்த யோகராசா தினேஷ் (வயது- 24) என்பவரே பலியானார்.

இந்த இளைஞர் சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்றார்

பக்கம் 18

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கிளிநொச்சியில் பொங்கல் வழிபாடுகள்





கிளிநொச்சி, ஜூலை 10

இறுதிக்கட்டப் போரின் போதும் அதற்குப் பின்னரான காலப்பகுதியிலும் காணாமல் ஆக்கப்பட்டுள்ள உறவுகளை நினைவு கூர்ந்து பொங்கல் பொங்கி சமய வழிபாடும் இடம்பெற்றுள்ளது.

அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் கிளிநொச்சிப் பிரிவால் இந்த நிகழ்வு நேற்று முன்னெடுக்கப் பட்டுள்ளது.

வலிந்து காணாமல் ஆக்கப் பட்டுள்ள உறவுகளைக் கண்டு பிடித்துத் தருமாறு கோரி வடக்கு கிழக்கு மாகாணங்களில் காணாமற் போனவர்களின் உறவினர்கள் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தநிலையில், கிளிநொச்சி கந்தசுவாமி கோயிலுக்கு முன்பாகக் காணாமல் ஆக்கப் பட்டவர்களின் உறவினர்கள் மேற்கொண்டு வரும் தொடர் கவனவீர்ப்புப் போராட்டம் நேற்று 140 ஆவது நாளை எட்டியுள்ளது.

இதனையடுத்தே அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் கிளிநொச்சி பிரிவின் ஏற்பாட்டில், கிளிநொச்சி கந்தசுவாமி கோயிலில் நேற்றைய தினம் பொங்கல் பொங்கி சமய வழிபாடுகளும் இடம் பெற்றுள்ளன.

கடந்த 4 மாதங் களுக்கு மேலாக காணாமல் ஆக்கப் பட்டவர்களின் உறவு களின் போராட்டம் தீர் வின்றித் தொடர்ந்தும் முன்னெடுக்கப் பட்டு வரும் நிலையிலேயே, நேற்று கிளிநொச்சியில் பொங்கல் வழிபாடு இடம் பெற்றுள்ளது.

அதேவேளை, முல்லைத் தீவு மாவட்ட செயலகத்துக்கு முன்பாக காணாமல் ஆக்கப் பட்டவர்களின் உறவினர்கள் மேற்கொண்டுவரும் போராட்டம் 135 ஆவது நாளாக நேற்றும் இடம்பெற்று வருகின்றது.

(எ)

# இலங்கையில் முதல் தடவையாக இருதயமாற்று சிகிச்சை வெற்றி



இலங்கையில் முதலாவது இருதயமாற்று அறுவைசிகிச்சை கண்டி வைத்தியசாலையில் கடந்த வெள்ளிக்கிழமை வெற்றிகரமாக இடம்பெற்றுள்ளது.

இருதய நோயால் பாதிக்கப் பட்ட அநுராதபுரம் பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய பெண்ணுக்கு இருதய மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வைத்திய பணிப்பாளர் சமன் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அவரது இருதயம் நூற்றுக்கு 12 வீதமே செயற்பாட்டு நிலையில் காணப்பட்டது. எனினும் மூளைச் சாவடைந்த 24 வயதுடைய இளைஞரின் இருதயம் அந்த பெண்ணுக்குப் பொருத்தப்பட்டுள்ளது.

அத்துடன், அந்த இளைஞனின் சிறுநீரகங்கள் இரண்டும் மேலும் இரண்டு நோயாளர்களுக்குப் பொருத்தப்பட்டுள்ளன.

இருதய மாற்று சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட பெண்ணும் சிறுநீரகம் பொருத்தப் பட்ட இரண்டு நோயாளர்களும் தற்போது கண்டி வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அவர்கள் ஆரோக்கியமாக உள்ளனர். வைத்தியர்கள் தொடர்ந்து அவதானத்துடன் கண்காணித்து வருகின்றனர். -என்றார்.

இந்த ‘மரதன்’ அறுவைச் சிகிச்சை இரவோடு இரவாக எட்டு மணி நேரம் நீடித்தது. நாட்டின் ஆறு பிரதான ஆஸ்பத்திரிகளைச் சேர்ந்த இருபது இருதய சிகிச்சை நிபுணர்கள், முப்பது கனிஷ்ட டாக்டர்கள் மற்றும் அறுவைச் சிகிச்சைப் பணியாளர்களைக் கொண்ட அணி ஒன்று இந்தச் சிகிச்சையை முன்னெடுத்தது. வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு ஆரம்பமான இந்த அறுவைச் சிகிச்சை அதிகாலை 3 மணிக்கு வெற்றிகரமாகப் பூர்த்தியடைந்தது. (எ)

# ஆள்களற்ற வீடுகளால் ஆபத்து கல்லாறு கிராம மக்கள் கவலை



கிளிநொச்சி, கல்லாறு குடியேற்ற கிராமத்தில் நூறுக்கும் மேற்பட்ட வீடுகளில் மக்கள் குடியிருக்காமையால் தாங்கள் பெரும் ஆபத்துக் களை எதிர்நோக்க வேண்டியுள்ளனர் எனக் கல்லாறு கிராம மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமியின் பின் கல்லாறு பகுதியில் 140 குடும்பங்கள் மீளக்குடியேற்றப்பட்டன. பின்னர் போர் முடிவடைந்த பின்னர் மேலும் 100 குடும்பங்கள் மீளக் குடியேறி உள்ளன. மொத்தமாக அந்தப் பகுதியில் 240 குடும்பங்கள் வசித்து வருகின்றன.

அந்த மக்களுக்கு குடிதண்ணீர் இன்மை, போக்குவரத்துப் பிரச்சினைகள், தொழில் இன்மை ஆகியன வற்றைக் காரணம் காட்டி 100 இற்கும் மேற்பட்ட மக்கள் கல்லாறுப்பகுதியில் இருந்துவெளியேறி உள்ளனர்.

இவ்வாறு வீடுகளில் மக்கள் வெளியேறியமையால் அந்த வீடுகளால் பல்வேறு ஆபத்துகள் ஏற்படுகின்றன என்று பிரதேச மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

குறிப்பாக மர்மநபர்களின் நடமாட்டம், போதைப் பொருள் பாவனை போன்ற பல பிரச்சினைகள் இடம் பெறுகின்றன என்று மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேவேளை, கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவில் காணிகள் அற்ற நிலையில் 936 குடும்பங்கள் உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (எ-81)

# தமிழக அரசின் எதிர்ப்பை நிராகரித்தது இலங்கை

## கடற்றொழில் அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 10

இலங்கைக் கடற்பரப்பில் அடிமடி வலையைப் பயன்படுத்தி மீன்பிடிக்கும் முறையைத் தடைசெய்யும் நாடாளுமன்றத் தீர்மானத்துக்கு, தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ள எதிர்ப்பை, இலங்கை அரசு நிராகரித்துள்ளது.

இதுதொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள கடற்றொழில் நீரியல் வளங்கள் அமைச்சர் மஹிந்த அமரவீர-

‘இலங்கையின் கடற்றொழில் துறையின் நலன்களைக் கருத்தில் கொண்டே புதிய சட்டங்கள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

நாங்கள் எமது நலன்களையே பார்க்கவேண்டியுள்ளது. ஏனைய நாடுகளின் மீனவர்களின் கரிசனைகளைக் கவனத்தில் கொள்ளவேண்டியதில்லை.

புதிய சட்டங்கள் விரைவில் நடைமுறைப்படுத்தப்படும்’ என்று தெரிவித்துள்ளார். (எ)

## நீரிழிவு நோயாளர் எண்ணிக்கை அதிகரிப்பு

*நீரிழிவு நோயாளர்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டுடன் ஒப்பீட்டளவில் இவ்வருடம் இரண்டு மடங்காக அதிகரித்துள்ளதாக சுகாதார அறிக்கை தெரிவிக்கின்றது.*

*சுகாதார அமைச்சின் போஷாக்கு இணைப்புப் பிரிவின் புள்ளி விவரங்களின் படி நாட்டு சனத்தொகையில் 25 சதவீத மானோர் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.*

*இதற்குக் காரணம் சீனிக்கு அடிமையானமையே என்றும் முறையான நடவடிக்கை மேற்கொண்டால் இதிலிருந்து மீள முடியும் என்றும் அந்தப் பிரிவு மேலும் தெரிவித் துள்ளது.* (எ)

## மஞ்சள் கடவையில் பொலிஸை மோதிய மோ. சைக்கிள்

மட்டக்களப்பு, ஜூலை 10

மட்டக்களப்பு, கல்லடி பிரதான வீதியில் மஞ்சள் கடவை ஒன்றில் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போக்குவரத்து பொலிஸார் ஒருவர் மீது மோட்டார் சைக்கிள் மோதியதில் அவர் காயமடைந்தார். அதனையடுத்து காத்தான்குடி ஆதார வைத்திய சாலையில் அவர் சேர்க்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளை மோத வைத்து விபத்தை ஏற்படுத்திய குற்றத்திற்காகக் காத்தான்குடியைச் சேர்ந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (உ)

### மன்னார் கரிசல் கிராமச் சர்ச்சை:

# பொலிஸார் கைது செய்து கொண்டு சென்றவரை அமைச்சரின் வாகனம் மீட்டுச் சென்றதாம்!

### சீறுகின்றார் சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி.



மன்னார் கரிசல் கிராமத்தில் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் நீதிமன்றப் பதிவாளர் முன்னிலையில் நாட்டப்பட்ட எல்லை வேலிகளை பொலிஸாரின் முன்னிலையிலேயே அடித்து நொறுக்கி சேதப்படுத்தியவரை பொலிஸார் கைது செய்து பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர். அந்த நிலையில் அமைச்சரின் வாகனம் பொலிஸ் நிலையம் சென்று அந்தச் சந்தேக நபரை ஏற்றிச் சென்றதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமற்றஉறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் குற்றஞ் சாட்டுகின்றார்.

இந்த விடயம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் விவரம் தெரிவிக்கையில் –

மன்னார் கரிசல் கிராமத்தில் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் நீதிமன்றப் பதிவாளர் முன்னிலையில் நாட்டப்பட்ட எல்லை வேலிகளை பொலிஸாரின் முன்னிலையிலேயே அடித்து நொறுக்கி சேதப்படுத்தியவரை பொலிஸார் கைது செய்து பொலிஸ் நிலையம் கொண்டு சென்ற நிலையில் அமைச்சரின் வாகனம் பொலிஸ் நிலையம் சென்று சந்தேக நபரை ஏற்றிச் சென்றது.

இதன்போது சட்டத்தைக் காக்கா வேண்டிய பொலிஸாரோ அமைச்சருக்குசேவகம்செய்தனர்.

இவ்வாறு பொலிஸார் சட்டத்தைப் பேணாது ஒரு தலைப்பட்சமாக அனைத்து விடயங்களிலும் நடந்து கொண்டமையே இன்று இவ்விடயம் பூதாகரமாக உருவெடுத்து நிற்கக் காரணம்.

உதாரணமாக நீதிமன்றப் பதிவாளர் பொலிஸார் முன்னிலையில் பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்டன. அதன் பின்னர் பதிவாளரும் ஆலயத்தரப்பும் வெளியேறிய நிலையில் அங்கே பொலிஸாரின் பிரசன்னம் இருந்தது. அந்தப் பொலிஸாரின் கண் முன்பாகவே வேலிகள் நொருக்கப்பட்டன. அவ்வாறு இடம்பெற்ற வேளையில் பொலி ஸார் தடுத்திருக்க முடியும் அல்லது அக் குற்றச் செயலை புரிந்தவர்களை கைது செய்யதிருக்க முடியும். மாறாக பொலிஸார் படம் பிடிக்கின்றனர். இதற்கும் அப்பால் இரவு சந்தேக நபர் ஒருவரை கைது செய்துள்ளனர் எனத் தெரிவித்தனர். அவ்வாறு கைது செய்யப்பட்டவர் பொலிஸ் நிலையம் கொண்டு வரப்பட்ட சிறிது நேரத்திலேயே அமைச்சரின் வாக னம் பொலிஸ் நிலையம் சென்றது. மறுகணமே சந்தேக நபர் அமைச்சரின் வாகனத்தில் ஏற்றி அனுப்பி வைக்கப்படுகின்றார்.

இது தொடர்பில் கேட்டால் அவரை அடைத்து வைத்திருந்தால் பிரதேசத்தில் குழப்பம் ஏற்பட்டுவிடும் என அமைச்சர் தெரிவித்தார் என்று பொறுப்பற்ற விதத்திலே பொலிஸார் பதிலளிக் கின்றனர். சட்டத்தை மீறியவரை வெளியில் விடுவதனால் சட்டத்தை மதித்தவர்கள் பாதிப்படைவதனைக் கருத்தில் கொள்ளாது பராபட்சமாக ஒரு தரப்பிற்காக செயற்பட்ட பொலிஸார் மீதும் சந்தேகிக்க வேண்டியுள்ளது.

இதன் காரணமாகவே உடனடியாகப் பிரதிப் பொலிஸ் மா அதிபரின் ஊடாக பொலிஸ் மா அதிபரின் கவனத்திற்கு இவ்விடயத்தைக் கொண்டு சென்றோம். குற்றமிழைத்த அனைவரையும் சட்டத்தின் முன் நிறுத்துவார்கள் எனப் பொலிஸார் வாக்குறுதியளித்துள்ளனர். அந்த வாக்குறுதியின் செயற்பாட்டிற்காக காத்து மக்கள் பொறுமை பேணுகின்றனர் – என்றார்.

## மாகாண சபை...

*(பதினெட்டாம் பக்கத் தொடர்ச்சி)*

*'நாங்கள் போட்டியிடாது விட்டால் அரச ஆதரவு பெற்ற டக்ளஸ் தேவானந்தா போன்றோர் மாகாண சபையைக் கைப்பற்ற அது வாய்ப்பாகிவிடும். அவர் வந்தால் மாகாணசபை ஊடாக ஏதோ பெரிதாகச் செய்யமுடியும் என ஒரு மாயையை வெளி உலகத்திற்கு இந்த அரசாங்கம் காட்டிவிடும். எனவே, நாம் போட்டியிடவேண்டும்'* – எனக் கூட்டமைப்பினர் கூறினார்கள்.

அப்போது நாம் *'நீங்கள் கூறுவதுதான் நிலைமை எனின், மாகாண சபை முறைமையை ஏற்கமாட்டோம் எனும் வாசகத்தையாவது உங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்வையுங்கள். அப்படி முன்வைத்தால் உங்களை ஆதரித்து நாமும் பிரசாரம் செய்வோம்'* – என்றோம்.

ஆனால், அவர்கள் அதையும் ஏற்கவில்லை.

அப்போது என்ன நோக்கத்திற்காக தாங்கள் போட்டியிடுகின்றார்கள் என அவர்கள் கூறினார்களோ அதிலிருந்து இப்போது பின்வாங்கிவிட்டார்கள் .

தற்போது அவர்கள் அரசுடன் இணைந்து மாகாண சபையால் எல்லாம் செய்ய முடியும் என்ற ஒரு மாயையை உருவாக்குகிறார்கள். ஆனால், முதல்வர் விக்னேஸ்வரனால் தான் அவற்றைச் செய்ய முடியவில்லை என்று குறை கூறவும் முற்படுகின்றார்கள்.

13 ஆவது திருத்தத்தை ஏற்க முடியாது, மாகாண சபைக்கு அதிகாரம் இல்லை என்றெல்லாம் முதல்வர் விக்னேஸ்வரன் உண்மையைக் கூற முற்படுகின்றமையால் அதை மறைக்க மாகாண சபை முறைமையில் ஏதோ அதிகம் இருப்பதுபோலவும் விக்னேஸ்வரனிடம்தான் அதனைச் செயற்படுத்திக் காட்டும் திறமை இல்லை என்றும் பிரசாரம் செய்கிறார்கள்.

மாகாணசபை விடயத்தில் அதன் செயலின்மை பற்றிய உண்மைக் குரல் தனித்து முதல்வர் விக்னேஸ்வரனால் மட்டும் தான் எழுப்பப்படுகின்றது.

அந்தக் குரலை வலுப்படுத்தி உண்மையை அம்பலப்படுத்த வேண்டும் என்றால் நாங்களும் களமிறங்கவேண்டிய ஒரு தேவை இருக்கிறது. எனவே, கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடப்போகின்றோம். – என்றார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

அதேவேளை, தனித்துப் போட்டியிடுவதா அல்லது கூட்டணி ஒன்றை அமைத்துப் போட்டியிடுவதா என்பது தொடர்பில் இன்னமும் முடிவாகவில்லை எனத் தெரிவித்த கட்சியின் செயலாளர் கஜேந்திரன், அது தொடர்பில் பேச்சுகள் இடம்பெற்றுவருகின்றன என்றும் குறிப்பிட்டுள்ளார். (உ)

## நல்லாட்சி பஸ்ஸில் இருந்து விரும்பாதோர் இறங்கலாம்!

### ஐ.தே.கட்சி எம்.பி. முஜிபுர் கூறுகிறார்

புதிய அரசமைப்புக்கு எதிராகச் செயற்படுபவர்கள் அரசாங்கத்தில் இருந்து வெளியேற முடியும் என கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசிய கட்சித் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கருத்து வெளியிடுகையில் –

புதிய அரசமைப்பு ஒன்றைக் கொண்டுவருவதற்கு மக்கள் ஆணை கிடைக்கப்பெற்றுள்ளது. அதற்கு அமைவாக ஐக்கிய தேசிய கட்சி செயற்படுகிறது. அதேவேளை புதிய அரசமைப்புக்கான முயற்சிகளை விமர்சனம் செய்யும் சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் நல்லாட்சி பஸ்ஸில் இருந்து இறங்கிச் செல்ல முடியும். – என்றார். (உ)

## 'பெண் நோயியலும் மகப்பேறும்' ரிசிரி மண்டபத்தில் கருத்துரை

யாழ்ப்பாணம், ஜூலை 10

நல்லூர் றோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில் மாதாந்தம் நடத்தப்பட்டு வரும் விசேட அதிதி உரையில் நாளை மறுதினம் புதன்கிழமை 'பெண் நோயியலும் மகப்பேற்றுமருத்துவமும்'என்ற தொனிப்பொருளில்உரை இடம் பெறவுள்ளது.

யாழ். நாவலர் வீதியில் உள்ள தியாகி அறக்கொடை (ரிசிரி) மண்டபத்தில் புதன்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் மகப் பேற்று மருத்துவ நிபுணர் கலந்து கொண்டு கருத்துரையாற்றுவார்.

மட்டுப்படுத்தப்டோர் மட்டுமே அனுமதிக்கப்படுவர் என்பதால் தேவையுடையோர் 077-210 5375 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு முற்பதிவு செய்து கருத்துரையில் பங்கெடுக்குமாறு ஏற்பாட்டுக் குழு கேட்டுக் கொண்டுள்ளது. (ம)

## சர்வாதிகார...

(பதினெட்டாம் பக்கத் தொடர்ச்சி)

னர் எனவும் சிவசக்தி ஆனந்தன் கூறினார்.

மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் "தடுமாறாத தமிழர்களுக்கு தலைமை ஏற்பது யார்"? எனும் தொனிப்பொருளில் யாழ். கலைத்தூது கலையகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் உரையாற்றும்போதே அவர் இந்த விடயங்களைத் தெரிவித்தார்.

அந்த உரையில் இரா.சம்பந்தன் மீது அவர் பகிரங்கமாக பல்வேறு குற்றச்சாட்டுக்களை அடுக்கினார். தமிழரசுக் கட்சியைப் பலப்படுத்துவதற்காக சம்பந்தன் பச்சைத் துரோகத்தில் ஈடுபடுகின்றார் எனவும் அவர் கூறினார்.

அங்கு அவர் உரையாற்றுகையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

16 வருடங்களாக 4 சுவருக்குள் பல விடயங்களைப் பேசி இணக்கப்பாட்டிற்கு வர முடியாத நிலையில் இன்று மாற்றுத் தலைமை ஒன்று வேண்டும் என்று பேசிக்கொண்டிருக்கின்றோம். இந்த முயற்சி 3 வருடங்களுக்கு மேலாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதற்கு முன்னர் மன்னார் ஆயர் தலைமையில் இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

கூட்டமைப்பிற்குள் ஐக்கியத்தை ஏற்படுத்த வேண்டும், கூட்டமைப்பிக்கு ஒரு யாப்பு உருவாக்கப்பட வேண்டும், கட்டமைப்புக்கள் மற்றும் கொள்கைகள் சரியான வகையில் அமைய வேண்டும் எனப் பல விடயங்கள் பேசியிருந்தோம்.

ஆனால், இறுதியில் தமிழரசுக் கட்சியின் தலைவர் இரா.சம்பந்தனும், நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் இணைந்து கலந்துரையாடலைக் குழப்பினார்கள்.

தென்னாபிரிக்க தேசிய காங்கிரஸ் போன்று சகல அ ரசியல் கட்சிகள் மற்றும் பொது அமைப்புக்களை இணைத்து தமிழ்த் தேசிய சபை ஒன்றை உருவாக்குவோம் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது. தமிழ்த்தேசியசபைக்குள்தம்மை கட்டிவைக்கப் பார்க்கின்றார்கள் என தமிழரசு கட்சியினர் பயந்து விட்டார்கள்.

கடந்த 16 வருடங்களாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள்பலவிடயங்களைப்பேசியிருக்கின்றோம். உண்மையில் இரா. சம்பந்தனின் நிழலில் இருந்தோம். கடந்த மாதம் நடைபெற்ற கூட்டத்தின்போது, எமக்கு சம்பந்தன் கடும் எச்சரிக்கை ஒன்றை விடுத்திருந்தார்.

மக்கள் போராட்டங்களை முன்னெடுக்கின்றார்கள். மக்களிடம் இருந்து அந்நியப்படாமல் இருப்பதற்காக விரைவாக உரியநடவடிக்கைமேற்கொள்ள வேண்டுமென்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கூறியிருந்தோம்.

மஹிந்தராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் மக்கள் போராட்டங்களை முன்னெடுத்தார்களா? நாடளுமன்றத்தில் உணர்ச்சி வசப்பட்டு நீங்கள் பேசியுள்ளீர்களா எனக் கடுமையாக எச்சரிக்கை விடுத்திருந்தார் சம்பந்தர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் அழுத்தம் கொடுக்ககூடாது, காணாமல் போனோர்கள் மற்றும் காணி விடுவிப்பு குறித்து மக்கள் போராட்டங்களை மேற்கொள்ளக்கூடாது, அப்படி இருந்தால்தான் நல்லாட்சி அரசு எமக்குத் தீர்வைத் தரும் என்று கூட்டமைப்பிற்குக் கூறி வருகின்றார்.

சம்பந்தன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பயன்படுத்தி தமிழரசுக் கட்சியை வளர்க்கலாம் என்று யோசித்தாரே தவிர தமிழ் மக்களின் பிரச்சினைகளை இராஜதந்திர ரீதியாக அணுக அவருக்குத் தெரியவில்லை.

கட்சியைப் பிழையாக வழி நடத்துகின்றீர்கள், மக்களை பிழையாக வழி நடத்துகின்றீர்கள் எனச் சுட்டிக்காட்டினோம். நீங்கள் எதைச் சொன்னாலும், அவை தொடர்பாக சம்பந்தனே முடிவெடுப்பான் என கூறுவார். இப்படியான சர்வாதிகார தலைமையின் கீழே 16 வருடங்கள் இருந்தோம்.

80 வயது வரை நாடாளுமன்றக் கதிரையில் இருந்து, அந்த தண்ணீரை குடித்தால் மட்டுமே சீவன் போகும் என்ற உணர்வுடன் நாங்கள் இல்லை. போராட்டத்தை முன்னெடுத்த நாம் உயிரிழந்த மக்களுக்கான தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம்.

எமது இனம் என்னவானாலும் பரவாயில்லை, எமது கட்சியை எப்படி பலப்படுத்துவது என்ற பச்சைச் சுயநலத்தில் தமிழரசு கட்சியும், சம்பந்தனும் செயற்படுகின்றார்கள். சம்பந்தன் எந்த நேரத்தில் என்ன முடிவு எடுப்பார் என்றும் தெரியாது. முதலமைச்சர் விக்னேஸ்வரன் என்ன செய்வார் என்றும் தெரியாத நிலைமை. எனவே, ஒட்டு மொத்த தமிழ் மக்களின் தலைவிதியை தனி மனிதருக்குள் வைத்திருக்கமுடியாது. எனவே கூட்டுத் தலைமை அவசியம்.

மாற்றுத் தலைமை இல்லாவிடின் மக்களின் நிலைமை மோசமடைந்து அவர்கள் கட்சி மாறக் கூடிய நிலைமை ஏற்படலாம். மக்கள் தமது பிரச்சினைக்குரிய வழி களைத் தேடுகின்றார்கள். கூட் டுத் தலைமைக்கான அரசமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டும். அதன்படி, தனியான செயற்பாடுகளில் இறங்கும் உறுப்பினருக்கு எதிராக சட்ட ரீதியான நடடிக்கை எடுத்தல் அவசியம். – என்றார். (ம)

காலைக்கதிர் Kalaikkathir



# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## யுத்தம் முடிவு; இனவாதம் நீடிப்பு

நாட்டில் யுத்த மோதல் முடிவடைந்து விட்டது; ஆனால் இனவாத மோதலோ தொடர்கின்றது; நீடிக்கின்றது. - இவ்வாறு ஆதங்கம் தெரிவித்திருக்கின்றார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

"இந்த இனவாத மோதலை முடிவுக்கு கொண்டு வருவதற்காகவே அரசியல் தீர்வு அவசியப்படுகின்றது" - என்ற உண்மையையும் அவர் எடுத்தியம்பியிருக்கின்றார்.

மன்னாரில் கடந்த வெள்ளியன்று இடம்பெற்ற ஒரு பொது நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு விசனம் தெரிவித்தார்.

யுத்தத்தை வெற்றிகரமாக முடித்து விட்டோம் என்று மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிப் பீடம் மார்தட்டியபோதே ஒரு விடயம் தமிழர் தரப்பால் திரும்பத் திரும்பச் சுட்டிக்காட்டப்பட்டது.

யுத்தத்தில் இலங்கைப் படைகள் வென்றன என்பது உண்மைதான். ஆனால் எண்ணிக்கையில் சிறுபான்மையினரும் இந்தத் தேசத்தின் பிரதான தேசிய இனங்களில் ஒரு தரப்பினருமாகிய தமிழர்களின் மனங்களை அரசினாலோ, அரசுப் படைகளினாலோ அந்த யுத்தத்தின் மூலம் வெல்லவே முடியவில்லை என்பதனைத் தமிழர் தரப்பு சுட்டிக் காட்டியே வந்தது.

துப்பாக்கிச் சத்தங்கள் ஓய்ந்தன என்பது உண்மைதான்; பீரங்கி முழக்கங்கள் அடங்கிப் போயின என்பது நிஜம்தான்; வேட்டுகள் ஓய்ந்தன என்பதும் வாஸ்தவம்தான்.

அதனால், பிறந்த நிசப்பதம் உண்மையான அமைதி அல்ல; நிஜமான சமாதானம் அல்ல; அது சத்தம் அடங்கிய வெறும் நிசப்தம் மட்டுமே. அமைதியும், சமாதானமும் யுத்தத்தின் வெற்றியில் பிறக்கவில்லை. மாறாகக் குரோதமும் வெறுப்பும் காழ்ப்புணர்வும் தான் எஞ்சின.

யுத்தத்தின் வெற்றியில் உற்பவித்தவை அடக்குமுறையும், எதேச்சதிகாரமும்தான். யுத்த வெற்றி அவற்றுக்குப் புத்துயிர்ப்பு ஏற்படுத்தி தென்னிலங்கை பௌத்த, சிங்கள மக்கள் மத்தியில் மேலாதிக்கமாக அவற்றை அவிழ்த்து விட்டிருக்கின்றது என்பதை சர்வதேச சமூகமும் சுயாதீன ஊடகவியலாளர்களும் சுட்டிக்காட்டி வந்தனர்.

அதனைத்தான் இப்போது வேறு வார்த்தைகளில் 'யுத்த மோதல் முடிவடைந்தது; இனவாத மோதல் முடிவடையாமல் நீடிக்கின்றது' - என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விசனத்துடன் கூறுகின்றார்!

யுத்தத்தின் வெற்றி என்பது நோயின் சில குணங்குறியைக் கட்டுப்படுத்தியமை போன்றது. அது நோயைக் கட்டுப்படுத்தியது ஆகாது; நோயின் காரணியை - மூலத்தை - அடங்கியது ஆகாது.

இலங்கையின் இனப்பிரச்சினையால் வெடித்ததே இப்போர். அந்த இனப்பிரச்சினையின் - மூலச் சிக்கலின் - காரணிகளை தேடி அடையாளம் கண்டு, அவற்றைத் தீர்த்தாலன்றி, இந்த விவகாரத்தில் நற்பெறுபேறு கிடைப்பது சாத்தியமேயற்றது.

இலங்கை இங்கிலாந்திடம் இருந்து 1948 இல் சுதந்திரம் பெற்றதாக அறிவிக்கப்பட்ட காலம் தொடக்கம் கூர்மையடைந்து தீவிரம் பெற்றது இந்த இனப்பிரச்சினை.

சுதந்திர இலங்கையின் அரசியல் ஏற்பாடு, இந்தத் தீவில் எண்ணிக்கையில் பெரும்பான்மையினரான சிங்களவர்களிடம் அதிகாரத்தை ஏகபோகமாக ஒப்படைத்தமையால் எழுந்ததே இந்தப் பிரச்சினை. அந்த அதிகார வலு - வலிமை - எண்ணிக்கையில் சிறுபான்மையினரான - மற்றொரு தேசிய இனமான- தமிழர்கள் மீது மேலாண்மை கொண்டு, அரச அடக்குமுறையாகக் குரூரமான வன்முறை வடிவம் எடுத்தது. மாறி மாறி ஆட்சிக்கு வந்த சகல சிங்கள அரசுகளும் இந்த ஒடுக்குமுறைக் கொள்கையைத் தப்பாது கடைப்பிடித்தன.

தமிழினத்தின் - தமிழ்த் தேசத்தின் - வாழ்விற்கு ஆதாரமான அத்தியாவசிய அடித்தளங்களைப் படிப்படியாக நாசமாக்கி, ஒரு தேசிய இனக் கட்டமைப்பாகத் தமிழர்கள் விளங்குகின்றமைக்குக் காரணமான ஒவ்வோர் அம்சத்தையும் அந்தந்த மட்டங்களில் தேடி அழித்து, தமிழின ஒழிப்புத் திட்டமாகக் காலத்துக்கு காலம் அந்த நோக்கம் அரங்கேற்றப்பட்டது.

இத்தகைய பல்பரிமாண அரச ஒடுக்குமுறையின் ஒட்டு மொத்தப் பாதிப்பின் பெறுபேறே யுத்தம்.

அரச ஒடுக்குமுறையே தமிழ் மக்களிடையே தீவிரப் போக்கையும் போராட்ட உணர்வையும் வலுப்படுத்தி, ஆயுதம் தரித்த எதிர்ப்பு இயக்கங்கள் தோற்றம் கொள்வதற்கான புறநிலையையும் உருவாக்கியது.

அந்த ஆயுதம் தரித்த எதிர்ப்பு இயக்கங்கள் மீதான போராட்டத்தில்தான் சிங்கள தேசம் வென்றிருக்கின்றது. தமிழர் தேசத்தின் மனதை அல்ல.

ஆயுத மோதல் முடிவுக்கு வந்தாலும் இனவாத மோதல் நீடிப்பதற்கு இதுதான் காரணம்.

நீடித்துப் புரையோடியிருக்கும் இனப் பிரச்சினைக்கு நீதி, நியாயம், சமத்துவம், அடுத்தவரையும் மதித்தல், எல்லோருக்கும் கௌரவம் மிக்க வாழ்வு, ஒவ்வோர் இனமும் தனது தனித்துவத்தையும், தாயகத்தையும், விழுமியங்களையும், பண்பியல்புகளையும், இருப்பையும் தக்கவைத்துப் பாதுகாத்துப் பேணும் உறுதிப்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு தீர்வை முன்வைத்தால் மட்டுமே இனவாத மோதல்கள் இந்தத் தீவில் முடிவுக்கு வரும்.

இல்லையேல் யுத்தம் முடிந்தும் இனமோதல் ஏதோ ஒரு வேறு வடிவத்தில் நீடிக்கவே செய்யும்.

# காணாமற்போதல் குறித்த சட்டமூலத்தை எதிர்ப்போர் இரட்டை அரசியல்வாதிகளே!



## இவ்வாறு கூறுகிறார் நிதி அமைச்சர் மங்கள

இரட்டை அரசியல் நிலைப்பாட்டில் உள்ள அரசியல்வாதிகளே காணாமற் போகும் சம்பவங்களைத் தடுத்து நிறுத்துவதற்கு எதிர்ப்பு வெளியிடுகின்றனர் என்று நிதி அமைச்சரும் முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

காணாமலாக்கப்படுவதைத் தடுக்கும் சட்டம் தொடர்பில் தவறான தகவல்களைச் சமூகத்தின் மத்தியில் பரப்புவதற்கு அவர்கள் முயற்சிக்கின்றனர் என்று நேற்றுத் தாம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

காணாமற் போவதில் இருந்து அனைவரையும் பாதுகாப்பதற்கான சர்வதேச சாசனத்தில் 2015 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி இலங்கை கையெழுத்திட்டது. இதனைச் சட்டமாக்க கடந்த ஆண்டு மே மாதம் 25 ஆம் திகதி அரசு அனுமதி வழங்கியது.

2017 ஆம் ஆண்டு மே மாதம் 9 ஆம் திகதி இது தொடர்பான சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு, நாடாளுமன்ற அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த சட்ட மூலம் மீதான விவாதம் கடந்த 5 ஆம் திகதி நடைபெற இருந்தபோதிலும், அன்றைய தினம் லஞ்சம் தொடர்பான சட்ட திருத்தம் மீதான விவாதம் நடைபெற்றிருந்தது.

எதிர்வரும் நாள்களில் மிகவும் முக்கியமான காணாமல் ஆக்கப்படுவதில் இருந்து அனைவரையும் பாதுகாக்கும் சட்டமூலத்தை விவாதத்துக்கு எடுத்துக் கொள்வதற்கு அதிக எண் ணிக்கையிலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர்.

இந்தச் சட்டமூலம், நியாயமானதும், சுதந்திரமானதும் சிவில் சமூகத்திலுள்ள ஒவ்வொரு பிரஜைகளினதும் மனித உரிமை.

நிர்ப்பந்திக்கப்பட்ட கடத்தல், காணாமற் போதல் மற்றும் சிறைவைப்பில் இருந்து இலங்கையில் பிறக்கும் அனைத்துப் பிரஜைகளினதும் சுதந்திரமான வாழ்க்கையை உருவாக்குவதே இந்தச் சட்டத் தின் அடிப்படை நோக்கம்.

இந்தச் சட்டமூலம் ஊடாக வெள்ளை வான் கலாசாரம், அரசின் ஆதரவுடன் மேற்கொள்ளப்படும் எதிரிகளைக் காணாமற் போகச் செய்தல், கடத்திச் செல்லும் கலாசாரத்தைத் தடுத்து நிறுத்துதல் ஆகியவற்றின் மூலம் நாட்டு மக்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்.

எனினும், அன்று வெள்ளை வான் கலாசாரத்தை நாட்டுக்கு அறிமுகப்படுத்திய அரசியல்வாதிகள் வழமை போன்று நாட்டு மக்களைத் தவறாக வழி நடத்த முயல்கின்றனர்.- என்றார். (எ)

# உணவக உரிமையாளருக்கு விழிப்புணர்வுக் கருத்தரங்கு

வவுனியா, ஜூலை 10

வவுனியா மாவட்டத்தில் உணவுப் பொருள்களைக் கையாளுதல் உணவுக் கழிவுகளை வெளியேற்றல் மற்றும் உணவுத் தரத்தை முகாமை செய்தல் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஓவியா ஹோட்டலில் இடம்பெறவுள்ளது.

வடமாகாண சுகாதார அமைச்சின் ஏற்பாட்டில் வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை நடத்தவுள்ள இந்தக் கருத்தரங்கு, இன்றும் நாளையும் ஹோட்டல் மற்றும் உணவக உரிமையாளர்களுக்கும் எதிர்வரும் 13 ஆம் திகதி மில் ஆலைகள் அரிசிமா தயாரிப்பு உரிமையாளர்களுக்கும் 14 ஆம் திகதி பேக்கரி, ஜாம், பழரசம் மற்றும் ஐஸ்கிறீம் தயாரிப்பாளர்களுக்கும் மாலை 1.30 மணி தொடக்கம் 5 மணி வரை இடம்பெறவுள்ளது. (எ-100)

# அரசியலில் பெண்களின் பங்களிப்பு; 179 ஆவது இடத்தில் இலங்கை

கொழும்பு, ஜூலை 10

அரசியலில் பெண்களின் பங்களிப்பு தொடர்பான சர்வதேசப் பட்டியலில் இலங்கை 179 ஆவது இடத்தில் உள்ளது.

பெண்களின் அரசியல் பங்களிப்பு தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் மகளிர் ஸ்தாபனத்தின் இவ்வருட அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி வரையான தரவுகளை அடிப்படையாகக் கொண்டு இந்தப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

190 நாடுகளைக் கொண்ட இந்தப் பட்டியலில், இலங்கை 179 ஆவது இடத்தில் உள்ளது.

இலங்கையில் 225 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் 13 பெண் உறுப்பினர்கள் மாத்திரமே உள்ளனர்.

இது மொத்த சதவீதத்தில் 5.8 வீதமாகப் பதிவாகியுள்ளது.

இதேவேளை, அமைச்சர்களாகப் பதவி வகிக்கும் பெண்கள் தொடர்பான பட்டியலில், இலங்கை 164 ஆவது இடத்தில் உள்ளது.

47 அமைச்சர்களைக் கொண்ட இலங்கையில், 2 பெண் அமைச்சர்கள் மட்டுமே உள்ளனர். இது மொத்த சதவீதத்தில் 4.3 வீதம் என்று ஐ.நா.அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் அரசிய லில் பெண்களுக்கு 25 சத வீத பிரதிநிதித்துவத்தை வழங்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

இதேவேளை, நாடாளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் தொடர்பான பட்டியலில், ருவண்டா முதலாம் இடத்தில் உள்ளது.

அந்த நாட்டின் நாடாளுமன்றத்தில் உள்ள 80 பிரதிநிதிகளுள் 49 பிரதிநிதிகள் பெண்களாவர். மொத்த சதவீதத்தில் 61.3 என்ற வீதத்தை இது பதிவு செய்துள்ளது. (எ)

குடிப் பழக்கத்தினை தவிர்த்திட ...

- நல்ல நண்பர்கள் வட்டத்தை ஏற்படுத்திடுவோம்.
- நல்ல பொழுது போக்குகளை உருவாக்கிடுவோம்.
- நல்ல நூல்களுடன் பரீட்சையும் ஏற்படுத்திடுவோம்.
- உற்சாகம் பெற்றிட உடற்பயிற்சியில் ஈடுபடுவோம்.
- ஆன்மீக நிகழ்வுகளில் ஆர்வத்துடன் பங்கேற்போம்.
- வயதுக்கு மீறிய நட்புக் களை தவிர்த்திடுவோம்.



தகவல்:- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை. யாழ்.மாநகரசபை.

## நாளை

11.07.2017
செவ்வாய்க்கிழமை

நட்சத்திரம் : திருவோணம் மு.இ.9.16 வரை
திதி : துதியை பி.ப. 12.37 வரை

சுபநேரம் : 10.29 – 11.59 வரை
இராகுகாலம் : 2.59 – 4.29 வரை

## மன்னாரில் போரால் பாதிக்கப்பட்ட மாணவருக்கு கற்றல் சாதனங்கள்





மன்னார், ஜூலை 10

மன்னார் மாவட்டத்தில் போரால் பாதிக்கப்பட்ட மாண வர்களின் கல்வி வளர்ச்சி யைமேம்படுத்தும்வகையில், அவர்களுக்கான பாடசாலை கற்றல் உபகரணங்கள் வழங் கப்பட்டுள்ளன.

மன்னார் நகர சபையின் புதிய அலுவலகத்தின் பிர தான மண்டபத்தில் நேற்று முன்தினம் மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன் றியத் தலைவர் வி.எஸ்.சிவ கரன் தலைமையில் மேற்படி நிகழ்வு இடம்பெற்றது.

இந்தநிகழ்வில்பிரதமவிருந் தினராக மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி நந்தினி ஸ்ரான்லி டி மேல் கலந்கொண்டு கற்றல் உபகர ணங்களை வழங்கி வைத்தார்.

இதன்போது தெரிவு செய் யப்பட்ட மாணவர்கள் 50 பேருக்கு பெறுமதி வாய்ந்த கற்றல் உபகரணங்கள் வழங் கப்பட்டன. அத்துடன் அவர்க ளுக்கான கற்றல் வழிகாட்டல் ஆலோசனைகளும் வழங்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வன்னேரிக்குளத்தைப் பாதுகாக்குமாறு கோரிக்கை விடுக்கும் பிரதேச மக்கள்



கிளிநொச்சி, ஜூலை 10

கிளிநொச்சியில் 64 வருடங் களுக்கு மேற்பட்ட பழைமை யான வரலாற்றைக் கொண்ட வன்னேரிக் குளமும் அதனை யண்டிய பகுதிகளும் உவரா கின்றமையால் மக்கள் குடி பெயர்ந்து செல்லும் கிராமங் களாக மாறி வருகின்றன. எனவே, அவற்றைப் பாதுகாப் பதற்கு அதிக நிதியை ஒதுக்கி நிலை பேறான அபிவிருத்தி களை முன்னெடுக்குமாறு கிராமமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கரைச்சிப்பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள 42 கிராம அலுவலர் பிரிவுகளில் ஒன் றாகக்காணப்படும் வன்னேரிக் குளத்தில் 495 இற்கும் மேற் பட்ட குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 700 இற்கும் மேற் பட்டோர் தற்போது வாழ்ந்து வருகின்றனர்.

பழைமை வாய்ந்த கிராமங் களில் வாழ்ந்து வந்த மக்கள் விவசாயத்தையும் நன்னீர் மீன் பிடி, தோட்டப் பயிர்ச்செய்கை என்பனவற்றை மேற்கொண்டு வந்தனர்.

நாட்டில் ஏற்பட்ட போர்ச் சூழல் காரணமாக அந்தக் கிரா மங்களை அண்டிய உவர் நீர்த் தடுப்பணைகள் சேதமடைந் தன. இதனால் உவர்நீர் உட் புகுந்து பயிர் செய்கை நிலங் கள் உவர் நிலங்களாக மாறி யுள்ளன.

இதனால், இங்குள்ள மக்கள் வேறு இடங்களுக்கு குடி பெயர்ந்து சென்றுள்ளனர்.

உவர் நீர்த் தடுப்பணைகள் அழிவடைந்தமையால் கடற் பெருக்கு காலங்களில் மண் டைக்கல்லாறு வழியாக வரும் உவர் நீரால் முடக்கனாறு மற் றும் அதனையண்டிய விவ சாய நிலங்களிலும் உவர்ப் பரம்பல் காணப்படுகின்றது.

அங்குள்ள 600 ஏக்கருக் கும் மேற்பட்ட வளமான பயிர் செய்கை நிலங்கள் உவர் நிலங்களாக மாறியுள்ளன.

எனவே வளமான நீண்ட வரலாற்றைக் கொண்ட வன் னேரிக்குளத்தையும் அதனை யண்டிய கிராமங்களையும் பாதுகாக்கும் வகையில் அதிக நிதியை ஒதுக்கி நிலை பேறான அபிவிருத்திகளை மேற்கொள்ளுமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## மல்லாவி பொதுச்சந்தை கட்டடத்தொகுதியை முழுமையாக வாடகைக்கு விடுமாறு கோரிக்கை



மல்லாவி நகரில் நிர்மாணிக் கப்பட்ட பொதுச் சந்தைக் கட் டடத்தின் பெரும்பகுதி இது வரையில் வியாபார நடவடிக் கைகளுக்கு வழங்கப்படாத தால் ஏனைய கடைகளுக்கான வாடகைப் பணம் அதிகமாக அறவிடப்படுவதாக வியாபா ரிகள் கவலை தெரிவிக்கின் றனர்.

இவ்வாறு பல கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்ட மேற்படி பொதுச் சந்தையின் பெரும் பகுதி வாடகைக்கு விடப்படாததால் சந்தைக் கட் டடத் தொகுதி கடைகளுக்காக பிரதேச சபையால் அறவிடப் படும் வாடகைப் பணம் அதிக மாக உள்ளது. இதனால் அதிக வியாபாரிகளால் அந்தப் பணத்தைச் செலுத்தமுடியாத நிலை காணப்படுகின்றது.

மேலும், பாவனையற்றுக் காணப்படும் பொதுச் சந்தை யின் மேல்தளத்தில் சட்ட விரோத நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன என்றும் விசனம் தெரிவிக்கப்படுகின் றது.

பிரதேச சபையால் வாட கைப் பணத் தொகையைக் குறைத்து கட்டடத்தை முழு மையான பயன்பாட்டுக்கு விட வேண்டும் என்று வியா பாரிகள் தரப்பில் தெரிவிக் கப்படுகின்றது. (எ)

## வெளிநாட்டு நாணயத்தாள்களுடன் பாங்கொக் செல்ல இருந்தவர் கைது

பாங்கொக் நோக்கிப் பய ணிக்க வந்த பயணி ஒருவரி டம் மேற்கொண்ட சோதனை யின் போது 24 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான வெளிநாட்டுப் பணத்தை விமான நிலைய சுங்கப் பிரிவு நேற்று மீட்டுள்ளது.

அமெரிக்க டொலர் மற்றும் சுவிஸ் பிரங்க் ஆகிய பணத் தாள்களை நாட்டுக்கு வெளி யில் எடுத்துச்செல்ல முற்படும் போதே அவர் கைது செய்யப் பட்டுள்ளார். இவ்வாறு கைது செய்யப்பட்டவர் 48 வயது டைய இலங்கையர் என்று தெரியவந்துள்ளது.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட நிதி அரசுடைமையாக்கப்ப டும் என்றும் இது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக் கப்பட்டு வருகின்றன எனவும் சுங்க ஊடகப் பேச்சாளர் சுனில் ஜயரத்ன அறிவித்துள்ளார்.

### மஹோற்சவம்

அரியாலை, பிரப்பங் குளம் மகாமாரி அம்மன் கோவில் (நாச்சிமார் கோவில்) மஹோற்சவம் நாளை மறுதினம் புதன் கிழமை முற்பகல் 10 மணிக்குக் கொடியேற் றத்துடன் ஆரம்பமாக வுள்ளது.

ஆலய மஹாற்சவம் பதினைந்து தினங்கள் நடைபெறவுள்ளது. எதிர் வரும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறு நாள் புதன்கிழமை முற் பகல் 10 மணிக்குத் தீர்த் தத் திருவிழாவும் நடை பெறவுள்ளன. (இ)

## வவுனியா புதிய பஸ் நிலையம் அருகில் கால்வாயில் நீர்த்தேக்கம்; டெங்கு ஆபத்து!

### மக்கள் விசனம் தெரிவிப்பு



வவுனியா ஏ9 வீதிக்கு அரு கில் உள்ள, புதிய பஸ் நிலை யத்துக்கு முன்பாக அமைந் துள்ள கால்வாயில் நீர் தேங்கி நிற்பதனால் டெங்கு நுளம்பு கள் பெருகும் அபாயம் ஏற்பட் டுள்ளது எனப் பொதுமக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் தெரிவிக்கையில்–

'வவுனியா ஏ9 வீதிக்கு அருகில் காணப்படும் அந்த பஸ் நிலையத்துக்கு அருகே விவசாயத் திணைக்களத்தால் அமைக்கப்பட்டுள்ள பாரம் பரிய உணவகத்துக்கு தின மும் பொதுமக்கள் பலர் வந்து செல்கின்றனர்.

இந்தநிலையில், அந்தக் கால் வாயில் குப்பைகள் போடப்படு வதால் நீர்தேங்கி நிற்கின்றது. இதன் காரணமாக உணவ கத்தை நாடிவரும் மக்கள் சிர மங்களை எதிர்நோக்குகின்ற னர்.

அத்துடன், நீர் ஓட முடியா மல் தேங்கி நிற்பதன் காரண மாக டெங்கு நுளம்புகள் பெரு கும் அபாயமும் காணப்படுகி றது என்று சுட்டிக் காட்டியுள் ளனர்.

மேலும், கடந்த சில மாதங் களாக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு வருகின்ற நோயாளிகளின் எண்ணிக்கையும் அதிகரித்துக் காணப்படுகின்றது என வைத் தியசாலை அதிகாரிகள் தெரி வித்துள்ளனர்.

எனவே, இவற்றைக் கருத் திற் கொண்டு தகுந்த அதிகாரி கள்கால்வாயைச்சுத்தப்படுத்த நடவடிக்கைஎடுக்கவேண்டும் என்று மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (எ)

# நடைமுறையில் உள்ள அரசமைப்பில் பல்வேறு குறைபாடுகள் உள்ளன!

## கிழக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

திருகோணமலை, ஜூலை 10

தற்போது நடைமுறையில் உள்ள அரசமைப்பில் பல்வேறு குறைபாடுகள் உள்ளன. அதனால்தான் மக்கள் புதிய தோர் அரசமைப்பைக் கோரி நிற்கின்றனர்.

-இவ்வாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் தெரிவித்தார்.

புதிய அரசமைப்புத் தொடர்பில் நேற்றுமுன்தினம் சனிக் கிழமை ஊடகங்களுக்குக் கருத்துத்தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித் தவை வருமாறு:-

இப்போதுள்ள அரசமைப் பில் சிறுபான்மையினரின் உரிமைகளுக்குப் பாதகமான பல விடயங்கள் உள்ளமையா லேயே பல்வேறு பிரச்சி னைகள் ஏற்பட்டன. இந்த யதார்த்தத்தை நாம் புரிந்த



கொள்ள வேண்டும். அதிகாரப் பகிர்வு தொடர்பான தவறான தோற்றப்பாடு நாட்டில் உரு வாக்கப்பட்டுள்ளது. அதிகாரப் பகிர்வின் ஊடாக நாடு பிளவு படும் என்ற கருத்து முட்டாள் தனமானது.

அதிகாரம் பகிர்ந்தளிக்கப் படுவதன் மூலம் நாட்டின் அனைத்து மக்களும் நன்மை அடைவார்கள். அதிகாரப் பகிர் வின் ஊடாக இந்த நாட்டின் அபிவிருத்திச் செயற்பாடு களைத் துரிதப்படுத்தவும் நிர் வாகக் கட்டமைப்பைப் பலப் படுத்தவும் முடியும்.

இப்போது அதிகாரப் பகிர்வு நடைமுறைப்ப டுத்தப்படா மையால், பல மாகாணங் களில் உள்ள வளங்கள் பயன் படுத்தப்படாமலேயே உள் ளன.

இந்தப் பகுதிகளில் உள்ள வளங்கள் தொடர்பில் அந்த மாகாணத்தில் உள்ளவர்க ளுக்கே அதிகம் தெரியும். எனவே, அவற்றை நிர்வகிக் கும் அதிகாரம் மாகாணங் களுக்கு வழங்கப்படும் பட்சத் தில் அவற் றினூடாக அதிக பலனை இந்த நாட்டு மக்கள் பெற்றுக் கொள்ள முடியும். - என்றார். (ச)

## பாதிக்கப்பட்ட தமிழர்களின் வலியை மகாநாயக்கர்கள் உணர வேண்டும்!

### வியாழேந்திரன் எம்.பி. வேண்டுகோள்

மட்டக்களப்பு, ஜூலை 10

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழர்களின் வலியை மகா நாயக்கர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

-இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பி னர் எஸ்.வியாழேந்திரன் தெரி வித்துள்ளார்.

மட்டக்களப்பில் உள்ள அவ ரது அலுவலகத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடை பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-




தமிழ் மக்கள் வடக்கு மற்றும் கிழக்கில் இன்னும் போராட்டங் களை நடத்தி வருகின்றனர்.

இந்தநிலையில், அஸ்கிரிய போன்ற பீடங்களின் மகாநாயக் கர்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் மக்களுக்கு வேதனையை ஏற் படுத்துகின்றன.

தமிழ்பேசும் மக்களுக்கு அதிகாரங்கள் கொடுக்கப்படத் தேவையில்லை, புதிய அரச மைப்பே தேவையில்லை என்று மகாநாயக்கர்கள் கூறி வருகின் றனர். இது வலிகளைச் சுமந்து நிற்கின்ற மக்களுக்கு வெடி குண்டுகளைத்தலையில் போடு கின்றமைக்குச் சமமாகும். தமிழ் மக்கள் தமக்கு நீதியான தீர் வையே வேண்டி நிற்கின்ற னர். இந்த விடயத்தில் அஸ் கிரிய போன்ற உயர் பீடங்கள் மனித நேயத்துடன் நடந்து கொள்ள வேண்டும்.

தமிழ் மக்களின் பிரச்சினை கள் சிங்கள சமூகத்தின் மத்தியில் முழுமையாகக் கொண்டு செல் லப்படவில்லை. தமிழ் மக்களை சிங்கள சமூகம் முழுமையாகப் புரிந்து கொள்ளாமல் இருப்ப தற்கு அதுவும் ஒரு காரணம் ஆகும்.-என்றார். (ச)

## வீட்டுக் கழிவை வடிகானுக்குள் செலுத்தியோர் மீது வழக்குப் பதிவு!

அம்பாறை சம்மாந் துறை பிரதேசத்தில் வடிகானுக்குள் வீட்டுக் கழிவு நீரைச் செலுத்தி சுகாதாரத்துக்கு பங்கம் விளைவித்த குற்றச் சாட்டின் பேரில், 6 நபர் களுக்கு எதிராக வழக் குத்தாக்கல் செய்யப்பட் டுள்ளது.

மேற்படி நபர்கள் வீட்டுக் கழிவு நீரை மிக வும் சூட்சுமமான முறை யில் வடிகானுக்குள் விட்டுள்ளனர்.

இதனால், அந்தப் பிர தேசத்தில் துர்நாற்றம் வீசி வரும் அதேசமயம் சுகாதாரத்துக்கும் பெரும் பங்கம் ஏற்பட் டுள்ளது எனப் பொது மக்கள் முறைப்பாடு செய்திருந்தனர்.

இதை அடுத்து, பொலிஸார் மற்றும் பொதுசுகாதார பரிசோ தகர்கள் இணைந்து மேற் கொண்ட திடீர் பரி சோதனையின் போது, வடிகானுக்குள் கழிவு நீரைச் செலுத்திய நபர் கள் கண்டுபிடிக்கப்பட் டுள்ளனர்.

மேலும், இந்தச் சம் பவத்துடன் தொடர்பு டைய மேலும் 8 நபர்கள் எச்சரிக்கை விடுவிக்கப் பட்டுள்ளமை குறிப்பி டத்தக்கது. (ச)

## மட்டக்களப்பு சுமணரத்ன தேரரை மெய்ப்பாதுகாவலரே தாக்கினாராம்!

### அந்த பொலிஸ் உத்தியோகத்தர் இடைநிறுத்தம்

மட்டக்களப்பு மங்கள ராமய விகாராதிபதி வண. அம்பிட்டிய சுமணரத்தின தேரரைத் தாக்கினார் எனக் கூறப்படும் பொலிஸ் உத்தி யோகத்தர் ஒருவர், பணியில் இருந்து தற்காலிகமாக இடைநிறுத் தம் செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி வண. அம்பிட்டிய சும ணரத்தின தேரரின் மெய்ப்பாதுகா வலரான மேற்படி பொலிஸ் உத்தியோகத்தருக்கும் தேரருக்கும் இடையில் அம்பாறையிலுள்ள மங்களராமய விகாரையில் கடந்த வெள்ளிக்கிழமை வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

இதன்போது, மேற்படி பொலிஸ் உத்தியோகத்தர் தன்னைத் தாக் கினார் என அம்பாறை பொலிஸ் நிலையத்தில் தேரர் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்த நிலையில், விசாரணை மேற்கொண்டு வந்த பொலிஸார், மேற்படி பொலிஸ் உத்தியோகத் தரை நேற்றுமுன் தினம் சனிக் கிழமை தற் காலிகமாகப் பணியில் இருந்து இடைநிறுத்தியுள்ளனர். (ச)

## அதிகாரப் பகிர்வைத் தடுத்து நிறுத்த சதி!

### கோடீஸ்வரன் எம்.பி. சீற்றம்

அம்பாறை, ஜூலை 10

புதிய அரசமைப்பின் ஊடாக அதிகாரப் பகிர்வை வழங்கும் நட வடிக்கைகள் முன்னெ டுக்கப்பட்டு வருகின் றன. இந்த நிலையில், அதனைத் தடுப்பதற்குச் சில சக்திகள் சதி செய் கின்றன.

-இவ்வாறு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பி னர் கவீந்திரன் கோடீஸ் வரன் தெரிவித்துள்ளார்.

திருக்கோவில் வைத் தியசாலையை ஆதார வைத்தியசாலையாகத் தரமுயர்த்தி மக்களின் பாவனைக்குக் கையளிக் கும் நிகழ்வு நேற்றுமுன் தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில், பிர தம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்று கையிலேயே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட் டுள்ளார்.

'தமிழ் மக்களுக்கு அதிகாரப் பகிர்வை வழங் கக்கூடாதென்ற நிலைப்



பாட்டில் ஒரு தரப்பினர் செயற்படுகின்றனர். புதிய அரசமைப்பின் ஊடாகத் தமிழ் மக்களுக் குக் கிடைக்கும் நியாய மான தீர்வுகளைத் தட் டிப்பறிப்பதே அவர்களின் நோக்கமாகும். ஜனாதி பதி மைத்திரி மற்றும் பிரத மர் ரணில் தலைமையி லான அரசு இந்த விடயத் தைக் கவனத்திற் கொள்ள வேண்டும். அப்போதே தமிழ் மக்களுக்கு நிரந் தரத் தீர்வைப் பெற்றுக் கொடுக்க முடியும்' என அவர் மேலும் தெரிவித் தார். (ச)

## காத்தான்குடி வாவியில் படகுச் சேவைச் சவாரி!

மட்டக்களப்பு காத் தான்குடி வாவியில் சுற்று லாப் படகுச் சவாரி சேவை கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பொறி யியலாளர் ஷிப்லி பாறூக் தலைமையில் ஆரம் பித்து வைக்கப்பட்டது.

காத்தான்குடி அல்- அக்ஸா ஆற்றங்கரை மீன வர் சங்கத்தின் ஏற்பாட் டில் இந்த வாவி சுற்று லாப் படகுச் சவாரி சேவை தொடங்கப்பட்



டுள்ளது.

இந்த சுற்றுலாப் பட குச் சேவையின் ஊடாக மண்முனை, முதலைக் குடா, சிரையா தீவு, கரை யக்கண் தீவு, பெரிய களம், கல்லடி, முகத்து வாரம் உள்ளிட்ட ஏனைய சிறு படகுச் சவாரிகளை யும் பயணிகள் மேற் கொள்ள முடியும்.

காத்தான்குடி பிரதே சத்தில் இயங்கும் இயற் கையோடு ஒருமித்த இந்த வாவிச் சுற்றுலாச் சேவை சிறுவர்கள் மற் றும் படகுச் சவாரி பிரியர் களுக்கு சிறந்ததொரு பொழுதுபோக்கு அனுப வத்தை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ச)

## அமெரிக்காவுக்கான தூதுவருக்கு சேவை நீடிப்பு

அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவசத்துக்கு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வரை, சேவை நீடிப்பு அளிக்கப்பட்டுள்ளது. இலங்கை வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க இதற்கான அனுமதியை அளித்துள்ளார்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறும் ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தைக் கருத்தில் கொண்டே, இந்த சேவை நீடிப்பு அளிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா. விவகாரங்களை நியூயோர்க்கில் உள்ள இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியே கையாளுகின்ற போதிலும், ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் பங்கேற்கும் உலகத் தலைவர்களுடனான இரு தரப்பு சந்திப்புகளில், பிரசாத் காரியவசம் பங்கேற்க வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டே அவருக்கு இந்தச் சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. (எ)

# முள்ளிவாய்க்கால் செல்லவிருந்த தமிழிசைக்குத் தடை விதித்த பா.ஜ.க.





இலங்கைக்கு வருகை தந்திருந்த பாரதீய ஜனதாக்கட்சியின் தமிழ்நாடு மாநிலத் தலைவர் தமிழிசை சௌந்தரராஜன், இறுதிப்போர் நடைபெற்ற முள்ளிவாய்க்காலுக்குச் செல்வதற்குத் திட்டமிட்டிருந்த போதிலும், பா.ஜ.க. மேலிடத்தின் உத்தரவால், அந்தப் பயணத்தைக் கைவிட்டு அவசரமாகக் கொழும்பு திரும்பியுள்ளார்.

இலங்கைக்குக் கடந்த புதன்கிழமை தனிப்பட்ட பயணமாக வருகை தந்திருந்த தமிழிசை சௌந்தரராஜன், மறுநாள் யாழ்ப்பாணம் சென்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ. விக்னேஸ்வரன், அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் மற்றும் மாகாணசபை உறுப்பினர்கள் ஆகியோரைத் தனியாகச் சந்தித்திருந்தார்.

அத்துடன், நல்லை ஆதீனகுருமுதல்வரையும் வேறு சில தரப்பினரையும் அவர் சந்தித்துக் கலந்துரையாடினார்.

யாழ்ப்பாணத்தில் கடந்த வியாழக்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்த தமிழிசை சௌந்தரராஜன், மறுநாளான வெள்ளிக்கிழமை இறுதிப்போர் நடைபெற்ற முள்ளிவாய்க்காலுக்குச் சென்று அங்குள்ள மக்களின் பிரச்சினைகள் குறித்துக் கேட்டறியவுள்ளார் எனக் கூறியிருந்தார். அத்துடன், தனது பயணம் தனிப்பட்ட ரீதியானது என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில், வெள்ளிக்கிழமை அவர் முள்ளிவாய்க்காலுக்கான பயணத்தைத் திடீரென ரத்துச்செய்து விட்டு அவசரமாகக் கொழும்பு திரும்பினார்.

பா.ஜ.க. மேலிடத்தின் அவசர உத்தரவின்படியே தமிழிசை சௌந்தரராஜன் முள்ளிவாய்க்கால் பயணத்தை இடைநிறுத்தினார் என்று தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் கொழும்பு திரும்பும் வழியில், பல மாதங்களாகத் தொடர்காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்பாக, தமிழிசை சௌந்தரராஜன் வாகனத்தில் இருந்து இறங்கினார்.

போராட்டப் பந்தலுக்குச் சென்று அவர்களைச் சந்திக்காமல் வீதியில் நின்றே அவர்களைப் பார்வையிட்டு படம் பிடித்துக் கொண்டார்.

அப்போது, காணாமல் போனவர்களின் உறவுகள் அவரிடம் மனு ஒன்றைக் கையளித்தனர்.

இதன்போது, போராட்டத்தில் ஈடுபட்டுள்ள, பாதிக்கப்பட்ட மக்களைச் சந்திக்க வேண்டாம் என்று மேலிடத்தில் இருந்து உத்தரவு வந்துள்ளதாக, தமிழிசை சௌந்தரராஜன் கூறிவிட்டுச் சென்றார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ)

## தேங்காய் இறக்குமதி செய்ய அமைச்சரவைக் குழு முடிவு

கொழும்பு, ஜூலை 10

தேங்காய் கொள்கலன் ஒன்றை பரீட்சார்த்த அடிப்படையில் இறக்குமதி செய்வதற்கு இலங்கையின் பொருளாதார முகாமைத்துவத்துக்கான அமைச்சரவைக் குழு முடிவு செய்துள்ளது.

உள்ளூரில் உற்பத்தியாகும் தேங்காய், தேவைக்குப் போதுமான அளவில் இல்லாததாலேயே, இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

பரீட்சார்த்த அடிப்படையில், உரிக்காத - நாருடன் கூடிய - புதிய தேங்காய்களைக் கொண்ட கொள்கலன் இறக்குமதி செய்யப்படும். இதன் பெறுபேற்றின் அடிப்படையிலேயே இறக்குமதி தொடர்பான முடிவு எடுக்கப்படும் என்று பொருளாதார முகாமைத்துவத்துக்கான அமைச்சரவைக் குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, தீவு நாடாக இருந்தும், மீன்களை இறக்குமதி செய்யும் இலங்கை தற்போது, தேங்காய் இறக்குமதியில் இறங்கியுள்ளதாகவும், தேயிலை இறக்குமதி எப்போது ஆரம்பிக்கும் என்றும் பலர் விசனம் தெரிவித்துள்ளனர். தெங்குப் பொருள் ஏற்றுமதி இலங்கையின் பிரதான ஏற்றுமதிகளில் ஒன்றாக முன்னர் இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

# புதிய அரசமைப்பில் பௌத்த மதத்துக்கு எந்தவொரு பாதக நிலையும் ஏற்படாது

## இவ்வாறு கூறுகிறார் அமைச்சர் ஹக்கீம்



உத்தேச புதிய அரசமைப்பில் பௌத்த மதத்துக்கான முன்னுரிமைக்குப் பாதகம் ஏற்படுத்தக் கூடிய எந்தவொரு விடயமும் கிடையாது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

மாவனல்ல ஹெம்மாத்தகம பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பௌத்த மதத்திற்கான முன்னுரிமை இல்லாமல் போகும் என்று முன்னெடுக்கப்படும் பிரசாரங்களில் எவ்வித உண்மைகளும் கிடையாது.

தமிழ்க் கட்சிகளும் ஏனைய தரப்புக்களும் பௌத்த மதத்துக்கான முன்னுரிமையை ரத்துச் செய்ய வேண்டும் என்று கோரவில்லை.

எனினும், ஏனைய மதங்களை வழிபாடு செய்யும் போது ஏற்படக்கூடிய அநீதிகளைத் தடுக்கும் ஓர் ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஊடகங்களைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. அவ்வாறு நடவடிக்கை எடுத்தால் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது. -என்றார். (எ)

## கடந்த ஆறு மாதங்களில் மட்டும் 130 பேருக்கு எச்.ஐ.வி. தொற்று

எச்.ஐ.வி. தொற்று தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் இந்த வருடத்தின் கடந்த ஆறு மாத காலப் பிரிவில் 130 பேர் இந்நோய்க்கு இலக்காகி உள்ளனர் என்பது தெரியவந்துள்ளதாக தேசிய பாலியல் நோய்கள் மற்றும் எயிட்ஸ் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தத் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் சிசிர லியனகே மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மேலும் இந்த வருடத்தில் பதினொரு லட்சம் பேருக்கு எச்.ஐ.வி. தொற்று தொடர்பில் பரிசோதனை நடத்தப்படவுள்ளது. இதனடிப்படையில் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் மத்தியில் எச்.ஐ.வி. தொற்று தொடர்பில் பரிசோதனை மேற்கொள்ளும் வேலைத்திட்டம் ஒன்றும் தற்போதைக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.- என்றார். (எ)

# இராணுவத்தினரின் ஏற்பாட்டில் நடைபெற்ற மருத்துவ முகாம்!



கிளிநொச்சி மாவட்ட இராணுவத் தலைமையகத்தின் ஏற்பாட்டில், கிளிநொச்சி பூநகரி மத்திய கல்லூரியில் நேற்று முன்தினம் மருத்துவ முகாம் ஒன்று நடைபெற்றது.

வைத்தியர் லக்ஷ்மன் எல். வீரசேன தலைமையிலான மருத்துவக்குழுவினர், மற்றும் கிளிநொச்சி சுகாதார வைத்திய சேவைகள் திணைக்களம், இராணுவ வைத்திய குழுவினர் இணைந்து இந்த மருத்துவ முகாமை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது, ஆயிரத்துக்கு மேற்பட்ட நோயாளர்கள் மருத்துவ முகாமில் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

வெளிநோயாளர் பிரிவு, மருத்துவ பரிசோதனைகள், மலேரியா தொற்று பரிசோதனை உள்ளிட்ட மருத்துவ சேவைகள் இதன் போது மேற்கொள்ளப்பட்டன.

மருத்துவ முகாமுக்கு கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்தும் மருத்துவ குழுவினர் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

## புகைத்தல் கட்டுப்பாடு தொடர்பான சட்டம் விரைவில் வர்த்தமானியில்!

கொழும்பு, ஜூலை 10

அரச பாடசாலை அமைந்துள்ள பிரதேசத்திலிருந்து 500 மீற்றர் தூரத்துக்குள் உள்ள எந்தவொரு கடையிலும் சிகரெட் விற்பனை செய்யக் கூடாது என்ற சட்டம் மிக விரைவில் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்படவுள்ளதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசு புகைத்தலைக் கட்டுப்படுத்துவதற்கு முன்னெடுத்துள்ள நடவடிக்கையால் இதுவரையில் 46 வீதம் புகைப்பவர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. இதனால் அரசுக்குக் கிடைக்கும் வரி வருமானம் பெரியளவில் குறைவடைந்துள்ளது.

அரசு எதிர்வரும் நாள்களில் அறிவிக்கவுள்ள வர்த்தமானி சட்டத்தால் பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பு ஓரளவு உறுதி செய்யப்படும்.-என்றார். (எ)



1993 ஆம் ஆண்டு பழைய மாணவர் அணியால் புனரமைப்புச் செய்யப்பட்டு, தற்போது நவீன மயப்படுத்தப்பட்ட கொக்குவில் இந்துக் கல்லூரியின் உயிரியல் ஆய்வுகூடம் வைபவ ரீதியாக நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கல்லூரியின் முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கத்தால் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக யாழ். கல்வி வலய விஞ்ஞான பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் த.கதிர்காமநாதன் கலந்து கொண்டார்.

# வடக்கு, கிழக்கு ஆளுநர் அதிகாரங்களை மக்களின் வாக்குப் பலத்தால் தகர்க்கலாம்!

## இப்படிக் கூறுகிறார் பிரதியமைச்சர் காஸீம்



அம்பாறை,ஜூலை 10

மக்களுடைய வாக்குப் பலத்தின் மூலம் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள ஆளுநர்களின் அதிகாரங்களைத் தகர்த்தெறிய முடியும்.

-இவ்வாறு சுகாதாரப் பிரதி அமைச்சர் பைசல் காஸீம் தெரிவித்தார்.

திருக்கோவிலில் வைத்து நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையில்உள்ளமாகாண சபைகளில் வடக்கு, கிழக்கு மாகாணசபைகளின் அதிகாரங்கள் மாத்திரம், ஆளுநர்களின் கைகளுக்குள் முடங்கிக் கிடக்கின்றன. ஆனால், ஏனைய மாகாணங்களில் எந்த முதலமைச்சரும் எந்த ஆளுநரையும் கணக்கில் கொள்கிறார்கள் இல்லை.

தற்போது கிழக்கு மாகாண சபையில் முஸ்லிம் காங்கிரஸும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஒன்றுசேர்ந்து ஆட்சி அமைத்துள்ளன. தமிழ், முஸ்லிம் மக்கள் இந்த நாட்டில் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பதே எமது நோக்கமாகும். தமிழ், முஸ்லிம் மக்களின் உறவை உடைக்க வேண்டும் என்று தற்போது ஒரு சில சக்திகள் செயற்பட்டு வருகின்றன.

அப்போது எமது கட்சியிலிருந்து தமிழர்களுடன் ஒன்றுபட வேண்டும் என்றவர்கள், தற்போது தாம் பிரிந்து நிற்க வேண்டும் என்று கூறும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

அடுத்த கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழர்களும் முஸ்லிம்களும் ஒன்றுசேராமல் ஆட்சி அமைக்க முடியாது . ஒன்றுசேர்ந்து ஆட்சி அமைப்பதன் மூலமே இங்குள்ள மக்களின்வாழ்கைத்தரத்தை உயர்த்த முடியும். எது எவ்வாறாயினும், முஸ்லிம் காங்கிரஸும் அதன் தலைவரும் தமிழ் மக்களுடன் இணைந்து வாழ வேண்டும் என்ற நிலைப்பாட்டில் மிகவும் உறுதியாக இருக்கின்றனர் .- என்றார். (ச)

## தினசரி ராசி பலன் 10.07.2017

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஆனித் திங்கள் 26 ஆம் நாள் பிரதமை பகல் 11.26 மணி வரை. பின்னர் துவிதியை. நட்சத்திரம் உத்திராடம் மாலை 07.09 மணி வரை. பின்னர் திருவோணம். மரண யோகம் மாலை 7.09 மணி வரை. பின்னர் சுபயோகம். ராகுகாலம் காலை 7.32 மணி முதல் 9.06 மணி வரை. சுபநேரம்: பகல் 11.57 மணி முதல் 1.30 மணி வரை. திவசம் செய்யவேண்டிய திதி ஆனிமாத தேய் பிறை திரிதியை. பிறந்த நட்சத்திர வழிபாடு: உத்தராடம்.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்** : மத்திம பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். செலவினங்கள் அதிகரிக்கும். எடுக்கும் முயற்சிகள் தடைப்படும். வியாபாரம் தேங்கிக் கிடக்கும்.

**ரிஷபம்** : இன்பமான நாள். வருமானம் வளமாக இருக்கும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். உத்தியோகத்தர்களுக்கு எதிர்பாராத உயர்வுகள் கிடைக்கும். பிரிந்திருந்த குடும்பங்கள் ஒன்றுசேரும் வாய்ப்பு உண்டாகும்.

**மிதுனம்** : அலைச்சல் மிகுந்த நாள். சிலர் வேலை தேடி அலைவார்கள். வியாபாரிகள் வெளிநாட்டு ஒப்பந்தங்களை தேடித்திரிவார்கள். சிலர் வீடுவாங்குவதற்கு தகுந்த இடம்தேடி தரகரின் உதவியை நாடுவார்கள்.

**கடகம்** : சமபலன்கள் காணப்படுகின்றன. வரவும், செலவும் சமமாய் இருக்கும். வியாபாரத்தில் சமலாபம் கிடைக்கும். தொழிலில் அதிக பிரயாசை, அலைச்சல் அதிகமாகும். கொடுக்கல், வாங்கலில் எச்சரிக்கை தேவை.

**சிம்மம்** : உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. எதிர்பார்த்த பணம் வந்துசேரும். குடும்ப ஒற்றுமை மேம்படும். எண்ணிய கருமங்கள் துல்லியமாய் நிறைவேறும். வியாபாரம் நல்லமுன்னேற்றம் அமையும்.

**கன்னி** : மகிழ்ச்சியான நாள். வருமானம் வளமாக இருக்கும். குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். தொழிலில் அபரிமிதமான வளர்ச்சி காணப்படும். அரச வழியால் காணி கிடைக்கும்.

**துலாம்** : சஞ்சலமான நாள். மனம் குழம்பியபடி இருக்கும். குடும்பத்தில் உட்பூசல்கள் உண்டாகும். சுயதொழிலில் ஆதாயம்குறையும். வீண் அலைச்சல்களால் உடலும், மனமும் சோர்வடையும்.

**விருச்சிகம்** : மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரச் செலவுகள் அதிகரிக்கும். எண்ணிய கருமங்கள் தாமதமாகும். வியாபாரம் ஏற்றமும், இறக்கமுமாக நடக்கும்.

**தனுசு** : யோகமான நாள். நிதிநிலைமை வளமாக இருக்கும். குடும்பத்தில் புரிந்துணர்வு அதிகரிக்கும். வியாபாரம் நல்லமுன்னேற்றமடையும்

**மகரம்** : இன்பமான நாள். பிரிந்திருந்த உறவுகள் மீண்டும் ஒன்று சேரும் சந்தர்ப்பம் உண்டாகும். வியாபாரத்தில் எதிர்பார்த்ததைவிட அமோக லாபம் கிடைக்கும்.

**கும்பம்** : சலனம் நிறைந்த நாள். மனம் சஞ்சல நிலையில் இருக்கும். வியாபாரத்தில் பெரும் நஷ்டமுண்டாகும். மறைமுக எதிரிகளால் தொல்லை உண்டாகும்.

**மீனம்** : அதிர்ஷ்டமான நாள். தனலாபம் பெருகும். குடும்பத்தில் அன்னியோன்யம் அதிகரிக்கும். பூர்வீக சொத்துக்கள் கைக்கு வந்து சேரும்.

**சந்திராட்டமநாள்: மிருகசீரிடம் 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3ஆம் பாதங்கள் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் சுபகருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.**

# முஸ்லிம்களுக்கு எதிரான செயற்பாடுகளை தட்டிக்கேட்பதற்குப் பின்வாங்கமாட்டோம்!

## அமைச்சர் ரிஷாத் சூளுரை



முசலி, ஜூலை 10

இந்த நாட்டில் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளைத் தட்டிக்கேட்பதற்கும் அவற்றைச் சரிசெய்வதற்கும் பின்வாங்க மாட்டோம்.

-இவ்வாறு அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

முசலி தேசிய பாடசாலையின் மூன்று மாடிக்கட்டடத்துக்கான அடிக்கல் நடும் விழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில், பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:-

புதிய அரசமைப்பு யோசனைகள் தொடர்பில் இப்போது பெரிய பூகம்பம் ஒன்று கிளம்பி உள்ளது. மகாநாயக்க தேரர்கள் இந்த யோசனையை எதிர்க்கின்றனர். ஜனாதிபதி மகாநாயக்க தேரர்களைக் கண்டியில் சந்தித்துள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மகாநாயக்க தேரர்களுடன் இந்த விடயத்தில் பேச வேண்டிய அவசியம் இல்லை என்று கூறுகின்றது. எல்லாமே இடியப்பச்சிக்கலாக மாறியுள்ள நிலையில் நமது சமூகமும் நமது உரிமைகளுக்காகப் போராட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, முசலி பிரதேசத்தில் பல புதிய பாடசாலைகளை உருவாக்கி இருக்கின்றோம். இடிந்து போன பாடசாலைக் கட்டடங்களை மாடிக்கட்டடங்களாக மாற்றி அமைத்துள்ளோம். பல்வேறு அலுவலகங்களின் கட்டடங்களை மீளக் கட்டியெழுப்பி உள்ளோம். வீடுகளை நிர்மாணித்துக் கொடுத்துள்ளோம். முடிந்த வரையில் மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பும் வகையில் பல உதவிகளை நல்கி வருகிறோம்.-என்றார். (ச)

# உப உணவு உற்பத்தி நிலையம் உழவனூரில் திறந்து வைப்பு!





கிளிநொச்சி மாவட்டம் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட உழவனூர் கிராம மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரின் மேம்பாட்டுக்காக உப உணவு உற்பத்தி நிலையம் ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை வைபவ ரீதியாகத்திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வட மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா. டெனீஸ்வரன், கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் ஜே. ஜே. பெலிஷியன், கிராம அபிவிருத்திதிணைக்கள மாவட்ட அதிகாரி, மற்றும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம சேவையாளர், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (ச)

# புதிய அரசமைப்பு சாத்தியமா?

வழிமூலம் - AFP
மொழியாக்கம் - நித்தியபாரதி



இலங்கையில்சிறுபான்மை இனத்தவர்களான தமிழ் மக்களுக்கு, சுயாட்சி வழங்கும், அரசியல் சீர் திருத்தத்துக்கு பௌத்த மதகுருமார்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

ஆனாலும் இந்த நாட்டில் மீண்டு மொரு இரத்தம் தோய்ந்த யுத்தம் இடம்பெறுவதைத்தடுப்பேன் எனவும் 1972 தொடக்கம் 2009 வரை இடம் பெற்ற உள்நாட்டு யுத்தத்தில் 100,000 வரையான உயிர்கள் காவுகொள்ளப் பட்டமை போன்று நாட்டில் மீண்டும் பிறிதொரு பிரிவினைவாத யுத்தம் இடம்பெறுவதற்குத் தான் இடமளி யேன் எனவும், இதனால் வடக்கு மற்றும் கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் சுயாட்சியுடன் கூடிய நிர்வாக அலகின் கீழ் வாழ்வதற்கான உறுதிப்பாடுகள் புதிய அரசமைப்புச் சீர்திருத்தத்தில் வழங்கப்படும் எனவும் இலங்கையின் அதிபர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார்.

தமிழ் மக்களுக்கு சுயாட்சியை ஒத்த நிர்வாகத்தை வழங்கும் அரசாங் கத்தின் திட்டத்தை பௌத்த மதகுருக் கள் எதிர்க்கின்றனர் எனவும், இது தேவையற்ற பிரச்சினைகளை உரு வாக்கும் என்றும், மூத்த பௌத்த குருவான வண.ஆனமடுவ தம்மதாசி கடந்த செவ்வாயன்று தெரிவித் திருந்தார்.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் ஆரம்பமான புதிய அரசமைப்பு உரு வாக்கும் பணிகள் தொடர்ந்தும் இடம்பெறும் எனவும், இதிலிருந்து நாடாளுமன்றம் பின்வாங்காதுஎன்றும், இதன் மீது மக்களின் கருத்து வாக்கெடுப்பு நடத்தப்படும் எனவும் அரசாங்கப் பேச்சாளர் ராஜித சேனா ரத்ன தெரிவித்துள்ளார்.

''பௌத்த பிக்குகள் தமது கருத் துக்களை முன்வைக்க முடியும். ஆனால் 2015 இல் இடம்பெற்ற இரண்டு தேர்தல்களிலும் மக்களால் வழங்கப்பட்ட ஆணையின் பிரகாரமே தற்போது அரசமைப்பு சீர்திருத்தம் இடம் பெறுகிறது'' எனவும் ராஜித சேனரத்ன தெரிவித்தார்.

''மக்களின் விருப்பிற்கு எதிராக நாம் ஒருபோதும் செயற்பட மாட்டோம். பௌத்த மதகுருமார்கள் நாம் மக்களின் விருப்பிற்கு எதிராகச் செயற்பட வேண்டும் எனக் கூறுகின்றனர்'' எனவும் பேச்சாளர் ராஜித சேனரத்ன தெரிவித்தார்.

இலங்கையின் மொத்த சனத் தொகையில் 70 சதவீதமானவர்கள் பௌத்தர்களாவர். இவர்கள் எப்போதும் சிறுபான்மைத் தமிழ் மக்களுக்குச் சார்பான அரசியல் சீர்திருத்தத்தை எதிர்த்தே வருகின்றனர்.

தற்போதைய அரசியல் சீர்திருத் தத்தை பௌத்த குருமார்கள் எதிர்க் கின்றனர் எனவும் இது தொடர்பில் மூத்த பௌத்த குருமார்கள் ஒன்றி ணைந்துள்ளனர் எனவும் மூத்த பௌத்த குருவான வண. ஆனமடுவ தம்மதாசி தெரிவித்தார்.

தற்போது பௌத்த மதகுருமார்களால் முன்னெடுக்கப்பட்டுள்ள எதிர்ப்பு நடவடிக்கையானது அதிபர் சிறிசேன விற்கு பெரிய தொரு சவாலாக இருக் கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கு கூடுதல் அதிகாரத்தை வழங்கக்கூடிய சுயாட்சித் தீர்வை கடும்போக்குச் சிங்கள மக்களும் எதிர்க்கின்றனர்.

கல்வி மற்றும் தொழில் வாய்ப் புக்களில் தாம் பாரபட்சப்படுத்து வதை எதிர்த்தே 1972 இல் தமிழ் மக் கள் ஆயுதப் போராட்டத்தை ஆரம் பித்தனர். இந்த யுத்தமானது 2009 இல் முடிவிற்கு வந்தது.

இந்த யுத்தத்தில் இலங்கை இராணு வத்தினரால் பல்வேறு மீறல்கள் மேற் கொள்ளப்பட்டன. 2009 இல் இடம் பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தில் 40,000 வரையான பொதுமக்கள் படு கொலை செய்யப்பட்டனர்.

> இலங்கையின் மொத்த சனத் தொகையில் 70 சதவீதமானவர்கள் பௌத்தர்களாவர். இவர்கள் எப்போதும் சிறுபான்மைத் தமிழ் மக்களுக்குச் சார்பான அரசியல் சீர்திருத்தத்தை எதிர்த்தே வருகின்றனர்.

இந்நிலையில் நாட்டில் நல்லி ணக்கத்தை ஏற்படுத்துவதாகவும் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக் கப்பட்ட மீறல்களுக்கு நீதியை வழங்குவதாகவும் வாக்குறுதி யளித்தே சிறிசேன தமிழ் மக்களின் அமோக ஆதரவுடன் நாட்டின் அதி பரானார். ★






# கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முத்தமிழ் விழா

யாழ். கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் முத்தமிழ் விழா இரு தினங்கள் கலாசாலையின் ரதிலஷ்மி மண்டபத்தில் வெகு விமரிசையாக இடம்பெற்றது. முதல்நாள் நிகழ்வுகள் நாடக விழாவாகவும், இரண்டாம் நாள் நிகழ்வுகள் இயல் இசை விழாவாகவும் வெள்ளியும் சனியும் முன்னெ டுக்கப்பட்டுள்ளன.

நாடக விழாவின் முதல் நாள் விழா கலாசாலை யின் பிரதி அதிபர் ச.லலீசன் தலைமையில் நடை பெற்றது. இந்த விழாவில் பிரதம விருந்தினராகத் தேசியக் கல்வி நிறுவகத்தின் மீப்பே கற்கை நிலை யத்தின் கல்வித் தலைமைத்துவ அபிவிருத்தி மற் றும் முகாமைத்துவப் பீடத்தின் முதுநிலை விரிவு ரையாளர் எப்.ரி. அல்பிரட்டும் சிறப்பு விருந்தி னராக யாழ். தேசியக் கல்வியியற் கல்லூரி நாடகத் துறை விரிவுரையாளர் க. திலகநாதனும் கலந்து கொண்டுள்ளனர்.

கலாசாலையில் இல்லங்கள் பிரிக்கப் பட்டு இல்லங்களுக்கிடையே நாடகப் போட்டி நடைபெற்றது. 'தமிழ் மணம்',



'விசப்பாம்புகள்', 'எப்போது விடியல்?', 'சிந்தனை செய் மனமே' எனும் தலைப்பில் போட்டி அடிப் படையில் நாடகங்கள் மேடையேறின.

இவற்றில் ராதா இல்லம் மேடையேற்றிய 'எப்போது விடியல்?' என்ற நாடகம் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டது. கலாசாலை ஆசிரிய பயிலுநர் வீ.ரவிமோகன் சிறந்த நாடக இயக்குந ராகவும், அ.அம்ரூஸ் சிறந்த நடிகராகவும் தெரி வாகினர். நாடக விழாவின் இரண்டாம் நாள் இயல் இசை விழா கலாசாலை அதிபர் வீ. கருண லிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இதில் முதன்மை விருந்தினர்களாக யாழ்ப் பாணத் தமிழ்ச்சங்கப் பெருந் தலைவர் பேராசி ரியர் அ.சண்முகதாஸ், தமிழ்ச்சங்கத் தலைவர் பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ் ஆகி யோர் கலந்து கொண்டனர். சிறப்பு விருந்தினராக யாழ். கல்வி வலயத் தமிழ்ப் பாட உதவிக் கல் விப் பணிப்பாளர் தி.தயாபரன் கலந்து கொண்டார்.

பட்டிமன்றப் போட்டி மற்றும் விழாவை யொட்டி நடத்தப்பட்ட கலைப்போட்டிகளில் முதலிடம் பெற்ற ஆற்றுகைகள் என்பன மேடை யேற்றப்பட்டுள்ளன. அத்துடன், கலாசாலை அதிபர் வீ.கருணலிங்கத்தின் 'அண்ணாவியத்தில் ஏழு பிள்ளை நல்லதங்காள்' இசை நாடகம் ஆற் றுகை செய்யப்பட்டது.

நடன ஆற்றுகைகளுக்கான நட்டுவாங்கத்தை ரஜிதா சின்னத்துரை மேற்கொண்டார். மது சிகன் குரலிசையையும், குகபரன் வயலின் இசையையும், நந்தகுமார் மிருதங்க ஓசையையும் அளித்திருந்தனர். கல்விக்கான சமவாய்ப்புக்கள் இலங்கையில் எட்டப்பட்டுள்ளனவா? இல்லையா? எனும் தலைப்பில் நடைபெற்ற பட்டிமன்றப் போட்டியில் நடுவர்களாக வே.சிவராசா, ந.ஐங் கரன், இ.சர்வேஸ்வரா ஆகியோர் பங்கேற்றிருந் தனர்.




பொன்.வேணு கிருஷ்ணா

**ஐரோப்பிய ஒன்றிய கூட்டு இராணுவக் கட்டளை மையம் ஐரோப்பிய பாதுகாப்பு நிதியமும்**

வளர்ந்து வரும் அட்லாண்டிக் பதற்றங்கள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேறும் நிலைமைகளின் கீழ், எஞ்சிய 27 ஐரோப்பிய ஒன்றிய உறுப்பினர் அரசுகளும் ஒரு சுதந்திரமான இராணுவக் கொள்கையை நிறுவுவதை விரைந்து முன்னெடுக்கின்றன.

ஐரோப்பிய ஒன்றியம், அண் மையில் லுக்சம்பேர்க்கில் குடிமக்கள் மற்றும் இராணுவ நடவடிக்கைகளுக்கான கூட்டுக் கட்டளை மையம் ஒன்றை நிறுவ முடிவு செய்தது. அது ஆரம்பத்தில் மாலி, சோமாலியா மற்றும் தென்னாபிரிக்காவில் பயிற்சி பணித்திட்டங்கள் போன்றவற்றில் போல (நிறைவேற்று அதிகாரமின்றி) ஐரோப்பிய ஒன்றிய திட்டப்பணிகளை வழிநடத்த பயன்படுத்தப்படும். சராசரி அர்த்தத்தில், ஐரோப்பிய ஒன்றிய இராணுவ நடவடிக்கைகள் ''நிறைவேற்றுகை'' பின்வருமாறு பின்பற்றக்கூடும், அதாவது சிரியா, அல்லது ஈராக்கில் போன்ற போர் நடவடிக்கைகளை பின்பற்றக் கூடும். இவை இதுவரைக்கும் உறுப்பு நாடுகளில் உள்ள அந்தந்த தலைமையகங்களிலிருந்து வழிநடத்தப்பட்டு வந்தன.

அண்மையில் ஐரோப்பிய ஆணையம் ஆண் டுக்கு 5.5 பில்லியன் யூரோ மதிப்பு டைய ஓர் ஐரோப்பிய பாதுகாப்பு நிதியத்தை உருவாக்கியது. இந்த ஆண்டில், ஐரோப்பிய ஒன்றியம், முதல் தடவையாக புதுமையான பாதுகாப்பு தொழில்நுட்பங்கள் மற்றும் உற்பத்திப்பொருள்களில் ஒரு கூட்டு ஆய்வுக்காக மானியம் வழங்குவதுடன், முழுமையாகவும் நேரடியாகவும் ஐரோப்பிய ஒன்றிய வரவு-செலவுத் திட்டத்தில் இருந்து நிதியளிக்கப்படும் என உத்தியோகபூர்வ செய்தி வெளியீடு தெரிவிக்கிறது. இந்த ஆணையம் 2018இல், ஐரோப்பிய ஒன்றியத்தை, ஐரோப்பாவில் பெரிய பாதுகாப்பு ஆய்வு முதலீட்டாளர்களுள் ஒன்றாக ஆக்கும், ஓர் அர்ப்பணிக்கப்பட்ட ஐரோப்பிய ஒன்றிய பாதுகாப்பு ஆய்வுத் திட்டத்தை ஆண்டுக்கு 500 மில்லியன் யூரோக்கள் என்று மதிப்பிடப்படும் ஆண்டு வரவு-செலவுத்திட்டத்துடன் முன்மொழியும்.



நிதியத்தின் இரண்டாம் நிலை ''பாதுகாப்புச் சாதனம் மற்றும் தொழில்நுட்பத்தை அபிவிருத்தி செய்தல் மற்றும் கையிலெடுத்தல்'' பற்றி அக்கறை கொள்கிறது. சுமார் 500 மில்லியன் யூரோக்கள் இந்தப் பகுதியில் நேரடியாக செலவிடப்படும். உதாரணமாக, ''ட்ரோன் தொழில்நுட்பம் அல்லது செயற்கைக்கோள் தொடர்பை அபிவிருத்தி செய்வதில், அல்லது செலவுகளைக் குறைக்க மொத்தமாய் ஹெலிகாப்டர்களை வாங்குவதில் கூட்டாக முதலீடு செய்தலாகும் எனவே, அதனால் 2020இற்குப் பின்னர் பாதுகாப்புத் திறன் அபிவிருத்தியில், ஆண்டுக்கு 5 பில்லியன்கள் யூரோக்கள் மொத்த முதலீட்டைச் செய்ய முடியும்.

இந்த நடவடிக்கைகளின் நோக்கம், ஐரோப்பிய ஒன்றியத்தை ஓர் ஆக்கிரோஷமான பெரும் வல்லரசாக அபிவிருத்தி செய்வதுடன், நேட்டோ மற்றும் அமெரிக்காவிலிருந்து சுதந்திரமாக இராணுவ ரீதியாக தலையிட்டு போரை நடத்துவதாகும்.

**அமெரிக்கா, அனைத்து நேட்டோ உறுப்பு நாடுகளும் சேர்ந்து செலவழிப்பதை விடவும் பாதுகாப்பில் இரு மடங்கிற்கும் அதிகமாக முதலீடு செய்துள்ளது**

அண்மையில் ஐரோப்பிய ஆணையத்தால் வெளியிடப்பட்ட ''ஐரோப்பிய பாதுகாப்பு பற்றிய ஆழ்ந்த கருத்து ஆய்வு அறிக்கை'' என்பதிலும் பின்வருமாறு குறிப்பிட்டது: ''ஐரோப்பிய பாதுகாப்பை முன்னேற்றுவது அனைத்திற்கும் முதலாக ஐரோப்பியர் கைகளில் இருக்கின்றது. வளங்கள் அங்கு இருக்க வேண்டும்: கூட்டாக உலக ரீதியில் ஐரோப்பிய நாடுகள்தான் இரண்டாவது மிகப்பெரிய இராணுவச் செலவினம் செய்வதாகும். எமது பங்காளிகளுடன் சேர்ந்து செயற்படுகையில் ஐரோப்பிய ஒன்றிய விதிகளுக்கும் முன்னுரிமை தரலுக்கும் தொடர்ந்து ஆதரவாய் இருக்கும் அதேவேளை, அவசியப்படும் பொழுது தனியாகவும் செயற்பட வேண்டும்.''

ஆணையத்தின் அறிவிக்கப்பட்ட குறியிலக்கு ''புதிய போக்குகளுக்கு ஏற்ப ஓட்டத்தில் வைத்திருக்கவும் ஐரோப்பா தனது மூலோபாய சுயாட்சித்தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் அதற்கு தேவைப்படும் தொழில்நுட்ப மற்றும் தொழில்துறை திறன்களை உருவாக்கவும் உதவும்'' பொருட்டு, ஐரோப்பாவை பெரிய அளவில் ஆயுதமயமாக்கலாகும். 2016இல் பாதுகாப்பு வரவு-செலவுத் திட்டங்கள் ஏற்கனவே அதிகரித்திருந்தது, ''ஆனால் முன்னுள்ள பாதை இன்னும் நீளமானது'', என அந்த ஆய்வு அறிக்கை எச்சரித்தது. ''ஐரோப்பாவின் மூலோபாய சுயாட்சியை நோக்கி நகரும் போது, எமது பாதுகாப்பு மீது அதிகம் செலவிடுவதையும், அதேபோல சிறந்த முறையில் செலவு செய்தலையும் மற்றும் சேர்ந்து செலவிடுவதையும் வேண்டி நிற்கிறது.''



அமெரிக்கா, சீனா மற்றும் ரஷ்யா ஆகியவை இப்பொழுது ஐரோப்பிய ஒன்றியத்திற்கான அளவுக்குறிகளாக உள்ளன: ''அமெரிக்காவானது, அனைத்து நேட்டோ உறுப்பு நாடுகளும் சேர்ந்து செலவழிப்பதை விடவும் பாதுகாப்பில் இரு மடங்கிற்கும் அதிகமாக முதலீடு செய்துள்ளது மற்றும் அதன் 2018 வரவு-செலவுத் திட்டத்தில் கிட்டத்தட்ட பத்து சதவீதம் அதிகரிக்கும். சீனா கடந்த பத்தாண்டில் அதன் வரவு- செலவுத் திட்டத்தில் பாதுகாப்புக்காக 150 சதவீதம் உயர்த்தி இருக்கிறது, 2017இல் அது மேலும் 7 சதவீதம் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை, ரஷ்யா கடந்த ஆண்டில் தன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5.4 சதவீதத்தை பாதுகாப்பில் முதலீடு செய்துள்ளது.''

இந்தச் செய்தி எந்த தவறுக்கும் இடமில்லாதது. ஐரோப்பா ஏனைய பெரும் வல்லரசுகளுக்கு எதிராக தனது உலக நலன்களை உறுதிப்படுத்தும் பொருட்டு ஆயுதப் போட்டியில் கட்டாயம் பங்கேற்க வேண்டும் என்பதாகும். ''2025இல் ஐரோப்பா - பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு ஒன்றியம் என்பதை நோக்கிய நகர்வு,'' என்ற பிரிவில், ஐரோப்பிய மக்கட்தொகையின் முதுக்குக்கு பின்னால் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் மூன்று மறு-ஆயுதமயமாக்கல் காட்சிகளை முன்கூட்டிக் காட்டுகிறது, அவை உண்மையில் இராணுவ-பொலிஸ் அரசைக் கட்டும் நோக்கத்தைக் கொண்டவை.

''இந்தக் காட்சியில், உறுப்பினர் நாடுகள் பொது பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பினை நோக்கிய மேலும் கூடிய ஒத்துழைப்பை மற்றும் ஒருமைப்பாட்டை ஆழப்படுத்தும்'', என ஆவணம் கூறுகிறது. அதன் விளைவாக, ஐரோப்பிய ஒன்றியம் ''சாத்தியமான வகையில் பயங்கரவாத குழுக்களுக்கு எதிரான நடவடிக்கைகள், விரோதமான சூழலில் கடற்படை நடவடிக்கைகள் அல்லது சைபர்-பாதுகாப்பு நடவடிக்கைகள் உள்பட, ஐரோப்பாவை சிறப்பாகப் பாதுகாக்க, உயர்நுட்ப நடவடிக்கைகளை இயக்கக்கூடியதாக இருக்கும்.''

**இன்னும் கூடுதல் சுயாதீனமான மற்றும் ஆக்கிரோஷமானஐரோப்பிய போர்க் கொள்கைக்கு, கண்டத்தின் உள்ளேயும் இராணுவமயமாக்கல் தேவைப்படும்என்பதைஐரோப்பிய செல்வந்தத்தட்டுக்கள் அறிவர்.**

இந்த புதிய பாதுகாப்பு நிதியானது, ''உடனடி பதில்களை உறுதிப்படுத்தும் பொருட்டு விண்வெளி, வான் மற்றும் கடல்சார்கண்காணிப்பு, தகவல்தொடர்பு, மூலோபாய வான்வழி நகர்வு மற்றும் இணையம் போன்ற துறைகளில் திறமைகளை வழங்கும். அத்துடன்கூட, ஐரோப்பா சைபர்-தாக்குதல் திறன்கள் மற்றும் அவற்றை கண்டறிதல் திறன்களைக் கொண்டிருக்கும், மற்றும் ஓர் அர்ப்பணிக்கப்பட்ட ஐரோப்பிய பாதுகாப்பு ஆய்வு முகமை பாதுகாப்பில் புதியன கண்டறிவதில் முன்னெடுத்துச்செல்லும் மற்றும் அதனை நாளைய இராணுவத் திற மையுள்ளவைகளாய் மாற்றும்.

இன்னும் கூடுதல் சுயாதீனமான மற்றும் ஆக்கிரோஷமான ஐரோப்பிய போர்க் கொள்கைக்கு, கண்டத்தின் உள்ளேயும் இராணுவமயமாக்கல் தேவைப்படும் என்பதை ஐரோப்பிய செல்வந்தத்தட்டுக்கள் அறிவர். ''பாதுகாப்பு அச்சுறுத்தல்களை முறையாகக் கண்காணிப்பதோடு, தேசிய பாதுகாப்பு மற்றும் உளவுத்துறைகள் இடையேயான நெருக்கமான ஒத்துழைப்பில் படிமுறை ரீதியாக கூட்டாக இணைந்தே ஆய்வு செய்யப்படும் மற்றும் மதிப்பிடப்படும்'' என ஆணைக்குழு கூறுகிறது. ''நிகழும் வாய்ப்புள்ள திட்டமிடல் ஐரோப்பிய மட்டத்தில் மேற்கொள்ளப்படுவதானது, உள்நாட்டு வெளிநாட்டுப் பாதுகாப்பை நெருக்கமாய் ஒன்றாக்கி விடும். தேசிய பாதுகாப்புநலன்களின்உட்தொடர்பானது உண்மையான ஐரோப்பிய பாதுகாப்பு நலன்களுக்கு வழிவகுக்கும்.''

எதிர்பார்த்தவாறே, ஐரோப்பிய குழுவின் திட்டத்திற்கான மிகப்பெரிய வரவேற்பு பேர்லினில் இருந்து வந்தது. ஜேர்மன் அரசாங்கம் பிரெக்ஸிட் மற்றும் அமெரிக்காவிலிருந்து தொடர் பறுதல் தொடர்பாக - ஜேர்மன் தலைமையின் கீழ் ஐரோப்பிய ஒன்றியத்தை மறு ஒழுங்கு செய்வதற்கான ஒரு வாய்ப்பாகவும் அதன் சொந்த வல்லரசு கொள்கையின் தொடக்கப் புள்ளியாகவும் கருதுகிறது.

(கேள்வி தொடரும்)



# சுதந்திர வேட்கை


ப்பது ஆண்டுகளுக்கு மேலே படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.



29



## அத்தியாயம் - III

### ஆரம்ப காலம்: போராட்டத்தின் பரிமாணங்கள்

போராட்டத்தோடு நான் சங்கமித்த பல்லாண்டு கால அனுபவத்தில் மனித நடத்தையின் பல்வேறு பரிமாணங்கள் பற்றி நிறையக் கற்றிருக்கிறேன். அதே போல போராளிகள் ஒருவரோடு ஒருவர் பூணும் நுண்மையான உறவுகள் தொடர்பாகவும் கற்றிருக்கிறேன். போராட்டமே ஒரு திறந்த பல்கலைக் கழகம் ஆகியது. அதில் மனித வாழ்வின் விழுது ஓடிய அம்சங்களை நான் கற்க முடிந்தது. உன்னத இலட்சியத்துக்காகப் போராடும் ஓர் இயக்கத்தையும் இனத்தையும் வெளியே இருந்து பார்ப்பவர்களுக்கு, மக்கள் போராட்டம் தொடர்பாகவும், ஒரு தேசிய விடுதலைப் போராட்டம் தொடர்பாகவும் ஒரு கற்பனைக் கருத்தே நிச்சயம் தோன்றும். ஆனால், விடுதலைப் போராட்டத்தின் முக்கிய நீரோட்டத்தில் நேரே கலந்துகொண்டிருக்கும் ஒருவருக்கு இது முற்றிலும் வேறுபட்ட ஒன்றாகும். தனித்துவமான அனுபவங்களையும் சவால்களையும் கொண்ட பட்டறிவாகவே அது அமையும்.

தேசிய விடுதலைப் போராட்டம் என்பது மிகவும் சிக்கலானது. பல முகம் கொண்டது. முதலில், போராட்டத்தை முன் நின்று வழிநடத்தும் புரட்சி இயக்கம் அமைகிறது, இரண்டாவதாக விடுதலைப் போராட்டத்தின் சமுதாயப் பரிமாணமும் மூன்றாவதாக, போராட்டத்திலே தனிப்பட்டவர்கள் எவ்வளவுக்குப் பங்கு பற்றுகிறார்கள் என்பதும் அமையும். ஒரு தேசிய விடுதலை இயக்கம், அரசியல் – இராணுவத் தளத்தில் நின்றே தனது போராட்டத்தை நடத்தும். அரசியல் சுதந்திரத்துக்காக நடத்தப்படும் ஆயுதம் தரித்த புரட்சிப் போராட்டத்தில் இராணுவமும் அரசியல் அம்சங்களும் பிரிக்க முடியாதபடி இணைந்திருக்கும். விடுதலையின் அரசியல் இலட்சியத்தை அடையும் கருவியாகவே இராணுவப் போராட்டம் அமைகிறது. தேச சுதந்திரம் என்ற இறுதியான இலக்கை அடையும் நோக்கத்துடன் இராணுவ, அரசியல் வழிமுறைகளை வகுக்கும் பெரும் பொறுப்பை விடுதலை இயக்கமும் அதன் தலைமையும் ஏற்கின்றன. விடுதலைப் போராட்டம் என்பது நிச்சயமாக மக்களின் ஒட்டுமொத்தமான பங்களிப்புடன் சம்பந்தப்பட்டது. சுட்டிப்பாகக் கூறுவதானால், ஓர் இன மக்களின் அரசியல் சுதந்திரத்துக்காகவே போராட்டம் நடத்தப்படுகிறது. இப் போராட்டமானது அரச ஒடுக்குமுறைக்கு எதிரான ஆயுத எதிர்ப்பு இயக்கமாக வளர்ந்து விரிவடைகிறது. ஒடுக்குமுறையும் அதனை முகம் கொடுக்கும் எதிர்ப்பு முறையும் ஒரு சுழற்சி முறையில் அமையும். அது மக்களுடைய சமூக – பொருளாதார பண்பாட்டில் தன் விளைவுகளை ஏற்படுத்தும். போராட்டத்தின் இயங்கு நிலைக்கு ஏற்ப, மக்களின் தெரிவுக்கு அமைவாக ஏதோ ஒரு மட்டத்தில் அவர்களும் போராட்டத்திலே கலந்து கொள்ளும் நிலைக்கு கவரப்படுவார்கள். இதன் பின்னர்தான் போராட்டத்தில் பங்களிப்பு தீர்மானமாகிறது. ஒரு தேசிய விடுதலை இயக்கத்தில் தனிமனிதரின் ஈடு பாடுபற்றியே நான் இங்கு குறிப்பிடுகிறேன். பொதுவான தேசியப் போராட்டத்தின் முழுமைக்குள் நின்றவறே தனிப்பட்ட ஒருவர் தனது போராட்டத்தைத் தொடுக்க நிர்ப்பந்திக்கபடுகிறார். சூழல்கள், சவால்கள், உறவுகள் ஆகிய பல தரப்பட்ட நிலைகள் அவரை நிர்பந்திக்கின்றன. அதாவது, தனிமனிதருடைய போராட்டமானது தேசிய விடுதலை இயக்கத்தின் வளர்ச்சிக்கும் செயற்பாட்டிற்கும் சமாந்தரமாக இடம்பெறும். இவ்வகையில் 1984, 1985 ஆம் ஆண்டு காலம் கட்டவிழ்ந்த போது இயக்கத்தினதும் போராட்டத்தினதும் படிநிலை வளர்ச்சியில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளை நான் சந்தித்தேன். இவை எனது உணர்ச்சிகளுக்கும் சிந்தனை வளத்திற்கும் சவால்களாக அமைந்தன. இந்த அனுபவங்களால் எதிர்காலப் போராட்டத்துக்கான மன வைரக்கியத்தைப் பெற்றேன். அத்துடன், பலவகையான இடர்பாடுகளை பின்னர் எதிர்கொண்டபோது, அவற்றுக்குத் தாக்குப் பிடிக்கவும், துணிச்சலும் உறுதியான மனத்திடமும் பெற்றேன்.

எப்போதைக் காட்டிலும் 1984 ஆம் ஆண்டிலேயே விடுதலைப் புலிகள் துரித வளர்ச்சியும் விரிவாக்கமும் கண்டனர். ஒருசிறிய கெரில்லா அமைப்பானது தேசிய விடுதலை இராணுவமாக அபூர்வமான முகிழ்ப்புப் பெற இரண்டு முக்கிய காரணிகள் இருந்தன. இரண்டும் பொருத்தமான வேளையில் வந்து முதிர்ந்தன. இந்தியா ஏற்பாடு செய்த பயிற்சித் திட்டமானது விடுதலைப் புலிகளை விடுதலை இராணுவமாக வடிவெடுக்கச் செய்வதில் முக்கிய பங்கு வகித்தது. இந்தப் பயிற்சி விடுதலைப் புலிப் போராளிகளின் அறிவையும் ஆற்றலையும் புடமிட்டது. அவர்களது இராணுவத் தகைமையையும் உள்ளார்ந்த திறனையும் அமோகமாக வளர்ந்துவிட்டது. ஆனாலும், இந்தியாவின் பயிற்சித் திட்டம் வரம்பு கொண்டதாகவே இருந்தது. இருநூறு போராளிகள் மட்டுமே இதில் பயிற்சி பெற்றார்கள். விடுதலைப் புலிகளின் இராணுவப் பலம் வெகுவாக



இத்தகைய நெருக்கடியான ஒரு கால கட்டத்தில் தமிழ் நாட்டிலே பெருமதிப்புப் பெற்ற ஒரு தலைவரின் தங்குதடையற்ற ஆதரவும் துணிச்சலான தலையீடும் விடுதலைப்புலிகளுக்குக் கிடைத்த பெரும் வாய்ப்பே என்றே கூறலாம். எம்.ஜி. ஆருடைய இந்தப் பெரும் கொடை, இந்த வரலாற்று நாயகனுடன் பிரபாகரனுக்கு ஒரு நெருக்கமானதும் அந்நியோன்யமானதுமான உறவை ஏற்படுத்தியது.

விரிவடைவதற்கு இந்தப் பயிற்சித் திட்டம் மட்டும் போதுமாக இருக்கவில்லை. சரியான தருணத்தில் நிதியுதவியும் அவசியமாகியது. இல்லையென்றால் இந்திய அரசு வழங்கிய வாய்ப்போடு மட்டும் இயக்கத்தைக் கட்டியெழுப்புவது பிரபாகரனுக்கு சிரமமாகஇருந்திருக்கும். தமிழ் நாட்டில் மிகவும் சக்திவாய்ந்தவரும் வளம் நிறைந்தவருமான முதலமைச்சர் எம்.ஜி.இராமச்சந்திரனிடமிருந்து நிதி ஆதரவு கிடைத்தது. இது நிகழ்ந்தது 1984 ஆம் ஆண்டு முற்பகுதியிலாகும். முதலமைச்சரிடம் இருந்து அழைப்பு வந்ததும் பாலாவின் தலைமையில் அணி ஒன்று சென்று, முதலமைச்சரின் இல்லத்தில் அவரைச் சந்தித்தது. அந்த அணியிலே பேபி சுப்பிரமணியமும், கேணல் சங்கரும், நித்தியானந்தனும் சென்றனர். சந்திப்பு நல்ல பயன் அளித்தது. ஈழத்தமிழ்மக்களின்விடுதலைக்கான விடுதலைப் புலிகளின் போராட்டத்தில் உள்ள தேவையையும் தர்மத்தையும் பாலா எடுத்துரைத்து இராமச்சந்திரனை நம்ப வைத்தார். முதல் சந்திப்பிலேயே பல கோடி ரூபா நிதி உதவி வழங்க முதலமைச்சர் முன்வந்தார். தமிழ்ப் பகுதிகளிலே சிங்கள இராணுவத்தால் நிகழ்த்தப்பட்ட கொலைகளையும் அழிவுகளையும் காட்டும் நிழற்படங்களையும் வீடியோ படங்களையும் பார்த்ததும் அவர் வெகுவாக, நெகிழ்ந்து போனார். இத்தகைய நெருக்கடியான ஒரு காலகட்டத்தில் தமிழ் நாட்டிலே பெருமதிப்புப் பெற்ற ஒரு தலைவரின் தங்குதடையற்ற ஆதரவும் துணிச்சலான தலையீடும் விடுதலைப் புலிகளுக்குக் கிடைத்த பெரும் வாய்ப்பே என்றே கூறலாம். எம்.ஜி. ஆருடைய இந்தப் பெரும் கொடை, இந்த வரலாற்று நாயகனுடன் பிரபாகரனுக்கு ஒரு நெருக்கமானதும் அந்நியோன்யமானதுமான உறவை ஏற்படுத்தியது. விடுதலைப் புலிகளின் நிதியத்துக்குள் இராமச்சந்திரனுடைய சொந்த நிதி சொரியத் தொடங்கியதும், விடுதலைப் புலிகளை ஒரு தரம் மிக்க தேசிய விடுதலை இயக்கமாக வளர்த்தெடுக்க வேண்டும் என்ற பிரபாகரனின் இலட்சியக் கனவும் கைகூடி வந்தது. அந்த நிதியை மிக முன்னெச்சரிக்கையோடு கையாண்ட விடுதலைப் புலிகளின் தலைவர், தமிழ் நாட்டிலே பல பயிற்சி முகாம்களை நிறுவி, பெரும் தொகையான புதிய போராளிகளையும் அணியிலே சேர்த்தார். அத்தோடு, புதுவகை ஆயுதங்களையும் வாங்கினார். தொடர்ச்சியான – காத்திரமான – அரசியல் பணிகளுக்காகவும் பரப்புரைகளுக்காகவும் கூட நிதி ஒதுக்கப்பட்டது. அன்றைய வரலாற்றுத் திருப்புமுனையிலே விடுதலைப் புலிகள் வளர்ந்து விரிவடைவதற்கு, எம்.ஜி.இராமச்சந்திரன் வழங்கிய நிதி உதவியும் அரசியல் ஆதரவும் உறுதுணையாக இருந்தன என்று கூறினால் மிகையாகாது. ஆற்றலும், ஆளுமையும் மிக்க புதிய ஆள்களை அணிசேர்த்து பெருமளவு மனித வளங்களை விடுதலைப் புலிகள் திரட்டினார்கள். விடுதலைப் புலிகளின் அரசியல் சித் தாந்த வேலைத் திட்டத்தை முன்னெடுப்பதில் 1984 ஆம் ஆண்டு ஒரு முக்கிய ஆண்டாக விளங்கியது.

(தொடரும்...)











## கனடாவின் 150 ஆவது பிறந்த தின கொண்டாட்ட நிகழ்வுகள்

கடனாவின் 150 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு கனடாவில் பெரிய கொண்டாட்ட நிகழ்வுகள் அண்மையில் இடம்பெற்றுள்ளன.

இந்த நிகழ்வின் போது கனடாவின் தேசிய தின நிகழ்வும் முன்னெடுக்கப்பட்டதுடன், கனடாவின் தேசிய தினம் ஜூலை முதலாம் திகதி கொண்டாடப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வை கனேடியத் தமிழர் தேசிய அவை, கனடாத் தமிழ்க் கல்லூரி, அறிவகம் கனடா இணைந்து ஏற்பாடு செய்துள்ளமையோடு, தமிழ்க் கனேடிய சமூகமும் இணைந்து கொண்டுள்ளது. இதன்போது, மார்க்கம் நகரிலும், ஸ்காபரோ நகரிலும் ஊர்திப்பவனிகள் இடம்பெற்றன.

இதில் சிவப்பு, மஞ்சள் நிறத்தில் அழகாகச் சோடிக்கப்பட்ட இந்த ஊர்திகள் ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தன.

மேலும், இந்த இரு ஊர்திகளுக்கான இசையை RA RHYTHMS குழு வினரும், BASEMENT CREWS குழுவினரும் வழங்கி இருந்தனர் என்று குறிப்பிடப்படுகின்றது. (எ)

## சுவிஸில் முதியோருக்கு நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் குறித்த ஆலோசனை



சுவிற்ஸர்லாந்து தலைநகர் பேர்ணில் 55 அகவைக்கு மேற்பட்டவர்களுக்கான நலத் திட்ட ஆலோசனைகள், ஓய்வூதியம் பெறும் வழிமுறைகளுக்கான உதவிகள் வழங்கும் நிகழ்வுகள் என்பன வழங்கப்பட்டன.

இந்தக் கலந்துரையாடல் கடந்த புதன்கிழமை இணையர் நந்தினி. முருகவேலினால் தமிழ்மொழியில் நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது, Einwohnerdiensten der Stadt Bern பொறுப்பதிகாரி Herr Hubert Feller, சைவநெறிக்கூடத்தின் பொறுப்பு அதிகாரிகளில் ஒருவரும், மதகுருவுமான த.சசிகுமார் ஆகியோர் அதிதிகளாகக் கலந்துகொண்டுள்ளனர்.

மேலும், ஒருவருடைய இறப்பு, தொடர்பாக சைவநெறிக்கூடம் எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது என்பதை மதகுரு த.சசிகுமார் விளக்கமாகக் கூறியுள்ளார்.

இணையர் நந்தினி முருகவேளின் சேவை வரவேற்கத்தக்கதும், எங்களுடை மக்களுக்கு இந்தச் சேவை மிகவும் தேவையானதும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இணையர் நந்தினி முருகவேள் வயோதிபர்களுக்கான தகவல்களை வழங்குவதற்கான ஒரு மேற்படிப்பை செஞ்சிலுவைச் சங்கம் பேர்ண் நகரப்பகுதி வயோதிபர்களுக்கான அமைப்பு போன்றவற்றின் மூலம் நிறைவு செய்து அதற்கான சான்றிதழைப் பெற்றிருக்கின்றார்.

இதனால், எதிர்காலத்தில் இணையர் நந்தினி முருகவேள் தலைமையில் சிறிய குழுக்களாக இக்கலந்துரையாடல் இடம்பெறும்.



# பிரான்ஸ் வில்நெவ் பிராங்கோ தமிழ்ச் சங்கத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள்





பிரான்ஸ் வில்நெவ் பிராங்கோ தமிழ்ச்சங்கம், வில் நெவ் தமிழ்ச்சோலையின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் கடந்த 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பரிசின் புறநகர்ப் பகுதிகளில் ஒன்றான வில்நெவ் சென் ஜோர்ஜ் பகுதியில் கொட்டும் மழைக்கு மத்தியில் ஆரம்பமாகிச் சிறப்பாக நடைபெற்றன.

பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு தமிழர் விளையாட்டுத்துறையின் ஒழுங்கமைப்பில் இடம் பெற்ற இந்தநிகழ்வில் பொதுச் சுடரை வில்நெவ் தமிழ்ச்சோலை நிர்வாகி சிவபாலன் ஏற்றி வைக்க பிரான்ஸ் கொடியை வில்நெவ் பிராங்கோ தமிழ்ச்சங்கத் தலைவர் விந்துசன் ஏற்றி வைத்தார்.



தொடர்ந்து தமிழீழத் தேசியக் கொடியை வில்நெவ் பிராங்கோ தமிழ்ச்சங்க உறுப்பினர் தினேஸ் ஏற்றிவைத்தார்.

மங்கல விளக்கை வில்நெவ் பிராங்கோ தமிழ்ச்சங்க உறுப்பினர்களான சிவநேசன் தயாளினி, சசிகுமார் சுபாசினி, சுதாகரன் ரேணுகா, இந்திரஜித் சுவஸ்திகா, சிவதாசன் ஜனனி ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

ஒலிம்பிக் தீபத்தை மெய்வன்மைப் போட்டி துணை முகாமையாளர் பீலிக்ஸ் மெய்வன்மைப் போட்டி வீரர்களிடம் ஒப்படைத்தார். தொடர்ந்து வீரர்கள், நடுவர்கள் சத்திய பிரமாணம் இடம் பெற்றதையடுத்து போட்டிகள் ஆரம்பமாகின.

வில்நெவ் தமிழ்ச்சோலை மாணவ மாணவிகளின் அணி நடை இடம்பெற்றது. அணி நடையைப் பிரதம விருந்தினர்கள் ஏற்றுக் கொண்டனர்.

எல்லாளன், சங்கிலியன் ஆகிய இல்லங்களிடையே மிகவும் விறுவிறுப்பாக போட்டிகள் இடம்பெற்றன.

இரண்டு இல்லங்களும் தமது இல்லங்களை சிறப்பாக அலங்கரித்திருந்தன. ஒவ்வொரு இல்லமும் தமது இல்லங்களின் பெயர்களுக்கு ஏற்றது போன்று தமது இல்லங்களில் எல்லாளன், சங்கிலியன் ஆகியோர் தொடர்பான விடயங்களை அடையாளப்படுத்தி இருந்தனர்.

தமிழ்ச்சோலை மாணவிகளின் உடற் பயிற்சி அணி வகுப்பு சிறப்பாக அமைந்திருந்தது.

நின்றுபாய்தல், பிஸ்கட் உண்ணுதல், கயிறடித்தல், கயிறிழுத்தல், சங்கீதக் கதிரை, ஓட்டம், தண்ணீர் நிரப்புதல் போன்ற மேலும் பல்வேறு விளையாட்டுக்கள் விறுவிறுப்பாக இடம்பெற்றிருந்தன.

விநோத உடைப்போட்டிகளும் சிறப்பாக அமைந்திருந்தன. அவை குழுப்போட்டிகளாகவும் தனிப்போட்டிகளாகவும் இடம் பெற்றிருந்தன.

தொடர்ந்து வெற்றிபெற்ற மாணவர்களுக்கு நினைவுப் பதக்கமும் சான்றிதழ்களும் வெற்றிக்கிண்ணமும் வழங்கி மதிப்பளிக்கப்பட்டது.

# உலக வல்லரசாக முயலும் இஸ்ரேலும் அகலும் அமெரிக்காவும்



இன்று உலக இராணுவ வலுச் சமநிலையில் ஐக்கிய அமெரிக்காவை விட தொழில்நுட்ப ரீதியில் ரஷ்யாவும் பொருளாதார ரீதியில் சீனாவும் முன்னணியில் உள்ளன. ஐக்கிய அமெரிக்காவின் வல்லரசு நிலை குன்றுவதற்கு அதன் இஸ்லாமியத் தீவிரவாதத்துக்கு எதிரான கொள்கைகளே காரணமாக அமைந்து விட்டன. மத்திய கிழக்கில் அமெரிக்கா சார்பு இடங்கள் ரஷ்யா சார்பு நிலங்களாகவும் சீனா சார்பு நிலங்களாகவும் மாறிவரு கின்றன. ஆசியாவில் பாகிஸ்தானும் இலங்கையும் சீனாவின் மேலாதிக்கத் திற்குள் கொண்டுவரப்பட்டு உள்ளன.

வடகொரியா போன்ற இரண்டாம் தர நாடுகளுடனேயே ஐக்கிய அமெரிக்கா சண்டையிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஐக்கிய அமெரிக்காவின் இராணுவ வல்லாதிக்க பலவீனத்திற்கு இஸ்ரேலின் மொஸாட் அமைப்பே காரணமாக அமைந்தது. இஸ்ரேல், மத்திய கிழக்கில் இஸ்லாமிய தேசங்களை அழிக்க ஐக்கிய அமெரிக்காவை பகடைக்காயாக மாற்றியது. இது இரட்டைக் கோபுரத் தாக்குதலுடன் ஆரம்பமாகியது. அமெரிக்கா உளவுப் பிரிவில் பல யூதர்களும் செயற்படுகின்றனர். இவர்களில் சிலர் மொஸாட்டின் திட்டங்களை அமெரிக்கா மூலம் நடைமுறைப்படுத்துவதில் முனைப்பு உடையவர்கள். மொஸாட் முகவர்கள் மூலம் மறைமுக சலுகைகளைப் பெற்றவர்களே இரட் டைக் கோபுரத் தாக்குதல்களை நெறிப்படுத்தினர். இவ்வாறு இஸ்லாமியத் தீவிரவாதிகள் மூலம் அமெரிக்காவைச் சீண்ட வைத்து அதன் மூலம் அமெரிக்காவினால் இஸ்லாமிய உலகுக்கு எதிராகப் போர்ப்பிரகடனம் செய்து வைக்க இஸ்ரேல் பின்னணியில் இருந்துள்ளது.

இதனால் இஸ்ரேலுக்கு எதிரான நாடுகளான ஈரான், ஈராக், எகிப்து, லிபியா, ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், சிரியா என்பன அமெரிக்காவினால் அழிக்கப்பட்டன. இதனால் ஒட்டுமொத்த இஸ்லாமிய தேசங்களின் விரோதத்தை அமெரிக்கா சம்பாதித்துள்ளது. இது பொருளாதார ரீதியிலும் இராணுவ ரீதியிலும் அமெரிக்காவைப் பின்னடைய வைத்துள்ளது. பின்லேடனைப் பகைத்து, அதனால் பாகிஸ்தானைப் பகைத்தமையினால், அமெரிக்கா பெரும் பொருளாதாரத்தை இழந்ததுடன் சீனாவின் கட்டுப்பாட்டில் பாகிஸ்தான் வந்துள்ளது. இதனால் இந்தியாவுடன் அமெரிக்கா, பாகிஸ்தானைக் காட்டிப் பேரம் பேசும் திறனையும் இழந்து விட்டது.

எனவே அமெரிக்கா, இஸ்ரேலின் நலனை முன்னிறுத்தி அரபு நாடுகளுக்கு எதிராகவும் இஸ்லாமியர்களுக்கு எதிராகவும் நடவடிக்கைகளை எடுத்தல் தனது வல்லரசுத் தன்மையை அதிகரிக்காது, குன்றவே செய்துள்ளது என்ற உண்மையை உணரல் வேண்டும். இவ்விடைவெளியை இஸ்ரேல், இந்தியா, இலங்கை என்பன தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துகின்றன.

மிகவும் அண்மையில் கட்டார் நாட்டுக்கு எதிராக அமெரிக்கா சார்பு அரபு நாடுகளினால் எடுக்கப்பட்ட நடவடிக்கை அமெரிக்காவின் பொருளாதார, இராணுவ நலனுக்கு தீங்காகவே அமையும். கட்டார் தனது நலனுக்காக ரஷ்யா, சீனா, சிரியா போன்ற நாடுகளின் உதவியைப் பெறும். இதனால் அமெரிக்காவின் அணுகுமுறைகள் இஸ்ரேலின் இலக்குகளை மட்டும் எட்டுவனாகவே அமையும்.

எனவே, ஐக்கிய அமெரிக்காவின் இஸ்லாமிய எதிர்ப்பு வெளிவிவகார, உள்விவகாரத் திட்டமிடல்கள் மாற்றியமைக்கப்படாவிடின் அமெரிக்காவின் இடத்தை இஸ்ரேல் தக்க வைக்க அமெரிக்கா இரண்டாம் நிலைக்கு தள்ளப்படும். உலகளாவிய அமெரிக்காவின் இஸ்லாமிய எதிர்ப்பானது அமெரிக்காவின்வல்லரசுநிலையைக் காவுகொண்டுவிடும்.

இந்தியாவும், பாகிஸ்தானுக்கு எதிரான விரோதத்தைக் கையாள அமெரிக்காவின் இஸ்லாமியத் தீவிரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகளைச் சாதாகமாகப் பயன்படுத்துகின்றது. இதனாலேயே காஷ்மீர் மக்கள் மீதான அடக்குமுறைகள் தொடக்கின்றன.

இலங்கை அரசும் தனது தளர்ந்த பொருளாதாரத்தை மீட்க அமெரிக்கா ஆதரவு பெற பொதுபலசேனா போன்ற பௌத்த தீவிரவாதத்தின் மூலம் இஸ்லாமிய எதிர்ப்புப் பிரசாரங்களை மேற்கொள்கின்றது.

இவை குறித்த விழிப்பு மக்களுக்கு மட்டுமல்ல, சர்வதேச இராஜதந்திரிகளுக்கும்ஏற்பட்டாலேயேஅநியாயமான மனித அவலங்களைத் தவிர்க்கலாம்.

**யாழ்.ஆனந்தன்**

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 10


யாழ். முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெறும்.

அதிபர் ஆர்.பசுபதீஸ்வரன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சர் கே.சர்வேஸ்வரன், சிறப்பு விருந்தினராக யாழ்.கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.அகிலதாஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

## குடமுருட்டிக் குளத்தின் கீழ் 321 ஏக்கர் நெற்பயிர் வறட்சியால் அழிவடைந்துசெல்லும் நிலையில்!

கிளிநொச்சி, ஜூலை 10

கிளிநொச்சி – பூநகரி குடமுருட்டிக் குளத்தின் கீழ் வறட்சியால் அழிவடைந்து கொண்டிருக்கும் 321 ஏக்கர் நெற்பயிரைக் காப்பதற்காக அக்கராயன் குளத்தில் இருந்து நீரைப் பெற்றுக் கொள்வது என்று ஆலோசிக்கப்பட்ட போதிலும் அந்தத் திட்டம் கைவிடப்பட்டுள்ளது.



ஏற்கனவே குடமுருட்டிக் குளம் நீர் மட்டம் குறைவடைந்து சிறுபோக நெற்செய்கைக்கு நீர் விநியோகம் மேற்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் அக்கராயன் குளத்தில் இருந்து நீரைப் பெற முடியுமா என்று ஆலோசிக்கப்பட்ட போதிலும் அக்கராயன் குளத்தின் கீழான சிறுபோக நெற் செய்கைக்கு மட்டுமே நீர் போதுமான நிலையில் உள்ளதால் குடமுருட்டிக் குளத்துக்கு மேலதிக நீர் வழங்க முடியாத நிலை இருப் பதாகத் தெரிவிக்கப்பட்டுள் ளது.

அதனால் அத்திட்டம் கைவிடப்பட்டுள்ளது.

இதேவேளை, குடமுருட்டிக் குளத்தின் கீழான நெற்செய்கைக்கான நீர் விநியோகம் மேற்கொள்ள முடியாத நிலையில் மழை வீழ்ச்சியில் தான் சிறு போகத்தை காப்பாற்றுவதற்கான வழிகள் உள்ளன என்றும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

## வீட்டின் கூரை மீது பாய்ந்த ஓட்டோ பெண் ஒருவர் படுகாயம்!

ஹட்டனில்ஓட்டோ ஒன்று வீதியை விட்டு விலகி வீட்டின் கூரை மீது பாய்ந்து விபத்துக்குள்ளானதில் பெண் ஒருவர் படுகாயமடைந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்து நேற்று காலை இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். விபத்தில் படுகாயமடைந்த 56 வயதுடைய பெண் டிக்கோயா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஹட்டனிலிருந்து காமினிபுர பகுதியை நோக்கிச் சென்ற ஓட்டோ காமினிபுர பிரதேச நுழைவாயிலில் சுமார் 35அடி பள்ளத்தில் உள்ள வீடு ஒன்றின் கூரையின் மீது பாய்ந்து விபத்துக்குள்ளாகி உள்ளது.

இந்த விபத்தில் சாரதிக்கு எவ்விதபாதிப்புகளும்இல்லை. வீட்டுக்கு சிறிதளவுசேதம்ஏற்பட்டுள்ளது.விபத்து தொடர்பில் ஹட்டன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# அ.தி.மு.க. அணி இணைப்பு: இரு தரப்பும் ரகசியப் பேச்சு!

சென்னை, ஜூலை 10

அ.தி.மு.கவின் இரண்டு அணிகளும் தனித்துச் செயற்படப் போகின்றோம் என அறிவித்தாலும், இரு அணியினரும் ரகசியப் பேச்சில் ஈடுபட்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இது தினகரன் தரப்பிடம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

அ.தி.மு.க. இணைப்புத் தொடர்பான பேச்சைத் தொடக்குவதற்கு சசிகலா குடும்பத்தினரைக் கட்சியில் இருந்து விலக்க வேண்டும் மற்றும் ஜெயலலிதா, மறைவு தொடர்பான சி.பி.ஐ. விசாரணைக்கு அரசு பரிந்துரை செய்ய வேண்டும் என்பன போன்ற நிபந்தனைகள் பன்னீர் அணி தரப்பில் விதிக்கப்பட்டன.



தினகரன் தரப்பு அதிர்ச்சி

இவை வெளிப்படையான நிபந்தனைகள். இதேநேரம், முதல்வர் மற்றும் பொதுச் செயலர் பதவிகளைப் பன்னீர் அணிக்கு ஒதுக்க வேண்டும் என்பது ரகசிய நிபந்தனையாக இருந்தது. இதில், எதையும் பழனி அணியினர் ஏற்கவில்லை. இதனால், பேச்சு முயற்சி தோல்வி அடைந்தது.

இந்த நிலையில், முதல்வர் பழனிச்சாமி அணியினருக்கும் தினகரனுக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது.

எனவே, பன்னீர் அணியினரை இணைத்துக் கொண்டு சசிகலா குடும்பத்தை முற்றிலும் விலக்கும் முடிவுக்குப் பழனிச்சாமி தரப்பினர் வந்தனர். எனவே, பன்னீர் அணியினருடன் மீள ரகசியப் பேச்சை தொடக்கி உள்ளனர்.

இது தொடர்பாகப் பன்னீர் அணியிலும் குழப்பம் ஏற்பட்டுள்ளது. முதல்வர் பழனிச்சாமி அணியிலும் பன்னீர் அணியிலும் இரு அணிகள் இணைந்தால் தங்களுக்கு கிடைக்கும் முக்கியத்துவம் குறைந்து விடுமோ என்ற அச்சம் சிலருக்கு ஏற்பட்டுள்ளது.

அவர்கள், பேச்சுக்கு முட்டுக்கட்டை போட்டு வருகின்றனர். இதனால், பேச்சு முழுமை பெறுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

இதற்கிடையில், இரு அணியினரும் இணைப்பு பேச்சை நடத்துகின்றமை தினகரன் தரப்பினரிடம், அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

இரு அணிகளும் இணைந்தால், தங்களுக்கு சிக்கல் ஏற்படும் என்பதால், அவர்கள் இரு அணியினரின் நடவடிக்கைகளையும் உன்னிப்பாகக் கண்காணித்தபடி உள்ளனர். (ச)

## இந்தியாவின் முதல் பாரம்பரிய நகராக அகமதாபாத்!

இந்தியாவின் முதல் பாரம்பரிய நகராக அகமதாபாத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

போலந்தில் நடைபெற்ற யுனெஸ்கோ உலக பாரம்பரிய குழுவின் 41 ஆவது கூட்டத் தொடர் இடம்பெற்றது இதன்போது, துருக்கி, போர்த்துக்கல், தென் கொரியா, ஸிம்பாப்வே, கியூபா உள்ளிட்ட 20 நாடு கள் இந்தியாவின் முதல் பாரம்பரிய நகராமாக அகமதாபாத்தை அறிவிப்பதற்குப் பரிந்துரை செய்திருந்தன. இந்த நிலையில் மத ஒருங்கிணைப்புக்கு எடுத்துக் காட்டாக அமையும் அகமதாபாத் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இதன்மூலம் உலக பாரம்பரிய நகரங்களின் பட்டியலில் அகமதாபாத் 287 ஆவது இடத்தை பெற்றுள்ளது.

11ஆம்நூற்றாண்டில் நிறுவப்பட்ட அகமதாபாத், இந்தியாவின் தொல்பொருள் ஆய்வு மையத்தால் பாதுகாக்கப்பட்ட 36 கட்டமைப்புக்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. மேலும், பாரம்பரியகட்டடக்கலையின் பிரகாரம் கட்டப்பட்ட நூற்றுக்கணக்கான கட்டடங்களும் இங்கு உள்ளன.

# தமிழக மீனவர்கள் வாழ்வாதாரத்தை இலங்கை அரசின் சட்டம் பறிக்கிறது!

சென்னை, ஜூலை 10

இலங்கை அரசின் சட்டம் தமிழக மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பறிக்கிறது. இந்தச் சட்டத்தைத் திரும்பப் பெற மத்திய - மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- தி.மு.க. செயல்தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான மு.க.ஸ்டாலின் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கை கடற்படையின் அட்டூழியம் மற்றும் மத்திய அரசின் பாராமுகம் என்பனவற்றால் தமிழக மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், இலங்கை அரசு கடுமையான தண்டனைப் பிரிவுகள் கொண்ட ஒரு சட்டத்தை அந்த நாட்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியிருக்கின்றமை அதிர்ச்சியளிக்கிறது.

அவர்கள் தமிழக மீனவர்களின் பாரம்பரியமான மீன்பிடித்தொழிலை அறவே ஒழித்துக் கட்டும் நோக்கத்தில் செயற்படுகின்றனர்.



குற்றச்சாட்டுகிறார் ஸ்டாலின்

இந்தச் சட்டம் தமிழகத்துக்கு மட்டுமின்றி, இந்தியாவின் மீன் ஏற்று மதிக் கொள்கைகளுக்கும் குந்தகம் விளைவிக்கும் வகையில் அமைந்திருக்கிறது.

இலங்கை அரசு , இந் தியா எங்கள் நட்பு நாடு என்று கூறிக்கொண்டே இந்திய மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பறிக்கும் வகையில் 50 ஆயிரம் ரூபாஅபராதம், 2 வருடங்கள் சிறைத் தண்டனை மற்றும் படகுப் பறிமுதல் என்று மிகக் கடுமையான தண்டனைகளைக் கொண்டு வந்திருக்கிறது. இதுதான் நட்பு நாட்டுக்கு இலக்கணம்?

இலங்கை அரசு ஆழ்ந்து யோசிக்கும் அளவுக்கான ஓர் அழுத்தத்தை தூதரக ரீதியாகவோ, பிரதமர் மட்டத்திலோ மத்திய அரசு கொடுக்க வேண்டும். இது காலத்தின் கட்டாயமாகிறது. அந்த அழுத்தம் கொடுப்பதற்கான உரிய நடவடிக்கைகளை அ.தி.மு.க. அரசும் உடனடியாக முன்னெடுக்க வேண்டும். -என்றார். (ச)

## 3 கோடியையும் தாண்டியது 'பிக் பாஸ்' பார்வையாளர்கள்!

சர்வதேச அளவில் மிகவும் பிரசித்தி பெற்ற நிகழ்ச்சி பிக் பாஸ். தற்பொழுது இந்த நிகழ்ச்சியை விஜய் தொலைக் காட்சியில் நடிகர் கமல் ஹாசன் தொகுத்து வழங்குகிறார். இந்த நிகழ்ச்சி தற்போது 3 கோடியே 60 லட்சம் பார்வையாளர்களைப் பெற்றுள்ளது.

கடந்த இரண்டு வாரங்களாகச் சமூக வலைத்தளங்களில் பிக் பாஸ் தொடர்பான விவாதங்கள் அதிகமாக உள்ளன. இதனால், அந்த நிகழ்ச்சிக்குப் பார்வையாளர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. இது தொடர்பான 'ட்வீட்' ஒன்றை விஜய் தொலைக்காட்சி வெளியிட்டுள்ளது.

அதில், 'கமல் மற்றும் தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி. பிக் பாஸ் அற்புதமாகத் தொடங்கியுள்ளது. இது 3 கோடியே 60லட்சம்பார்வையாளர்களைப் பெற்றுள்ளது.' -என்றுள்ளது.

இதற்குப் பதிலளித்துள்ள கமல், 'என்வேலையைச் சுலபமாக்கிய விஜய் தொலைக்காட்சி நன்றி. இந்த நிகழ்ச்சியின் பார்வையாளர்கள்தான் பிக்பாஸ். அனைவருக்கும் நன்றி.' - என்று அவரும் தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளார். (ச)

## மாடுக்கு பதிலாக மகள்மார்;

இந்தியாவின் மத்திய பிரதேச மாநிலத்தில் மாடுகள் வாங்குவதற்குப் பணம் இல்லாமையால் தனது மகள்மாரின் உதவியுடன் ஏர் பூட்டி தந்தை ஒருவர் விவசாயம் செய்து வருகிறார்.

பயிர்ச்செய்கையின் போது அவரது இரண்டு மகள்களும் மாடுகள் போல ஏர்பூட்டி இழுக்கின்றமை மாநிலம் முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

மேற்படி 2 பெண்களும் எட்டாம் வகுப்பு வரை படித்துள்ள நிலையில், குடும்ப வறுமை காரணமாக படிப்பைக் கைவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் பருவ மழை பொய்த்து போயுள்ளது. இதனால், பெரும்பாலான மாநிலங்களின் விவசாயிகள் மிகவும் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இதனால், விவசாயப் பொருள்களுக்கு உரிய விலை கிடைக்காமையால் விவசாயிகள் வறுமையின்பிடியில் தவித்து வருகின்றனர். (ச)

விவசாயியின் பரிதாபம்!



## ஜாரவா பழங்குடியினரின் நிர்வாணக் காட்சிகளை 'யூ டியூப்பில்' இருந்து நீக்குமாறு கோரிக்கை!

அந்தமானில் வசிக்கும் ஜாரவா பழங்குடி இன மக்களுடைய காணொலிக் காட்சிகளை அகற்றும்படி யூ டியூப் (youtube) இணையதளத்துக்கு இந்திய அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

அந்தமானில் ஜாரவா பழங்குடி இனமக்கள் இன்னமும் வாழ்ந்து வருகிறார்கள். வெளியுலகத் தொடர்புகள் இன்றி வாழும் அவர்கள் பெரும்பாலும் நிர்வாணமாகவே இருப்பார்கள்.

அவர்கள் நடமாடும் காணொலிக் காட்சிகள் பல யூ டியூப் இணையதளத்தில் உள்ளன. இந்த காணொலிக் காட்சிகளை யூ டியூப் நிறுவனம் நீக்க வேண்டும் என இந்திய அரசு கூறியுள்ளது. (ச)

# அகதிகள் படகு கவிழ்ந்து விபத்து: லிபியாவில் 35 பேர் உயிரிழப்பு!





காரபுல்லி,ஜூலை 10 லிபியாவில் அகதிகளை ஏற்றி வந்த படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில், 35 பேர் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

திரிபோலியில் இருந்து சுமார் 60 கிலோ மீற்றர் தொலைவில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. இதன்போது, படகில் பயணித்த 85 பேர் மீட்கப்பட்டுள்ளனர்.

வளைகுடா நாடுகளில் இருந்து உள்நாட்டுப் போர் மற்றும் தீவிரவாத அச்சுறுத்தல் காரணமாக பலர் அகதிகளாக ஐரோப்பிய நாடுகளுக்கு செல்கின்றனர். இவர்கள் மத்திய தரைக்கடலைக் கடந்து செல்வதற்கு முக்கிய இடமாக லிபியா உள்ளது. லிபியாவில் இருந்து ஆள்கடத்தல் கும்பல்கள் மூலம் படகுகளில் பாதுகாப்பற்ற முறையில் இவர்கள் பயணம் செய்கின்றனர். சிறிய படகுகளில் அளவுக்கு அதிகமானோர் பயணம் மேற்கொள்கின்றமையால் கடலில் படகு கவிழ்ந்து விபத்து ஏற்படுவது தொடர் கதையாக உள்ளது.

மீட்கப்பட்ட அகதிகள் நைஜீரியா, செனகல், கேமரூன், ஐவரி கோஸ்ட், கானா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிய வந்துள்ளது. (ச)

## உலகைப் பார்க்க வைத்த தன்னம்பிக்கை அழகி!



அமெரிக்காவைச் சேர்ந்த மெலானி கெய்டஸ் என்ற பெண் தன் உடலில் எத்தனை பிரச்சினைகள் இருந்தாலும் அவற்றை எல்லாம் புறம் தள்ளி, உலகையே திரும்பிப் பார்க்க வைத்துள்ளார்.

அமெரிக்காவைச் சேர்ந்தவர் மெலானி கெய்டஸ்(வயது- 28). இவர் பிறக்கும் போதே எக்டோடெர்மல் டிஸ்பிளேசியா என்ற நோயால் பாதிக்கப்பட்டு பிறந்துள்ளார்.

இந்த நோய் ஏற்பட்டவர்களுக்கு முடி வளராது, நகம் வளராது, பற்கள் உடைந்து போகும், தோலில் துவாரங்கள் இருக்கா, இதனால் வியர்வை வெளியேறாது, அவர் தண்ணீரிலேயே இருக்க வேண்டும்.

இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள் வாழ்வதே மிகப் பெரும் சிரமம். அதையெல்லாம் வென்று சாதித்துள்ளார் மெலானி கெய்டஸ்.

இவர் சிறு வயதில் இருக்கும் போதே இந்த நோயின் தாக்கத்தால், 40 முறை அறுவைச் சிகிச்சைகள் செய்துள்ளார்.

இவர் நியூயோர்க்கில் உள்ள கல்லூரி ஒன்றில் கலை தொடர்பான படிப்பை மேற்கொண்டுள்ளார். அந்த நேரத்தில் மெலானி கெய்டஸ்க்கு புகைப்படம் ஒன்றுக்கு மொடலாக காட்சியளிக்கும் வாய்ப்பு வந்துள்ளது. இதைத் தொடர்ந்து இவர் மொடலிங் துறையில் தனக்கென்று தனி இடம் ஒன்றை பிடித்து விட்டார். மேலும் சர்வ தேசபெஷன் இதழ்களின் அட்டைப்படங்களிலும் மெலானி இடம்பெற்றுள்ளார். (ச)

## அணு ஆயுதப் போர் முனையாக தீபகற்பத்தை மாற்ற வேண்டாம்!

### அமெரிக்காவுக்கு வடகொரியா எச்சரிக்கை

பியாங்யாங், ஜூலை 10 கொரிய தீபகற்பப் பகுதியை அணு ஆயுதப் போர் முனையாக மாற்றிவிட வேண்டாம் .

-இவ்வாறு அமெரிக்கா மற்றும் தென் கொரியா ஆகிய நாடுகளுக்கு வடகொரியா நேற்று ஞாயிற்றுக்கிழமை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதுதொடர்பாக வட கொரிய அரசுக்குச் சொந்தமான 'ரோடாங்' நாளிதழில் 'வெடி மருந்து பீப்பாய்க்கு அருகே நெருப்போடு விளையாட வேண்டாம்' என்ற தலைப்பில் வெளியாகி உள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

''வட கொரியப் பகுதியில் அமெரிக்க இராணுவம் நிகழ்த்தியுள்ள ஆபத்தான அத்துமீறல், கொரிய தீபகற்பப் பகுதியை அணு ஆயுத போர் முனையமாக மாற்றும் நிலைக்குத் தள்ளிவிடும். போர்வெறி கொண்டவர்களால் கூட்டுப் பயிற்சி என்ற பெயரில் எமது நாட்டுக்கு எதிராகச் சதி செய்யப்படுகிறது.

"இதுபோன்ற செயற்பாடுகள் இந்த தீபகற்பத்தில் அணு ஆயுதப் போரைத் தூண்டிவிடும் முயற்சி ஆகும். இது ஒருதவறான கணிப்பு. இவ்வாறான செயற்பாடுகள் உலகப் போரின் தொடக்கமாக அமைந்து விடும்.'' -என்றுள்ளது.

ஐ.நா., அமெரிக்கா மற்றும் தென் கொரியா உள்ளிட்ட நாடுகளின் எதிர்ப்பை மீறி வட கொரியா தொடர்ந்தும் அணு ஆயுதச் சோதனை மற்றும் ஏவுகணைச் சோதனைகளை நடத்தி வருகிறது.

கடந்த 4ஆம் திகதி வடகொரியா கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைச் சோதனையை வெற்றிகரமாக நடத்தியது. அமெரிக்காவின் அலாஸ்கா பகுதியில் உள்ள இராணுவத் தளத்தைத் தாக்க எச்சரிக்கை விடுக்கும் விதமாக இந்தச் சோதனை அமைந்தது எனப் போர்க்கலை வல்லுநர்கள் கருதுகின்றனர்.

இதற்கிடையில், தென் கொரியாவில் அமெரிக்கா விமானப்படை கூட்டுப் போர் பயிற்சியில் ஈடுபட்டு வருகிறது. இந்தப் பயிற்சியில் தென் கொரியா, அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளின் விமானப் படைகள் ஈடுபட்டுள்ளன.

நேற்று முன்தினம் சனிக்கிழமை வடகொரியா எல்லையில் அமெரிக்காவின் அதிவேக 'பி-1 பி லோஞ்சர்ஸ்' ரகப் போர் விமானங்கள் தாழ்வாகப் பறந்து எச்சரிக்கை விடுத்தன. தென் கொரியாவின் குவாம் பகுதியில் உள்ள ஆன்டர்சன் விமானப்படை தளத்தில் இருந்து இந்தப் போர் விமானங்கள் பறந்து சென்றன.

அமெரிக்காவின் 'பி-1பி' லோஞ்சர் அதிவேக போர் விமானங்கள் நீண்ட தூரம் பறந்து சென்று 900 கிலோ எடையுள்ள அணு குண்டுகளை வீசும் திறன் கொண்டவை. இதன் மூலம் தாங்கள் எந்த விதத் தாக்குதலுக்கும் தயார் என வட கொரியாவுக்கு அமெரிக்கா மறைமுகமாக எச்சரிக்கை விடுத்துள்ளது. அமெரிக்காவின் இந்த அசத்தலான சாகசத்தைத் தொடர்ந்து கொரிய தீபகற்பத்தில் போர்ப் பதற்றம் நிலவுகிறது.

இந்த நிலையில், அமெரிக்காவின் இந்த அத்துமீறலுக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ள வட கொரியா, மேற்படி எச்சரிக்கையை விடுத்துள்ளது. (ச)

## ஐ.எஸ். பயங்கரவாதிகளிடம் இருந்து முற்றிலும் மீண்டது மொசூல் நகரம்

### ஈராக் பிரதமர் அதிகாரபூர்வ அறிவிப்பு

ஐ.எஸ். பயங்கரவாதிகளின் பிடியில் இருந்த மொசூல் நகரை ஈராக் இராணுவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை முற்றிலுமாக மீட்டது. இந்தத் தகவலை ஈராக் பிரதமர் அல்-அபாதி வெளியிட்டுள்ளார்.

ஈராக் நாட்டின் மிகப்பெரிய நகரங்களில் ஒன்றான மொசூல் டைக்ரிஸ் நதிக் கரையில் அமைந்துள்ளது. 15 லட்சத்துக்கும் அதிகமானோர் இங்கு வசித்து வருகின்றனர். இந்த நகரைச் சிரியாவில் ஆதிக்கம் செலுத்தி வரும் ஐ.எஸ். பயங்கரவாதிகள் 3 ஆண்டுகளுக்கு முன்பு கைப்பற்றினர்.

இதனைத் தொடர்ந்து , ஐ.எஸ். பயங்கரவாதிகள் மொசூல் நகரில் தங்களது இயக்கத்தினரை அதிக அளவில் குவித்தனர். சிரியாவின் சில பகுதிகளையும், ஈராக்கில் தாங்கள் கைப்பற்றிய மொசூல் நகரையும் இணைத்து அதைத் தனி நாடாகவும் அறிவித்தனர்.

இதை அடுத்து, கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் மொசூல் நகரை மீட்க அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படையினரின் உதவியுடன் தீவிரவாதத் தாக்குதலை ஈராக் இராணுவம் தொடங்கியது. இரு தரப்பினருக்கும் இடையே போர் உக்கிரம் அடைந்தமையால் உயிர் பிழைப்பதற்காக 9 லட்சம் மக்கள் வேறு இடங்களுக்கு புலம் பெயர்ந்தனர். ஆயிரக்கணக்கானோர் போரில் கொல்லப்பட்டனர்.

இந்த நிலையில், கடந்த சில வாரங்களாக ஈராக் இராணுத்தினர் கூட்டுப் படையினரின் உதவியுடன் மொசூல் நகரின் நாலாபுறத்தையும் சுற்றி வளைத்தனர். குறிப்பாக டைக்ரிஸ் நதியின் மேற்குக் கரைப் பகுதியில் இராணுவம் படைகளைக் குவித்தது.

இந்த நிலையில், ஈராக் இராணுவத்துக்கும், ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கும் இடையே நேற்றுமுன்தினம் சனிக்கிழமை உச்சக்கட்டப் போர் நடந்தது. இறுதியில் மொசூல் நகரை ஐ.எஸ். பயங்கரவாதிகளின் பிடியில் இருந்து இராணுவம் முற்றிலுமாக மீட்டது. (ச)

# இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் தேர்வு இன்று

ரவிசாஸ்திரி வீரர்களின் ஆதரவை பெற்றவர். மேலும் கோஹ்லியின் அறிவுரையின் பேரில் தான் அவர் விண்ணப்பம் செய்தார். இருவருக்கும் சுமுகமான உறவு இருக்கிறது. இதனால் ரவிசாஸ்திரிக்கு அதிகமான வாய்ப்பு உள்ளது. ஷேவாக் அதற்கு அடுத்த இடத்தில் உள்ளார்.




இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் பதவிக்கான நேர்காணல் மும்பையில் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறுகிறது.

இதில் புதிய பயிற்சியாளராக ரவி சாஸ்திரி தேர்வு செய்யப்பட அதிக வாய்ப்பு உள்ளது.

இந்திய கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளராக இருந்த கும்ப்ளே சம்பியன்ஸ் கிண்ண போட்டிக்குப் பிறகு விலகினார்.

அணித் தலைவர் விராட் கோஹ்லியுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் அவர் தனது பதவியை இராஜினாமாச் செய்தார். ஆனால், பயிற்சியாளர் பதவிக்கு அவர் மீண்டும் விண்ணப்பம் செய்யவில்லை.

வீரேந்தர் ஷேவாக், டாம் மோடி, லால்சந்த், ராஜ்பத், தோடா கணேஷ், ரிச்சர்டு லைபஸ் ஆகிய 5 பேர் முதலில் விண்ணப்பித்து இருந்தனர். அதைத் தொடர்ந்து, ரவி சாஸ்திரி, பில்சிம்மன்ஸ் பயிற்சியாளர் பதவிக்கு விண்ணப்பம் செய்தனர்.

முன்னாள் வீரர்களான டெண்டுல்கர், கங்குலி, வி.வி. எஸ்.லட்சுமண் ஆகிய 3 பேர் அடங்கிய குழு இத் தேர்வுக்கான நேர்காணலை இன்று நடத்துகிறது. தற்போது லண்டனில் உள்ள டெண்டுல்கர், 'வீடியோ கொன் பரன்ஸ்' மூலம் இதில் பங்கேற்பார்.

அணித்தலைவருக்கும் , பயிற்சியாளருக்கும் எந்தவிதக் கருத்து வேறுபாடும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை மிகவும் கவனமாக இருக்கிறது. இதனால் தான் பயிற்சியாளர் நியமனம் தொடர்பாக அணித் தலைவர் விராட் கோஹ்லியிடமும், வீரர்களிடமும் கருத்து கேட்கப்பட்டது.

ரவிசாஸ்திரி வீரர்களின் ஆதரவைப் பெற்றவர். மேலும் கோஹ்லியின் அறிவுரையின் பேரில் தான் அவர் விண்ணப்பம் செய்தார். இருவருக்கும் சுமூகமான உறவு இருக்கிறது. இதனால் ரவிசாஸ்திரிக்கு அதிகமான வாய்ப்பு உள்ளது. ஷேவாக் அதற்கு அடுத்த இடத்தில் உள்ளார்.

ரவிசாஸ்திரி பயிற்சியாளர் பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு முன்பு வரை ஷேவாக், டாம் மோடி இடையே தான் இந்தப் பதவிக்கான கடும் போட்டி நிலவியது என்பது குறிப்பிடத் தக்கது.

## ரவி சாஸ்திரி பெரும்பாலும் தேர்வாக வாய்ப்பு






# தென்னாபிரிக்க வீரர் ரபடாவுக்கு ஒரு டெஸ்டில் விளையாடத் தடை!

## இங்கிலாந்து வீரரைக் கெட்ட வார்த்தைகளால் திட்டியமையால்

இங்கிலாந்து- தென்னாபிரிக்கா அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் நடந்து வருகிறது.

இதில் முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்து வீரர் பென் ஸ்டோக்ஸ் (56 ஓட்டங்கள்) விக் கெட்டை தென்னாப் பிரிக்க அணியின் வேகப்பந்து வீச்சாளர் காஜிசோ ரபடா வீழ்த்தினார். பென் ஸ்டோக்ஸ் ஆட்டம் இழந்து வெளியேறிய போது ரபடா அவரைக் கெட்ட வார்த்தைகளால் திட்டினாராம்.

இது தொடர்பில் விசாரணை நடத்திய சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸில் (ஐ.சி.சி) ரபடா மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த தவறுக்காக ரபடாவுக்கு ஒரு தகுதி இழப்புப் புள்ளி வழங்கப்பட்டது. அத்துடன் போட்டி கட்டணத்தில் 15 சதவீதம் அபராதமாக விதிக்கப்பட்டது.

ஏற்கனவே கடந்த பெப்ரவரி மாதத்தில் கேப்டவுனில் நடந்த இலங்கைக்கு எதிரான ஒருநாள் போட்டியில் அந்த அணி வீரர் டிக்வெல்லாவுடன் மோதலில் ஈடுபட்டமைக்காக ரபடா 3 தகுதி இழப்பு புள்ளிகள் பெற்று இருந்தார்.

ஒரே வருடத்தில் வீரர் ஒருவர் 4 தகுதி இழப்பு புள்ளிகளால் பெற்றால் தானாகவே



அவர் ஒரு டெஸ்ட் போட்டியில் இருந்து இடைநீக்கம் செய்யப்படுவார்.

இதனால் நொட்டிங்காமில் எதிர்வரும் 14 ஆம் திகதி தொடங்கும் இங்கிலாந்துக்கு எதிரான 2 ஆவது டெஸ்ட் போட்டியில் ரபடா விளையாட முடியாது.

முதல் இன்னிங்ஸில் 3 விக்கெட்டுகள் வீழ்த்திய ரபடா, 2 ஆவது டெஸ்ட் போட்டியில் விளையாட முடியாமை தென்னாபிரிக்கா அணிக்குப் பின்னடைவாகக் கருதப்படுகிறது. (உ)

# விம்பிள்டன் கால் இறுதிக்கு ரோஜர் பெடரர் தகுதி

தனது எட்டாவது விம்பிள்டன் பட்டத்தைக் குறிவைத்து ஆடி வரும் ரோஜர் பெடரர் காலிறுதிக்குள் நுழைந்தார்.

அவர் ஜேர்மனியின் திறமையான ஆட்டக்காரரான மிஷா செவரேவ்வை 7:6(3), 6:4, 6:4 என்ற செட் கணக்கில் வென்றார். முப்பத்தி ஐந்து வயதாகும் பெடரர் வெற்றி பெற்றால் அதிக வயதில் பட்டம் வென்ற வீரராக இருப்பார். பெடரர் கடந்த மூன்று ஆட்டங்களிலும் ஒரு செட்டைக் கூட இழக்காமல் வென்று வருகிறார்.

உலகின் முப்பதாவது தர நிலை வீரராக இருக்கும் செவரேவ் இதுவரை நான்கு முறை பெடரருடன் விளையாடியுள்ளார்.

ஆனால், ஒருமுறை கூட வென்றதில்லை. செவரேவ் 18 முறை கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றுள்ள பெடரரை வெல்வதற்குக் கடும் முயற்சி செய்தாலும் முதல் செட்டில் ஒரு டை-பிரேக்கரை எதிர்கொண்டமையைத் தவிர நிலைத்து விளையாடிய பெடரர் அடுத்த இரண்டு செட்களில் பிரேக் பொயிண்ட்களை எடுத்து ஆட்டத்தை ஓர் ஏஸ் சர்வீசுடன் வென்றார்.



# வடமாகாண பாடசாலைகள் தட, களப் போட்டியில்

# யாழ். தொடர்ந்தும் முன்னிலை; போட்டி போடுகின்றது மன்னார்








வடமாகாணப் பாடசாலை களுக்கிடையிலான தட, களப் போட்டியின் 4 ஆம் நாளான நேற்றைய முடிவில் யாழ்ப்பாணக் கல்வி வலயம் 517 புள்ளிகளுடன் முன்னிலை வகிக்கின்றது. முதலிடத்தைப் பிடிப்பதற்கு மன்னார் கல்வி வலயமும் கடுமையாகப் போராடி வருகின்றது.

வடமாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில், 10 ஆவது மாகாண மட்ட தட,களப் போட்டிகள் கடந்த 6 ஆம் திகதி முதல் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட் டரங்கில் நடைபெற்று வருகின்றன.

இந்தத் தட, கள நிகழ்வுகளில் வடமாகாணத்தின் 12 கல்வி வலயங்களைச் சேர்ந்த வீர, வீராங்கனைகள் பங்குபற்றுகின்றனர். கடந்த 6 ஆம் திகதி முதல் 9 ஆம் திகதி வரையில் நடைபெற்ற போட்டிகளின் அடிப்படையில், 517 புள்ளிகளைப் பெற்று யாழ்ப்பாணக் கல்வி வலயம் முதலிடத்தில் உள்ளது.

489 புள்ளிகளைப் பெற்ற மன்னார் கல்வி வலயம் இரண்டாமிடத்தில் உள்ளது. மூன்றாமிடத்தில் 467 புள்ளிகளைப் பெற்ற வலிகாமம் கல்வி வலயம் உள்ளது.

தொடர்ந்து வந்த இடங்களில் முறையே வடமராட்சி (306), வவுனியா தெற்கு (192), கிளிநொச்சி (163), முல்லைத்தீவு (144), தென்மராட்சி (130), மடு (112), துணுக்காய் (99), தீவகம் (69), வவுனியா வடக்கு (20) ஆகியன உள்ளன.

தட, களப் போட்டிகளின் இறுதிநாள் இன்று திங்கட் கிழமை நடைபெறவுள்ளது. இறுதிநாள் நிகழ்வில் பிரதம அதிதியாக வட மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனும், சிறப்பு அதிதியாக வடமாகாண பிரதம செயலாளர் ஏ.பத்திநாதனும் கலந்துகொள்கின்றனர்.

## 9 சிக்ஸர்களை விளாசி அடித்து நியூஸிலாந்து வீராங்கனை சாதனை



நியூஸிலாந்து, ஜூலை 10

பெண்கள் உலகக் கிண்ணத்தில் பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் நியூஸிலாந்து வீராங்கனை ஷோபி டெவைன் 9 சிக்ஸர்கள் விளாசி உலக சாதனைபடைத்துள்ளார்.

இங்கிலாந்தில் பெண் களுக்கான உலகக்கிண்ண 50 ஓவர் கிரிக்கெட் தொடர் நடை பெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற ஒரு லீக் ஆட் டத்தில் நியூஸிலாந்து - பாகிஸ்தான் அணிகள் பலப் பரீட்சை நடத்தின.

முதலில் துடுப்பெடுத் தாடிய பாகிஸ்தான் அணி நியூஸிலாந்தின் பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் 46.5 ஓவர்களில் 144 ஓட்டங்களில் சுருண்டது. பின்னர் 145 ஓட் டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் நியூஸிலாந்து அணி களம் இறங்கியது. தொடக்க வீராங்கனைகளாக எமி சட்டர்வையிட், ரசெல் பிரிஸ்ட் ஆகியோர் களம் இறங்கினார்கள்.

பிரிஸ்ட் 8 ஓட்டங்களை எடுத்த நிலையில், ஆட்டம் இழந்தார். அடுத்து ஷோபி டெவைன் களம் இறங்கினார். இவர் தொடக்கம் முதலே அதிரடியாக விளையாடி ஓட் டங்களைக் குவித்தார்.

27 பந்துகளில் 5 பவுண் டரி, 4 சிக்ஸருடன் அரைச் சதம் அடித்த டெவைன், 12 ஆவது ஓவரில் மூன்று சிக்ஸர் கள் விளாசினார். தொடர்ந்து விளையாடிய அவர், 41 பந்துகளைச் சந்தித்து 93 ஓட் டங்களை எடுத்திருக்கும்போது ஆட்டமிழந்தார். அவரது ஸ்கோரில் 7 பவுண்டரி, 9 சிக்ஸர்கள் அடங்கும்.

9 சிக்ஸர்கள் அடித்ததன் மூலம் ஒரு போட்டியில் அதிக சிக்ஸர்கள் விளாசிய முதல் வீராங்கனை என்ற சாத னையைப் படைத்தார். இவரது ஆட்டத்தால் நியூஸிலாந்து அணி 15 ஓவரிலேயே இலக்கை எட்டி 8 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்தியாவிற்கு எதிரான போட்டியில் தெனாபிரிக்க வீராங் கனை லைசல் லீ 7 சிக்ஸர்கள் விளாசி 2 ஆவது இடத்தில் உள்ளார்.

## முதலாவது டெஸ்ட்டில் இங்கிலாந்து அணியிடம் 211 ஓட்டங்களால் தென்னாபிரிக்காதோல்வி

இங்கிலாந்து - தென்னா பிரிக்கா அணிகளுக்கு இடை யில் இங்கிலாந்தின் லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியின் நான்காம் நாளான நேற்று தென்னாபிரிக்காவை 211 ஓட் டங்களினால் வென்றது இங் கிலாந்து.

இந்த ஆட்டம் கடந்த வியாழ னன்றுஆரம்பமானது.நாணயச் சுழற்சியில்வென்றஇங்கிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடத் தீர் மானித்தது.

இங்கிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 458 ஓட்டங்க ளைப் பெற்றது. ரூட் 190 ஓட்டங்களையும், ஸ்டோக்ஸ்56 ஓட்டங்களையும், அலி 87 ஓட் டங்களையும், புரோட் ஆட்டமி ழக்காமல் 57 ஓட்டங்களையும் பெற்றனர்.

தென்னாபிரிக்கா அணியி னால் 361ஓட்டங்களையேபெற முடிந்தது. எல்கர் 54, அம்லா 29, பௌமா 59, புருண் 48, ரபடா 27, கொக் 51, பிலிண்டர் 52 ஓட்டங்களைப் பெற்றனர்.

நேற்று நான்காம் நாள் ஆட் டத்தின் போது இங்கிலாந்து தனது இரண்டாவது இன்னிங் ஸில் 233 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதன் மூலம் தென்னாபிரிக் காவுக்கு வெற்றி இலக்காக 331 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டன.

ஆனால் தென்னாபிரிக்க தனது இரண்டாது இன்னிங் ஸில் கடும் தடுமாற்றத்தை எதிர் கொண்டது.

நேற்று அது ஆக 119 ஓட் டங்கள் பெற்ற நிலையில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 211 ஓட்டங்களால் தோற்றது.

### மகளிர் உலகக் கிண்ணக் கிரிக்கெட்

## 4 தொடர் வெற்றிகளை ஈட்டிய இந்தியா தென்னாபிரிக்காவிடம் மோசமான தோல்வி

இங்கிலாந்து, ஜூலை 10

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் பெண்கள் உலகக் கிண்ணத் தொடரில் நேற்றைய லீக் ஆட்டத்தில் -

தென்னாபிரிக்காவிடம் இந்திய அணி படுதோல்வி அடைந்தது.

முன்னதாக நாணயச்சுழற் சியில் வென்ற இந்திய அணி, களத்தடுப்பைத் தேர்வு செய் தது. இதை அடுத்து, களமி றங்கிய தென்னாபிரிக்க அணி 50 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுகளை இழந்து 273 ஓட்டங்களைக் குவித்தது.

தென்னாபிரிக்க சார்பில் அதிகபட்சமாக லிஸ்லி லீ 65 பந்துகளில் 92 ஓட்டங்களைக் குவித்தார். அணித்தலைவி டேன் வான் நீகெர்க் 57 (66 பந்துகளில்) ஓட்டங்களை எடுத்தார். இந்தியா சார்பில் ஷிக்கா பாண்டே 3 விக்கெட் டுகளை வீழ்த்தினார். பிஸ்ட், கவுர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

274 ஓட்டங்களை எடுத் தால் வெற்றி எனக் களமிறங்கிய இந்திய அணியின் தொடக்க வீராங்கனைகள் நிதானமாக ஆட்டத்தைத் தொடங்க, மறு பக்கத்தில் விக்கெட்டும் சரிந்து வந்தது. தீப்தி ஷர்மா நிலைத்து நின்று 60 (111பந்துகளில்) ஓட்டங்களும், ஜூலான் கோஸ் வாமி 43 (79 பந்துகளில்) ஓட்டங்களும் குவித்தனர்.

அணித்தலைவி மித்தாலி ராஜ், கவுர், ஷிக்கா பாண்டே, பூனம் பாண்டே ஆகியோர் ஓட்டங்கள் ஏதுமின்றி வெளி யேற இந்திய அணி 46 ஓவர் களில் அனைத்து விக்கெட் டுகளையும் இழந்து 158 ஓட்டங்களை மட்டுமே எடுத் தது. இதனால்தென்னாபிரிக்க அணி 115 ஓட்ட வித்தியா சத்தில் அபார வெற்றி பெற் றது. தென்னாபிரிக்கா சார்பில் டேன் வான் நீகெர்க் 4 விக் கெட்டுகளை வீழ்த்தினார்.

தொடர்ச்சியாக 4 வெற்றி களைப் பெற்ற இந்திய அணி, இந்த உலகக் கிண்ண பருவகா லத்தில் முதல் தோல்வியைப் பதிவு செய்தது.

## மாகாநாயக்கர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சு.க.வின் பேச்சாளரும், இராஜாங்க அமைச்சருமான டிலான் பெரேரா இவ்வாறு தெரிவித்திருக்கின்றார். ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வி ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

தேர்தல் முறை மாற்றத்தின் ஊடாக அரசமைப்புத்திருத்தத்தை முன்னெடுக்கலாம் என சங்க பீடங்கள் கூறியுள்ளன. அதனைப்பயன்படுத்தி அந்தத் திருத்தங்களுக்குள் இனப் பிரச்சினைக்கான தீர்வையும் உள்ளடக்கி விட வேண்டும்.

"எனவே பந்து இப்போது சம்பந்தனின் களத்திற்குள்தான் உள்ளது. அவர் எப்படி அதனை விளையாடப் போகின்றார் என்பதே இங்கு முக்கியமான விடயமாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் அரசியல் தீர்வை சம்பந்தன் பெற்றுக்கொள்வாரா? அல்லது சர்வஜன வாக்கெடுப்புக் கோரிக்கையையும் பெற முடியாத நிலைமையை ஏற்படுத்துவாரா? சம்பந்தன் பந்தை எப்படி விளையாடப் போகின்றார் என்பதில்தான் அனைத்து விடயங்களும் தங்கியுள்ளன.

சம்பந்தன் காலத்திலேயே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வைக் காண வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம்.

எனவே தமிழர்களின் தலைவிதியை தீர்மானிக்கும் பொறுப்பு தற்போது சம்பந்தன் கைகளில்தான் உள்ளது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்க வேண்டும் என்ற கோரிக்கையை அவர் கைவிடுகின்றமையுடன் அரசமைப்பு மாற்றத்துக்கு சர்வஜன வாக்கெடுப்புத் தேவையில்லை என்ற நிலைப்பாட்டுக்கும் அவர் இறங்கி வரவேண்டும். அதன் மூலம் மகாநாயக்கர்களின் நிலைப்பாட்டை அவர் ஏற்றுக் கொள்ள முடியும் - இவ்வாறு அமைச்சர் டிலான் மேலும் தெரிவித்தார். (உ)

## 10 வருடங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ளுக்கான முன்னாள் பணிப்பாளரை நீக்குவதற்கான காரணமும், இடமாற்றம் தொடர்பான தீர்மானத்தை நடைமுறைப்படுத்தாமையே ஆகும் எனவும் அமைச்சர் கூறி யுள்ளார்.

ஒரே பாடசாலையில் பலவருடங்கள் சேவையாற்றும் ஆசிரியர்களினால் பாடசாலை நிர்வாகத்தைக் கொண்டு செல்ல பல்வேறு தடைகள் காணப்படு கின்றன என முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன எனவும், இதனாலேயே இத்தீர்மானத்தைத் துரிதப்படுத்தியுள்ளதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

தேசியப் பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகள் மாகாண அரசுகளின் நிர்வாகத்தில் வருவதால் மத்திய கல்வி அமைச்சின் உத்தரவு தேசிய பாடசாலைகளுக்கு மட் டுமே பொருந்தும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ)

## சவால்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தான் வெளியேறியிருக்கமாட்டார் என்றும் அவர் சொன்னார்.

முன்னைய அரசிலிருந்து வெளியேறி அந்த ஆட்சித் தலைமைக்கு எதிராகத் தேர்தலில் நின்றமை இத்தகைய சவால்களையும் விமர்சனங்களையும் எதிர்கொள்ளும் தைரியத்துடன்தான் என்றார் அவர்.

சவால்கள், விமர்சனங்களுக்குத் துணிச்சலுடன் முகம் கொடுத்து நாட்டுக்கும், மக்களுக்குமாக இந்த அரசின் பயணத்தைத் தாம் முன்னெடுத்துச் செல்கின்றோம் என்றும் அவர் கூறினார்.

நேற்று வெலிகந்தப் பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். (உ)

## உள்ளூராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சம்பந்தன், போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, மக்கள் விடுதலை முன்னணியின் பிமல் ரத்னாயக்க ஆகியோரும் கலந்துகொண்டுள்ளனர்.

இதில், அரசியல் கட்சிகளுக்குப் புறம்பாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய, சட்டமா அதிபர் ஜயந்த ஜயசூரிய ஆகியோரும் பங்கெடுத்துள்ளனர்.

இவ்வருடம் முடிவதற்குள் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடாத்த வேண்டுமாக இருந்தால், எதிர்வரும் செப்டம்பர் 30 ஆம் திகதிக்குள் உள்ளூராட்சி சபை தேர்தல் மறுசீரமைப்புச் சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றித் தருமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய இதன் போது வேண்டுகோள் விடுத்துள்ளார் என்றும் அறிய வந்தது.

இதற்கிடையில் –

நீண்டகாலமாக ஒத்திவைக்கப்பட்டுவரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் இவ்வருடம் நவம்பர் மாதத்தில் நடைபெறக் கூடிய சாத்தியங்கள் தென்படுகின்றன என அரசின் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ள புதிய தேர்தல் முறையின்கீழ் இந்தத் தேர்தல் நடத்தப்படும் எனவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தற்சமயம் 4 ஆயிரத்துக்கு சற்று அதிகமாகவுள்ள மக்கள் பிரதிநிதிகளின் எண்ணிக்கை எல்லை நிர்ணய அடிப்படையில் 8 ஆயிரமாக உயர்வடையும். எனினும், அந்த எண்ணிக்கையை 7 ஆயிரமாகக் குறைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதில் 25 வீதம் பெண்களுக்கு ஒதுக்கப்படும்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்பாளர் மனுக்கள் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 30ஆம் திகதி முதல் கோரப்படுமென மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா அண்மையில் விசேட வர்த்தமானி அறிவித்தலொன்றை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

## அடுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) உறுப்புரையின்படி ஜனாதிபதியொருவரின் உத்தியோகபூர்வப் பதவிக் காலம் ஐந்து வருடங்களாகும். அதன் 31(3)ஆம் உறுப்புரைப் படி ஜனாதிபதியொருவரின் பதவிக்காலம் முடிவடைவதற்கு ஒருமாதகாலத்துக்குக் குறையாததும் இரண்டு மாத காலத்துக்கு மேற்படாததுமான கால எல்லைக்குள் புதிய தேர்தல் நடத்தப்படவேண்டும்.

தற்போதைய ஜனாதிபதி 2015 ஜனவரி 8ஆம் திகதி பதவிப்பிரமாணம் செய்தார். அதன்படி அவரது ஐந்து வருடப் பதவிக்காலம் 2020 ஜனவரி 8இல் முடிவடைகிறது. அதனால் அடுத்த தேர்தல் 2019 நவம்பர் 8இற்கும் டிசம்பர் 8இற்கும் இடையில் நடைபெறவேண்டும். எனவே, 2020 வரை ஜனாதிபதித் தேர்தல் நடைபெறாது என அரசு பகிரங்கமாகக் கூறி வருவது அரசமைப்புக்கு முரணானது என அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (உ)

## இ.போ.ச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) எனவும் கூறப்படுகின்றது..

ஆரம்பத்தில் இருவருக்கும் கருத்து முரண்பாடு ஏற்பட்டது எனவும் அது பின்னர் கைகலப்பாக மாறியது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இருவருக்கும் இடையே ஏற்பட்ட மோதல் காரணமாக கண்டி வீதியில் 10 நிமிடங்கள் வரை போக்குவரத்துகள் ஸ்தம்பிதம் அடைந்தன. பின்னர் பொலிஸார் தலையிட்டு நிலைமையை சுமுகமாக்கினர். (ம)

## பிரிவினைக்கே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற உடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்–

"சிங்களமும் தமிழும் உத்தியோகபூர்வ மொழியாக இருக்க வேண்டும்.

"பொருளாதார அழிவு ஏற்படக் காரணம் மக்கள் மீதான போரே ஆகும்.

"தமிழ் மக்களின் பிரச்சினை உட்பட அனைத்துப் பிரச்சினைகளும் தீர்க்கப்பட வேண் டும். மக்கள் ஐக்கியமாக வாழ வேண்டும்.

"இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதாகச் சொன்ன அரசாங்கம் ஆட்சிக்கு வந்து இரண்டரை வருடங்களைக் கடத்திவிட்டது. அரசமைப்புக் கவுன்ஸில் எந்தத் திட்டத்தையும் இதுவரை முன்வைக்கவில்லை.

''பழைய அரசமைப்பில் உள்ள பௌத்தத்துக்கான அந்தஸ்து இல்லாமல் போய்விடும் என பௌத்தர்கள் கவலையடைந்துள்ளனர்.

''சிலரின் பொறுப்பற்ற செயற்பாடுகளினால், வெளிநாடுகள் எங்கள் நாட்டின் நீதி பரிபாலனம் முதல் அனைத்திலும் தலையீடு செய்யும் நிலை வந்துள்ளது.

"யுத்தத்தில் கொல்லப்பட்ட மக்கள் தொடர்பிலும் அரசாங்கம் மீதே குற்றம் சாட்டப்பட்டது.

"யுத்தத்தில் 7 ஆயிரம் மக்களே கொல்லப்பட்டனர் எனத் தகவல். ஆனால், தருஸ்மன்ஸ் அறிக்கையில் பொய்யான தகவல் வெளியாகின. அதே போன்றே காயப்பட்டவர்களின் எண்ணிக்கையையும் அதிகரித்துச் சொன்னார்கள். நாட்டில் உள்ள வைத்தியசாலைகளில் நோயாளர்களின் படுக்கையைக் கணக்கிட்டால் கூட அத்தனை பேர் காயத்துக்கு சிகிச்சை பெற்று இருக்க மாட்டார்கள். இவை எல்லாம் மிகைப்படுத்தப்பட்ட குற்றச்சாட்டுகளாகும்.

"யுத்தக் குற்றத்துக்கு தண்டனை கொடுக்கும் நோக்குடன் இருந்தமையால், நல்லிணக்கம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வில்லை. இந்தப் போக்கு மேலும் குரோதத்தையே வளர்க்கும்.

"யுத்த பிரதேசத்தில் இருந்து வெளியேறியவர்கள் எங்கே போனார்கள்? அவர்கள் சிங்கள மக்கள் வாழும் பகுதிக்கே சென்றார்கள். சிங்கள மக்கள் கொலை செய்பவர்கள் என்றால் அவர்கள் அங்கு சென்று இருப்பார்களா?

"யுத்த பிரதேசத்தில் இருந்து வெளியேறிய மக்கள் மீது புலிகள் துப்பாக்கியால் சுட்டார்கள். புலிகளின் இலக்குகளைத் தாக்க குறுந்தூர சுடுகலன்களையே பயன்படுத்தினோம். அதுவும் எதிரிகளை இலக்கு வைத்துத் தாக்கவே பயன்படுத்தினோம். பொதுமக்களைச் சுடப் பயன்படுத்தவில்லை.

''அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மனிதாபிமான செயற்பாடுகளை செய்திருந்தார்.

"யுத்த பிரதேசத்தில் இருந்த மக்களுக்கு உணவு, மருந்து வத்தை தொடர்ந்து வழங்கினோம். அவர்களின் சுகாதார நடவடிக்கையை தொடர்ந்து செய்தோம்.

"இங்கே தனிநாட்டு கோரிக்கை வலுப் பெறுகின்ற நிலையில், எவ்வாறு யாப்பு திருத்தத்தை முன்னெடுக்க போகிறார்கள்?

"எங்கள் தேசத்தில் சகல இன மக்களின் பிரச்சினைகளும் தீர்க்கப்பட வேண்டும்.

"வெளிநாட்டு பல்தேசிய கம்பனிகளுக்கு நாட்டை விற்கும் அளவுக்கு இந்த அரசாங்கம் பொருளாதார நெருக்கடிகளை சந்தித்துள்ளது. அந்நியர்கள் எமது சொத்தை சூறையாடுகின்றார்கள். மக்கள் பயன்படுத்தும் பொருள்களைத் தவிர துறைமுகங்கள், எண்ணெய்க் குதங்கள் என அனைத்தையும் வெளிநாடுகளுக்கு விற்கின்றனர்.

"அமெரிக்காவின் இராணுவ முகாமாக திருகோணமலை துறைமுகம் மாறியுள்ளது. பொருளாதாரத்தில் அமெரிக்கக் கம்பெனிகள் ஆக்கிரமித்துள்ளன. அதனூடாக, நாம் அமெரிக்காவின் காலனித்துவத்தின் கீழ் வந்துள்ளோம்.

"அந்நிய நலனுக்கு எதிராக, தமிழ் , சிங்கள, முஸ்லிம் என இன வேறுபாடின்றி போராட முன் வர வேண்டும்.

"இந்த அரசாங்கத்திடம் தெளிவான கொள்கை இல்லை. இன்று ஒரு திட்டம், நாளை ஒரு திட்டம் என இருப்பதனால், முதலீட்டாளர்கள் நாட்டில் முதலீடு செய்ய முன் வருகிறார்கள் இல்லை.

"83 ஜுலை தமிழ் மக்கள் மீதான வன்முறை மீண்டும் ஏற்படக்கூடாது. அதற்காகத் தேசிய இனப் பிரச்சினையை தீர்ப்பார்கள் என்றால் அதனையும் தீர்க்கவில்லை.

"ஜனநாயகத்தை மேம்படுத்த முயலாமல், தற்போது முஸ்லிம் மக்களுக்கு எதிரான வன்முறைகள் ஊடாக அவசர கால நிலைமையைக் கொண்டு வர முயல்கின்றார்கள்" – என்றார்.

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பல்கலைக்கழக மாணவர்கள் தாக்குதல் நடத்தினர் எனவும் இதனால் பஸ் சிறு சேதமடைந்ததுடன் அதில் பயணித்த சிலர் காயமடைந்துள்ளனர் எனவும் பூவரசங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியாவில் இருந்து நேற்று மாலை 5.30 மணி யளவில் செட்டிகுளம் நோக்கி பயணித்த பேருந்தில் மேற்படி பல்கலைக் கழக மாணவர்கள் இருவர் ஏறிப் பயணித்தனர். சற்றுத் தூரம் சென்றதும் அவர்களுக்கும் நடத்துநருக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டது.

இதையடுத்து பேருந்து பம்பைமடுவில் உள்ள வவுனியா வளாகத்திற்கு முன்பாக சென்ற போது வழிமறித்த சுமார் 40 வரையான மாணவர்கள் பேருந்து மீது தாக்குதல் நடத்தினர் என பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேருந்துச் சாரதி அங்கிருந்து பேருந்தை விரைவாகச் செலுத்தி பூவரசங்குளம் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்றார். அங்கு செய்யப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-100)

## மாகாண சபை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இந்த முடிவை அடுத்து –

எதிர்வரும் ஒக்ரோபரில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் அக்கட்சி குதிக்க இருக்கின்றது.

இந்த முடிவை ஒட்டி கஜேந்திரகுமார் நேற்று 'காலைக் கதிர்' இதழுக்குத் தெரிவித்தவை வருமாறு :-

"2013 இல் வடக்கு மகாண சபைத் தேர்தல் நடைபெற முன்னர் சிவில் சமூக அமையத்தின் ஏற்பாட்டில், மன்னாரில் ஆயர் முன்னிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றிருந்தது. அங்கு *'மாகாணசபைத் தேர்தல்களில் போட்டியிடவேண்டாம். அது தமிழ் மக்களின் அடிப்படைக் கொள்கைகளுக்கும், அபிலாஷைகளுக்கும் முரண்பாடாக அமையும்'* என நாம் கூறியிருந்தோம்.

பக்கம் 03 ≫

## வடமராட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) என்று குற்றம்சாட்டியே பொலிஸார் அவரைச் சுட்டுக் கொன்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் படுகொலையைத் தொடர்ந்து அப்பகுதியில் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையே முரண்பாடுகள் ஏற்பட்டன. பொலிஸாருக்கு எதிராக மக்கள் கொதித்தெழுந்தனர். அந்த மக்கள் பொலிஸாரின் ஜீப் மீது கல் வீச்சுத் தாக்குதலை மேற் கொண்டனர் என்றும் கூறப்பட்டது.

வடமராட்சி கிழக்கில், வல்லிபுரம் ஆழ்வார் ஆலயத்திற்குச் செல்லும் வீதியில் 6 ஆம் கட்டைப் பகுதியூடாக மணல் ஏற்றிச்சென்ற வாகனம் ஒன்றைத் தாங்கள் மறித்தபோது அது நிற்காமல்சென்றது எனவும் அதனாலேயே தாங்கள் துப்பாக்கிச் சூடு நடத்தினர் எனவும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை அடுத்து பிரதேச மக்கள் அங்கு குழுமினர். அவர்கள் பொலிஸார் மீது கடும் கோபமடைந்தவர்களாகக் காணப்பட்டனர். உயிரிழந்த இளைஞனின் சடலம் மந்திகை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் வைத்தியசாலைக்கு முன்பாகவும் மக்கள் குழுமினர்.

பருத்தித்துறைப் பொலிஸாரின் ஜீப் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்குச் சென்ற போது, ஆத்திரமடைந்தவர்களாக அங்கு நின்ற மக்கள் ஜீப் மீது கல்வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டனர்.

காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரஞ்சித் மாசிங்க, காங்கேசன்துறை, நெல்லியடி, வல்வெட்டித்துறை மற்றும் பருத்தித்துறை பொலிஸ் பொறுப்பதிகாரிகள் பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்டனர். துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட இடத்திற்கும் சென்று பார்வையிட்டனர்.

மேற்படி துப்பாக்கிச்சூட்டு சம்பவத்துடன் தொடர்புடையவர் எனக் கருதப்படும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் நெல்லியடியில் உள்ள வீட்டின் மீதும் நேற்றுக் கல் வீச்சுத் தாக்குதல் இடம்பெற்றது எனக் கூறப்படுகின்றது.

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் கடந்த ஒக்ரோபர் மாதம் கொக்குவில் குளப்பிட்டிச் சந்தியில் வைத்து பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்ட வழக்கு இதுவரை முடிவுக்கு வராத நிலையில், நேற்று மீண்டும் ஒரு சம்பவம் இடம்பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ம)

## சர்வாதிகார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஈ.பி.ஆர்.எல். எவ். கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார்.

கடந்த 16 வருடங்களாக தாங்கள் சம்பந்தனின் சர்வாதிகாரத்திற்குக் கீழ் இருந்துவிட்டார்கள் எனக் கவலை வெளியிட்ட அவர், சம்பந்தனுக்கு இராஜதந்திர ரீதியாகச் செயற்படத் தெரியவில்லை எனவும் அவர் தமிழ் மக்களைத் தவறாக வழிநடத்துகின்றார் எனவும் குற்றம் சுமத்தினார்.

கூட்டமைப்பிற்குள் ஐக்கியத்தை ஏற்படுத்த வேண்டும், கூட்டமைப்புக்கு ஒரு யாப்பு உருவாக்கப்படவேண்டும், கட்டமைப்புக்கள் மற்றும் கொள்கைகள் சரியான வகையில் அமைய வேண்டும் என்பன போன்ற விடயங்களை உள்ளடக்கி இடம்பெற்ற பேச்சுக்களில் தாங்கள் பங்குபற்றினர் எனவும் இறுதியில் சம்பந்தனும் சுமந்திரனும் இணைந்து அதைக் குழப்பிவிட்ட

பக்கம் 03 ≫

## நாளை மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ் பிரதேசத்தில்** கல் வயல், மட்டுவில், சரசாலை, நுணாவில், பருத்தித்துறை வீதி, ஊரணி, வீரவாணி, விக்னேஸ்வரா (மட்டுவில் வீதி) ஆகிய இடங்களிலும் - **மன்னார் பிரதேசத்தில்** அத்திமோட்டை, கூராய், விடத்தல்தீவு கிராமம், தேவன்பிட்டி, வெள்ளாங்குளம், கள்ளியடி, இலுப்பைக்கடவை, மூன்றாம்பிட்டி, கணேசபுரம், வெள்ளாங்குளம் நீர்ப்பாசனத் திணைக்களம், விடத்தற்தீவு வைத்தியசாலை, கணேசபுரம் இராணுவ முகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் தெரிவித்துள்ளார். (இ)

# ஜனநாயகத்துக்கான ஆட்சி உருவாக்கப்பட வேண்டும்!

## ஜே.வி.பியின் பங்கு அதிகமாக உள்ளது என்கிறார் ரில்வின் சில்வா



கொழும்பு, ஜூலை 10

ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் மேம் படுத்தி, தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் மக்களால் உரு வாக்கப்பட்ட அரசு தனது இலக்கிலிருந்து மாறி விட்டது என்று மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) பொதுச் செய லாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

இந்த அரசு தற்போது பல மானது அல்ல என்பதுடன், அரசை மக்களால் இலகுவாக வீழ்த்த முடியும் என்று அவர் மேலும் கூறினார்.

'நாட்டின் சமகால அரசியல் நெருக்கடியும், விவசாயம் மற்றும் பொருளாதார வீழ்ச்சியும், மக்களின் நிலைப்பாடுகளும்' எனும் தொனிப்பொருளில் மக்கள் சந்திப்பு, சம்மாந்துறையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டபோதே, அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டை ஆட்சி செய்த எந்த அரசும் பொருளாதாரக் கொள்கைகளை உருவாக்க வில்லை. முன்னர் இந்த நாட்டை ஆட்சி செய்த அரசுகளைப் போன்று, தற் போதைய அரசுக்கும் பொருளாதாரக் கொள்கை இல்லை.

பொருளாதாரத்தை வளர்ச்சியடைச் செய்து மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டிய அரசு இப்போது வரிச் சுமையை மக்கள் தலையில் ஏற்றியுள்ளது. மக்களின் வருமானத்தை விட, வரி விதிப்பு அதிகமாகக் காணப்படுகின்றது. இதனால், இந்த நாட்டு மக்கள் தமது வாழ்க்கையைக் கொண்டு செல்வதில் தினமும் கஷ்டத்தை அனுபவிக்கின்றனர்.

தற்போதைய அரசு ஆட்சிக்கு வந்து இரண்டு வருடங்கள் கடந்துள்ள போதிலும், மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் எவையும் இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை.

மேலும், நாட்டில் இனவாதம் தலைதூக்க ஆரம்பித்துள்ளது. இனவாதத்தால் நாம் இழந்தவை அதிகமாகும். இந்த அனுபவங்கள் எமக்கு நன்றாகவே உள்ளன.

எனவே, இந்த நாட்டில் அரசியல் மாற்றத்தைக் கொண்டு வரவும் நாட்டைப் புதிய பாதையில் கொண்டு செல்லவும் மக்கள் முன்வர வேண்டும். இனிமேல் உண்மையான ஆட்சி மற்றும் ஜனநாயகத்துக்கான ஆட்சி உருவாக்கப்பட வேண்டும். இதில் மக்கள் விடுதலை முன்னணியின் பங்கு மிக அதிகமாக உள்ளது.

நாட்டை மோசடிகளிலிருந்து பாதுகாக்கவும் மூவின மக்களின் உரிமை மற்றும் சுதந்திரத்தைப் பாதுகாக்கவும் ஜனநாயகத்தை உருவாக்கவும் மக்கள் விடுதலை முன்னணியால் மட்டுமே முடியும். எனவே, எதிர் காலத்தில் மக்கள் தமது தெரிவைச் சரியாகப் பயன்படுத்தி சரியான முடிவு எடுக்க வேண்டும்.-என்றார். (எ)

## விசாரணைகளில் தாமதம் குறித்து அமைச்சு கவனம் செலுத்த வேண்டும்

### வலியுறுத்துகிறது பொலிஸ் ஆணைக்குழு

கொழும்பு, ஜூலை 10

பொலிஸாரால் கையாளப் படும் சில விசாரணைகளில் காணப்படும் தாமதங்கள் தொடர்பில் சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சு விசேட கவனம் செலுத்த வேண்டும் என்று தேசிய பொலிஸ் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

பொலிஸ் விசாரணைகளில் தலையிடுவதற்கான அதிகாரம் தமக்கு இல்லை என்று பொலிஸ் ஆணைக் குழுவின் செயலாளர் என்.பீ.சி ஆரியதாச குரே குறிப்பிட்டுள்ளார்.

விசாரணைகள் தாமதமடைகின்றமை தொடர்பில் முறைப்பாடு செய்யப்படுமாயின், அது தொடர்பில் பொலிஸ் ஆணைக் குழு விசாரணை செய்யும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சட்டம் மற்றும் ஒழுங்கை நடைமுறைப்படுத்தும் போது பொலிஸ் அதிகாரிகள் நியாயமற்ற முறையில் செயற் பட்டிருந்தால், அதனால் பாதிக் கப்பட்டநபர் பொலிஸ் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்யலாம் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.



வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத் தேர்த் திருவிழா பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ வெள்ளிக்கிழமை சிறப்புற நடைபெற்றது.

## நாடுமுழுவதும் 80 ஆயிரம்பேர் டெங்கால் பாதிப்பு

நாட்டில் தற்போது 80 ஆயிரம் பேர் வரை டெங்கு தொற்று காரணமாக பாதிக் கப்பட்டுள்ளனர் என்று தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தப் பிரிவின் பொது சுகாதார நிபுணத்துவ மருத்துவர் பிரஷலா சமரவீர மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டின் 11 மாவட்டங்களில் அதிகளவில் டெங்கு தொற்று அபாயம் இருக்கின்றது.

இலங்கை பொது சுகாதார பரிசோதகர்களின் சங்கம் வெளியிட்டுள்ள தகவல்களின் படி, டெங்கு தொற்று பரவுதலைக் கட்டுப்படுத்துவதற்காக நாட்டில் முறையான கழிவகற்றல் முகாமைத்துவ கட்டமைப்பு ஒன்று நிறுவப் பட வேண்டும்.-என்றார்.

## புலம்பெயர் தமிழரின் விருப்பத்துக்கு அமைவாகவே உத்தேச அரசமைப்பு

### இவ்வாறு கூறுகிறார் திலும் அமுனுகம



கொழும்பு, ஜூலை 10

புலம்பெயர் தமிழர்களின் விருப்பத்துக்கு அமையவே புதிய உத்தேச அரசமைப்பு ஏற்படுத்தப்படவுள்ளது என கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் நாட்டில் மாற்றம் ஒன்றைக் கொண்டுவர அரசு முயற்சிக்கின்றது எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசின் செயற்பாடுகள் மக்களை அதிருப்தியில் ஆழ்த்தியுள்ளன. சர்வதேசத்தின் ஆதரவும் குறைந்துள்ளது.

அரசால் தேர்தல் ஒன்றை நடத்த முடியாமல் உள்ளது. தேரர்களின் மத்தியில் மோதல் நிலை உருவாகியுள்ளது.

இதேவேளை, மேற்குலக நாடுகளுக்கு அடி பணிந்தே இலங்கை செயற்படுகின்றது.

இந்தநிலையில் புலம்பெயர் தமிழர்களின் விருப்பத்துக்கு அமையவே புதிய அரசமைப்பு உருவாக்கப்பட உள்ளது.-என்றார்.


## சீனப் பிரஜை கைது

வீசா அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமான முறையில் நாட்டில் தங்கியிருந்த சீனநாட்டு பிரஜை ஒருவரை பொலிஸார் நேற்றுக் காலை கைது செய்துள்ளனர்.

46 வயதுடைய ஒருவரையே பொலிஸார் கைது செய்துள்ளனர். அவரை கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் தாங்கள் முன்னிலைப்படுத்தவுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## குருபூசை

ஸ்ரீ சிவகுருநாத குருபீட மகாதேவா சுவாமிகள் ஆச்சிரம ஸ்ரீமத் இராமலிங்கம் சுவாமிகளின் வருடாந்த குருபூசை (ஆனித்திருவோணம்) நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை இல.18 குமாரசாமி வீதி, கந்தர்மடத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சிவகுருநாத பீடத்தில் இடம்பெறவுள்ளது. (இ)








பாரதீய ஜனதா கட்சியின் தமிழ் மாநில கிளைத் தலைவர் தமிழிசை சௌந்தரராஜன், நேற்று முன்தினம் கொழும்பில் தமிழ் முற்போக்கு கூட்டணியினரை சந்தித்தபோது எடுக்கப்பட்ட படங்கள். படத்தில் தமிழிசை சௌந்தரராஜனுடன், கூட்டணித் தலைவர் அமைச்சர் மனோ கணேசன், பிரதித் தலைவர் அமைச்சர் பழனி திகாம்பரம், அரவிந்தகுமார் எம்.பி., திலகராஜ் எம்.பி., மாகாண சபை உறுப்பினர்களான குருசாமி, சரஸ்வதி, உதயகுமார், ஜெயகுமார் ஆகியோர் உட்படப் பலர் காணப்படுகின்றனர்.

# மரியாதையின் நிமித்தம்தான் விக்கியை சந்தித்துப் பேசினாராம் தமிழிசை

## உள்நோக்கம் எதுவுமில்லை என்றும் கூறுகிறார்



வடக்கு மாகாண முதலமைச்சர் க.வீ.விக்னேஸ்வரனை, தான் மரியாதையின் நிமித்தமே சந்தித்தார் என பாரதீய ஜனதா கட்சியின் தமிழக மாநிலத் தலைவர் தமிழிசை சௌந்தரராஜன் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள அவர், கொழும்பு ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய நேர்காணலிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

'மிகப்பெரிய திட்டத்தோடு நான் இலங்கை வரவில்லை. இங்கே வந்தபின்பு அவர்கள் எல்லாம் என்னை சந்திக்க விரும்பியமையால் நான் சந்திக்க முயற்சி செய்தேன். வடக்கு முதலமைச்சர் க.வீ.விக்னேஸ்வரனை நான் மரியாதையின் நிமித்தம் தான் சந்தித்துள்ளேன்.

அரசியல் பொருளாதாரத்துடன் அதிகாரத்தினுடன் கூடிய வாழ்வாதாரம் இலங்கைத் தமிழ் மக்களுக்குக் கிடைக்க வேண்டும் என்பதில் பாரதீய ஜனதா கட்சி உறுதியாக இருக்கிறது. தமிழ் மக்களுக்கு எந்தச் சட்டம் ஏற்புடையதாக இருக்குமோ அதற்கு உதவியாக எமது கட்சி இருக்கும். அரசியல் அதிகாரம் இலங்கைத் தமிழர்களுக்கு கிடைக்க வேண்டும் என்பதில் பாரதீய ஜனதா கட்சி ஒரு நல்ல நோக்கத்தில் செயலாற்றி வருகிறது.

பிரதமர் மோடி பதவியேற்றதில் இருந்து இரண்டு முறை ஒரு நாட்டிற்கு பயணம் செய்திருக்கிறார் என்றால், அது இலங்கைக்குத் தான். அதேபோன்று ஒரு நாட்டின் இருவேறு பகுதிகளைச் சென்று பார்த்திருக்கின்றார் எனில் அதுவும் இலங்கையில் தான். வடக்கு மாகாணத்திற்கும் சென்றிருக்கிறார். மலையகத் தமிழ் மக்களையும் சென்று பார்வையிட்டிருக்கிறார்.

தமிழர்கள் மீது அக்கறை கொண்ட பிரதமர் இந்தியாவில் இருக்கிறார் என்ற நம்பிக்கையை இது ஏற்படுத்தியிருக்கிறது. அந்த நம்பிக்கைக்கு ஏற்றவாறு பிரதமரும் நடந்து கொள்வார். பாரதீய ஜனதா கட்சியின் ஆட்சியும் நடந்து கொள்ளும். நாங்களும் நடந்து கொள்வோம். அது குறித்து தமிழ் மக்களுக்கு என்னால் உறுதி கூறமுடியும் என்றார்.

# நவாலியில் படுகொலை செய்யப்பட்டோருக்கு நேற்று அஞ்சலி, ஆத்மசாந்திப் பிரார்த்தனை









யாழ்ப்பாணம், ஜூலை 10

நவாலிப் படுகொலையின் 22 ஆவது ஆண்டு நினைவு அஞ்சலி நிகழ்வுகள் நேற்று நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயத்திலும் சின்னக்கதிர்காமம் முருகன் ஆலயத்திலும் இடம்பெற்றன.

நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயம் மற்றும் அதற்கு முன்பாக உள்ள சின்னக்கதிர்காமம் முருகன் ஆலயம் ஆகியவற்றின் மீது கடந்த 1995 ஆம் ஆண்டு விமானப் படையினர் நடத்திய மிலேச்சத்தனமான குண்டுவீச்சில் 147 அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

அவர்களை நினைவுகூர்ந்து நேற்றுக் காலை சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தில் அஞ்சலி வழிபாடுகள் இடம்பெற்றன. பங்குத் தந்தை வண.றோய் பேடினன் தலைமையில் இந்த அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது.

சின்னக்கதிர்காமம் ஆலயத்தில் நேற்று மாலை ஆத்மசாந்திப் பிரார்த்தனைகள் நடைபெற்றன. அகில இலங்கை சைவ மகா சபையின் ஏற்பாட்டில், ஆலய முதன்மைக்குரு மாரிமுத்து பத்மநாதன் தலைமையில் இந்தப் பிரார்த்தனை இடம்பெற்றது.

மேற்படி அஞ்சலி நிகழ்வுகளில் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்துகொண்டு தமது உறவுகளை நினைந்து மனமுருகி அஞ்சலித்தனர். (ம)

CNR Courier & Cargo எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை
உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.
CNR World Wide Express
இல.401. மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு:
021 5674145
077 2931362
follow us : cnrworldwideexpress

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.07.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.